# 2018

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயற்திறன் அறிக்கை
# Annual Performance Report

**කම්කරු දෙපාර්තමේන්තුව**
**தொழில் திணைக்களம்**
**Department of Labour**



# வருடாந்த செயற்திறன் அறிக்கை
# தொழில் திணைக்களம்
# 2018

# உள்ளடக்கம்

**பக்க எண்**


| | |
|---|---|
| தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் கௌரவ அமைச்சரின் செய்தி | i |
| தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு செயலாளரின் செய்தி | ii |
| தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி | iii |
| **1. தொழில் திணைக்களம்** | **1** |
| 1.1 அறிமுகம் | 1 |
| 1.1.1 நோக்கங்கள் | 1 |
| 1.1.2 பொறுப்பு | 1 |
| 1.2 திணைக்களத்தின் அமைப்பின் கட்டமைப்பு | |
| 1.3 திணைக்களத்தின் பணிக்குழு | 2 |
| 1.4 விசேட செயற்பாடுகள் - 2018 | 3 |
| 1.5 சர்வதேச தொடர்பு | 6 |
| 1.5.1 சர்வதேச தொழிலாளர் அமைப்பு | 9 |
| **2. பொருளாதார அபிவிருத்தியை விருத்தி செய்வதற்காக கைத்தொழில் சமாதானத்தினை பாதுகாத்தல்.** | **13** |
| 2.1 அறிமுகம் | 13 |
| 2.2 பொறுப்பு | 13 |
| **3 தொழிலாளர்களின் உரிமைகளை தரநிர்ணயம் செய்தல்** | 23 |
| 3.1 அறிமுகம் | 23 |
| 3.2 வினைப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் | 23 |
| 3.3 சட்டரீதியிலான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் | 23 |
| 3.4 நிறைவேற்றப்பட்ட விடயங்கள் - 2018 | 25 |
| **4 தொழிலாளர்களின் தொழில் சுகாதார பாதுகாப்பு மற்றும் விபத்துக்களற்ற வேலைச் சூழலை உறுதிப்படுத்தல்** | **28** |
| 4.1 தொழில் சுகாதார பாதுகாப்பு என உறுதிப்படுத்தல் | 28 |
| 4.1.1 அறிமுகம் | 28 |
| 4.1.2 பொறுப்புக்கள் | 28 |
| 4.1.3 தொழில் சுகாதாரப் பிரிவின் மூலம்நிறைவேற்றப்பட்ட விடயங்கள் - 2018 | 29 |
| 4.2 விபத்துகளற்ற வேலைச் சூழலை உறுதி செய்தல் | 30 |
| 4.2.1 அறிமுகம் | 30 |
| 4.2.2 பொறுப்பு | 30 |
| **5 பெண்கள்,இளம் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை ஒழித்தலும்** | **35** |
| 5.1 அறிமுகம் | 35 |
| 5.2 பொறுப்புக்கள் | 35 |
| 5.3 நடைமுறைப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் | 35 |
| 5.4 விடயங்களை நிறைவேற்றுதல் - 2018 | 36 |
| 5.5 செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் - 2018 | 39 |
| 5.6 சரியான நடைமுறை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தல் | 40 |
| **6 தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு** | **41** |
| 6.1 அறிமுகம் | 41 |
| 6.2 பொறுப்புக்கள் | 41 |
| 6.3 சேமலாப நிதி அபிவிருத்தி | 45 |
| 6.4 வேறு | 46 |
| **7 தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டரீதியிலான பாதுகாப்பு** | 47 |
| 7.1 அறிமுகம் | 47 |
| 7.2 பொறுப்பு | 47 |

**8 நிருவாகம்** 49
8.1 அறிமுகம் 49
8.2 பொறுப்பு 49

**9 நிதி முகாமைத்துவம் 53**
9.1 அறிமுகம் 53
9.2 பொறுப்புக்கள் 53

**10 புள்ளி விபரச் செயற்பாடுகள் 55**
10.1 அறிமுகம் 55
10.2 பொறுப்பு 55

**11 திணைக்கள செயற்பாடுகளை மேற்பார்வை மூலம் இலக்குகளை நோக்கி நடைமுறைப்படுத்தல் மற்றும் மனிதவள அபிவிருத்தி 57**
11.1 அறிமுகம் 57
11.2 திணைக்களத்தின் விடயங்களை மேற்பார்வை செய்வதன் மூலம் இலக்கை நோக்கி நடைமுறைப்படுத்தல் 57
11.3 மனிதவள அபிவிருத்தி 59

**12 சேவையை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் 65**

**13 உள்ளக கணக்காய்வு 66**

# அட்டவணைகள்

**பக்க எண்**


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | திணைக்கள பணிக்குழு மாற்றம் - 2018 | 03 |
| அட்டவணை 1.2 | திணைக்கள பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018 | 03 |
| அட்டவணை 1.3 | பிரதான காரியாலயத்தின் பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018 | 03 |
| அட்டவணை 1.4 | திணைக்கள பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018 | 03 |
| அட்டவணை 1.5 | வலய தொழில் பணிக்குழு சிரேஷ்ட மட்டம் - 2018 | 04 |
| அட்டவணை 1.6 | மாவட்ட தொழில் காரியாலய பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி- 2018 | 04 |
| அட்டவணை 1.7 | உப தொழில் காரியாலய பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018 | 04 |
| அட்டவணை 1.8 | மாவட்ட தொழிற்சாலை பரிசோதக பொறியியலாளர் காரியாலயபணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018 | 04 |
| அட்டவணை 1.9 | தொழில் திணைக்கள பகுதித் தலைவர்கள் - 2018 | 06 |
| அட்டவணை 1.10 | சர்வதேச தொழில் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்பட்டநிகழ்ச்சித் திட்டம் | 11 |
| அட்டவணை 1.11 | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் திணைக்கள ஊழியர்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சிகள். | 12 |
| அட்டவணை 2.1 | மனித வள அபிவிருத்தி பிரிவு மூலம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்- 2018 | 14 |
| அட்டவணை 2.2 | வேலைநிறுத்தம் தொடர்பாக அறிக்கை இடப்பட்ட தரவுகள் - 2018 | 18 |
| அட்டவணை 3.1 | 10000/--ரூபாவிற்கு குறைந்த சம்பளத்தினை சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைகளுக்கு குறைந்த சம்பளத்தினை இற்றைப்படுத்தல் - 2018 | 26 |
| அட்டவணை 3.2 | அனுமதி / சட்டரீதியான வரைவிலக்கணம் / சட்டரீதியான செல்லுபடித்தன்மையினை பரிசோதித்தல் - 2018 | 26 |
| அட்டவணை 3.3 | சம்பள கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானம் தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்தல் - 2018 | 27 |
| அட்டவணை 3.4 | புதிய நியமனங்கள் பெற்ற தொழில் உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்ற மீளாய்வு மற்றும் தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் - 2018 | 27 |
| அட்டவணை 4.1 | செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றம்- 2018 | 29 |
| அட்டவணை 4.2 | விபத்து நுண்ணாய்வு செய்தல்- 2018 | 31 |
| அட்டவணை 4.3 | அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் - உற்பத்தி துறையின்படி | 32 |
| அட்டவணை 4.4 | அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் - பிற | 33 |
| அட்டவணை 4.5 | உத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 33 |
| அட்டவணை 4.6 | கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்புக்களை நிறைவேற்றும் முன்னேற்றம் - 2018 | 34 |
| அட்டவணை 5.1 | வேலை செய்யும் பெண்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களைஅமுல்படுத்தல் -2018 | 37 |
| அட்டவணை 5.2 | நீதிமன்ற செயற்பாடுகள் எடுத்தல் - 2018 | 37 |
| அட்டவணை 5.3 | செயற்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் முன்னேற்றம்-2018 | 39 |
| அட்டவணை 5.4 | “சிறந்த நடைமுறை” நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் | 40 |
| அட்டவணை 6.1 | சந்தாப்பணத்தினை அறவீடு செய்வதற்காக பதிவு செய்தல் - 2018 | 42 |
| அட்டவணை 6.2 | சந்தாப்பணத்தினை சரியான வகையில் செலுத்தாத தொழில் வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்ட அறிவித்தல்கள் - 2018 | 42 |
| அட்டவணை 6.3 | கடந்த மூன்று வருட காலத்தினுள் ஊழியர் சேமலாப நிதியின் பயன்களைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை | 44 |
| அட்டவணை 6.4 | அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதி மேற்பார்வை முன்னேற்றம் - 2018 | 45 |
| அட்டவணை 6.5 | ஊழியல் சேமலாப நிதி சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெளிவூட்டுவதற்காக நடை பெற்ற நடமாடும் சேவையின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவு படுத்துவதற்கு நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 46 |
| அட்டவணை 7.1 | நீதிமன்றங்களின் படி வழக்குகளின் செயற்திறன் - 2018 | 48 |
| அட்டவணை 7.2 | நீதிவான் நீதிமன்ற வழக்குகள் - 2018 | 48 |
| அட்டவணை 9.1 | 2018ம் வருடத்தின் திணைக்களத்தின் முழுநிதி முன்னேற்றம் | 53 |
| அட்டவணை 9.2 | 2018 வருடத்தின் மூலதனச் செலவுகள் வகைப்படுத்தல | 53 |
| அட்டவணை 9.3 | 2018 வருடத்தில் மீண்டுவரும் செலவுகள் வகைப்படுத்தல் | 54 |
| அட்டவணை 10.1 | நிறைவு செய்யப்பட்ட விடயங்கள் - 2018 | 56 |
| அட்டவணை 11.1 | நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2018 | 64 |
| அட்டவணை 11.2 | கொள்ளளவு விருத்தி செயற்பாட்டுக்காக 2018.12.31ம் திகதியில் முழுச்செலவும் - 2018 | 64 |
| அட்டவணை 11.3 | வலைத்தளத்தின் ஊடாக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைகள் -2018 | 65 |

# வரைபடங்கள்


| | | பக்க எண் |
|---|---|---|
| வரைபடம் 2.1 | சேவை நிலையங்கள் (தொழில்) விசாரணை - 2018 | 15 |
| வரைபடம் 2.2 | தொழில் உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் நடத்திய சேவை நிலையங்கள் (தொழிலாளர்) விசாரணைகளின் பொதுவாக எண்ணிக்கை - 2018 | 16 |
| வரைபடம் 2.3 | ஊழியர் உரிமைகளை மீறுதல் சம்மந்தமாக முறைப்பாடுகள் கிடைப்பதும்மற்றும் தீர்த்தலும் -2018 | 17 |
| வரைபடம் 2.4 | கைத்தொழில் பிணக்குகள் சம்மந்தமான முறைப்பாடுகள் கிடைத்ப்பதும் தீர்த்து வைத்தலும் - 2018 | 18 |
| வரைபடம் 2.5 | கூட்டு ஒப்பந்தம் பதிவு செய்தல் - 2018 | 19 |
| வரைபடம் 2.6. | கைத்தொழில் நீதிமன்ற செயற்பாடுகள் - 2016 2017, 2018 | 19 |
| வரைபடம் 2.7 | பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தலும் தீர்த்துவைத்தலும் - 2018 | 20 |
| வரைபடம் 2.8 | தொழிற்சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் இரத்துச் செய்தலும் - 2018 | 21 |
| வரைபடம் 2.9 | சிரேஷ்ட நுண்ணாய்வுச் செயற்பாடுகள் - 2018 | 22 |
| வரைபடம் 4.1 | கைத்தொழில் கட்டளைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நீதிமன்ற செயற்பாடுகள் - 2018 | 31 |
| வரைபடம் 6.1 | சந்தாப்பண பங்களிப்பின் முன்னேற்றம் | 43 |
| வரைபடம் 6.2 | கொடுப்பனவு விண்ணப்பங்கள் கிடைத்தல், தீர்மானித்தல், கடிதங்களை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் - 2018 | 45 |
| வரைபடம் 7.1 | சகல மாவட்ட காரியாலயங்களின் மூலமும் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் 2018 | 48 |


# புகைப்படங்கள்


| | | பக்க எண் |
|---|---|---|
| படம் 2.1 | அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் வழங்குநர் - ஊழியர்கள் உரையாடல் 2018 திணைக்கள உத்தியோகத்தர்கள் | 13 |
| படம் 2.2 | அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் தொழில் வழங்குநர் - ஊழியர்கள் உரையாடல் - 2018 சேவை வழங்குநர் ஊழியர்களின் பங்களிப்புடன் | 13 |
| படம் 2.3 | தொழில் ஆணையாளர் நாயகம் சபையில் உரையாற்றுகின்றார். | 14 |
| படம் 2.4 | அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் போட்டியில் முன்வைக்கப்பட்ட சித்திரங்களைப் பார்வையிட்ட போது | 14 |
| படம் 4.1 | 2018.11.16ம் திகதி தேயிலைத் தொழிற்சாலை ஊழியர்களுக்காக நுவரேலியா மாவட்ட செயலக காரியாலயத்தில் நடைபெற்ற செயலமர்வு | 32 |
| படம் 4.2 | 2018.05.24 ம் திகதி குருநாகல் தொழில் நுட்ப கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வு | 32 |
| படம் 5.1 | தென்னாபிரிக்காவின் பிரதி தொழில் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் சந்திப்பு | 38 |
| படம் 8.1 | பொலநறுவை மாவட்ட தொழில் காரியாலய கட்டிடம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் 2018.3.30ம் திகதி திறந்து வைக்கப்பட்டபோது | 50 |
| படம் 8.2 | தொழில் திணைக்களத்தினால் காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சி சிற்றறைகளின் நிழற் படங்கள் சில | 50 |
| படம் 8.3 | சேவை பெறுநர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் | 51 |
| படம் 8.4 | தொழில் அருங்காட்சியகம் | 52 |
| படம் 11.1 | திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள். | 60 |



## தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் கௌரவ அமைச்சரின் செய்தி

தொழில் திணைக்களத்தினால் 2018ம் வருடத்தினுள் திட்டமிடப்பட்டு சிறப்பாக நிறைவேற்றப்பட்ட சேவைகளை உள்ளடக்கிய செயற்திறன் அறிக்கைக்காக வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்தமையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தேசிய பொருளாதார விருத்தியினை முன்நோக்கி சிறந்த வேலைத்திட்ட சூழலை உருவாக்குவதற்காக பொறுப்புக் கூற வேண்டிய பிரதான அரச நிறுவனமாகிய தொழில் திணைக்களம், தற்போது கிரமமான முன்னேற்றதுடன் கூடிய நீண்ட பயணத்திற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. கடந்த வருடங்களைப் போல, 2018ம் வருடத்தினுள் தொழில் திணைக்களம் தமது சேவை பெறுநர்களுக்கு வினைத்திறமையுடன் கூடிய சேவைகளை வழங்குவதற்காக அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஊழியர், தொழில் வழங்குனர் இருசாரார் இடையே சமூக உரையாடல்களை விருத்தி செய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும். இந்த செயற்பாடு கைத்தொழில் பிணக்குகள் மற்றும் வேலை நிறுத்தங்களைக் குறைத்து, நாட்டினுள் தொழில் சமாதானத்தை பாதுகாப்பதற்கு காரணமாகியுள்ளது.

இதுவரையில் நடைமுறையில் உள்ள, காலத்திற்கு ஒவ்வாத, தொழில் சட்டத்தினை திருத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்வது சிறப்புக்குரியதாகும். கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சட்டம், மகப்பேற்று கட்டளைச் சட்டம் மற்றும் பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்மந்தமான சட்டத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தம், சேவையில்ஈடுபட்டுள்ள பெண்களுக்காக மிகச்சிறந்த வேலைச்சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்காகவும், பெண்களினதும் இளைஞர்களினதும் உரிமைகளை மேலும் பாதுகாக்கும் நோக்கத்துடனும் உள்ளது. இதன்படி, இலங்கையின் தொழிலாளர் உழைப்பினை சக்தி பெறச் செய்து பொருளாதார அபிவிருத்திற்கு திருப்திகரமான பங்குதாரர்கள் ஆக்குவதற்காக, சேவை நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒரு சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் மூலம் இந்நாட்டு ஊழியர் சமூகத்திற்கு தற்போதுள்ளதை விட கூடுதலான பயன்களை அனுபவிப்பதற்கு முடியுமாக இருக்கும்.

இந்த சகல விடயங்களையும் நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தொழில் ஆணையாளர் நாயகம் உட்பட பணிக்குழு சகலரினதும் சேவையினை பெரிதும் மதிப்பதோடு, அவர்களுக்காக எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரவிந்திர சமரவீர**
தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர்



## தொழில் மற்றும் தொழற் சங்க உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி

தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சின் கீழுள்ள பிரதானமான நிறுவனமாகிய தொழில் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கைக்காக செய்தி வழங்க கிடைத்தமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகளில் செல்வாக்கு செலுத்தும் தொழில் சட்டம் மற்றும் கட்டளைச் சட்டம் நடைமுறைப்படுத்துகின்ற தொழில் திணைக்களம், 2018ம் வருடத்திலும் சமூக கலந்துரையாடல், வளர்ச்சி,கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல், வேலை நிறுத்த வேளைகளில் தலையிட்டு ஊழியர், தொழில் வழங்குநர் இருசாராரிடையே இணக்கப்பாட்டை எட்ட வைத்தல், ஊழியர் சேமலாப நிதியினை அதிகரிக்கும் செயற்பாடுகள், ஊழியர்களின் தொழில் மற்றும் சுகாதார பாதுகாப்பை அதிகரித்தல் உள்ளடங்கலான திணைக்களத்துக்கு உள்ள சகல விடயங்களும் சிறப்பான முறையில் நிறைவேற்றி இருப்பது போற்றப்படத் தக்கதாகும்.

2016ம் வருடத்தில் திணைக்களத்தின் அமைப்பு மாற்றச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2018ம் வருடத்திலும் கூட அதனை தொடர்ச்சியாக முன் கொண்டு செல்வதற்கு முடிந்துள்ளது. அதன்படி, எஞ்சிய வருடங்களுக்குள் திணைக்களத்தினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மேலும் விருத்தியடையும் என எதிர்பார்க்க முடியும்.

திணைக்களத்தின் வளாகத்தினுள் நிர்மாணிக்கப்படுகின்ற ‘மெஹவர பியச’ கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளதோடு, உள்ளக வேலைப்பாடுகள் முடிவடைந்த பின்னர்,அடுத்த வருடத்தில் திறக்கப்பட உள்ளது. அதன்படி, சேவை பெறுநர்களுக்கு ஒரே கூரையின் கீழ் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் விருத்தி செய்யப்படும்.

தொழில் திணைக்களம் இலக்கினை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட தொழில் ஆணையாளர் நாயகம் உட்பட திணைக்களத்தின் சகல பணிக்குழுவினரதும் தத்தமது எதிர்கால நடவடிக்கைகளையும் திருப்திகரமாக செய்து கொள்ள முழு சக்தியும் தைரியமும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ் ஏ.என் சரணதிஸ்ஸ**
செயலாளர்
தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு



## தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி

2018ம் வருடத்தில் தொழில் திணைக்களத்திற்கு கிடைத்த மிகப்பாரிய வெற்றிகளின் சுருக்கமான, இந்த செயற்திறன் அறிக்கை மட்டற்ற மகிழ்ச்சியுடன் முன்வைக்கப்படுகிறது.

2018ம் வருடத்தில் நடைபெற்ற தொழில் விசாரணைகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தின் தன்மையும் முன்னேற்றகரமாக இருந்ததோடு, கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை தீர்த்து வைக்கும் செயற்பாடுகளும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளும் மிகச்சிறந்த வினைத்திறனுடன் நடத்தப்படுவதற்கு முடிந்துள்ளது.

2018ம் வருடத்தில் மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலயங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மிகச் சிறந்த முறைசார் நடைமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதன் மூலம் சகல தொழில் காரியாலயங்களினதும் திணைக்களத்தினதும் நோக்கத்தினை நிறைவேற்றுவதனை இலக்காக கொண்டு சரியான முறையில் நடாத்தப்பட்டது. 2017ம் வருடத்தில் ஆட்சேர்க்கப்பட்ட புதிய தொழில் உத்தியோகத்தர்கள் உட்பட சகல பணிக்குழு உறுப்பினர்களதும் சேவை, மிகவும் உச்ச பயன்மிக்கதாகவும், வினைத்திறன் கொண்டதாகவும் இருப்பதற்கு இது காரணியாகியுள்ளது.

ஊழியர், சேவை வழங்குநர் தொடர்பினை விருத்தி செய்தல், சமூக கலந்துரையாடல் விருத்தியின் மூலம் முடிந்துள்ளது. அதேபோன்று காலத்திற்கு ஒவ்வாத தொழில் கட்டளைச் சட்டம் சிலவற்றை திருத்துவதற்கும், அதனூடாக ஊழியர்கள் இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் திருப்திகரமான பங்குதாரர்களாக ஆக்குவதற்குமாக, ஒரு சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கிகாரத்தின் பேரில் புதிய சட்டத்தினை தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க கிடைத்தமை ஊழியர் தரப்பினருக்கு எடுக்கப்பட்ட ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை ஆகும்.

2018ம் வருடத்தினுள் மேற்கூறிய செயற்திறனை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு செய்த தொழில் திணைக்களத்தின் சகல பணிக்குழுவினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன். அதேபோன்று தொழில் திணைக்களத்திற்கு சரியான பாதையைக் காட்டுவதோடு, தைரியத்தை தருகின்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த செயற்திறன் அறிக்கை முன்னைய வருடங்களை விட மாற்றமான நவீன முறையில் முன்வைப்பதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட திட்டமிடல், ஆராய்ச்சி பயிற்சி மற்றும் வெளியீட்டு பிரிவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ. விமலவீர**
தொழில் ஆணையாளர் நாயகம்
தொழில் திணைக்களம்.

# 1. தொழில் திணைக்களம்.

## 1.1. அறிமுகம்

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் கீழ் செயல்படும் தொழில் திணைக்களம் அரச சார்பற்ற மற்றும் தனியார் பிரிவில் சேவை புரிகின்ற தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை உறுதி செய்வதும், சமூகப் பாதுகாப்பினை வளர்ப்பதற்குமாக செயல்படும் அரச நிறுவனமாகும். இதன் விடயங்கள் மத்திய அரசின் கீழ் நிருவகிக்கப்படுவதனால், திணைக்களத்தினால் அதற்குரிய கட்டளைச்சட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் தேவையான அபிவிருத்திகளைச் செய்வதற்காக, நாடாளாவிய ரீதியில் தொழில் காரியாலயங்களை நடைமுறைப்படுத்துவதோடு, வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது.

இந்த திணைக்களம் தற்போது தனியார் மற்றும் அரசசார்பற்ற பிரிவின் ஊழியர் சமூகத்தினது தொழில் பாதுகாப்பினையும், நலன்புரி சம்மந்தமாகவும் செயல்படுகின்ற முக்கியமான நிறுவனமானாலும், 1923 ஆண்டின் 1ம் இலக்க இந்தியாவின்புலம்பெயர் தொழிலாளர் கட்டளைச்சட்டத்தின் படி, 1923ம் வருடத்தில் இலங்கையில் தோட்டங்களில் சேவை புரிவதற்காக பிரித்தானிய இனத்தவர்களால் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களுக்கு நலன்புரி வழங்கும் நோக்குடன் முதன் முதலில் ஸ்தாபிக்கப்பட்டது.

### நோக்கு

"சர்வதேச போட்டித் தன்மையான பொருளாதாரத்திற்கான நிரந்தர கைத்தொழில் சமாதானமுடைய ஒரு நாடு"

### பணிக்கூற்று

"தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்து, உறுதி செய்யப்பட்ட கைத்தொழில் சமாதானத்தோடு கூடிய சிறந்த வேலை சூழலினுள் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்"


### 1.1.1 நோக்கங்கள்

- அரச பகுதியளவு மற்றும் தனியார் பிரிவில் சேவை நிறுவனங்களுள் நிரந்தரமான கைத்தொழில் சமாதானத்தை உறுதி செய்தல்.
- சிறந்த வேலைச்சூழலை உருவாக்குவதும் மற்றும் தொழிலாளர் தரத்தினை தயாரிப்பதன் மூலம் தொழிலாளர்களின் சேவை நிலைமைகளை முன்னேற்றுவதும்.
- தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- பெண்களினதும் இளைஞர்களினதும் தொழில் ரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்தலும் சிறுவர் தொழிலை நீக்குதலும்.
- தொழிலாளர்களின் சுகாதார நிலமைகளுக்கு சிறந்ததும் மற்றும் விபத்துக்கள் அற்ற வேலைச் சூழலை நிர்மாணித்தலும்.

### 1.1.2 பொறுப்புக்கள்

- நிறுவனங்களில் சேவை வழங்குனர் தொழிலாளர்களிடையே உரையாடல்களை விருத்தி செய்தல்.
- தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் சமூக கலந்துரையாடல்களை விருத்தி செய்வதன் மூலம் கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதை தவிர்த்தல் மற்றும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைத்தல்.
- விளைதிறனுள்ள நிறுவனங்களின் விசாரணைகள் (தொழிலாளர்களின் விசாரணைகள்) நடத்துதல் அதற்காக திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அவசியமான அறிவினை நிரந்தரமாக இற்றைப்படுத்துவதன் மூலம், ஊழியர்களின் நியதிச்சட்ட உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- ஊழியர்கள் தொழில் வழங்குனர்கள் இருசாராரிடையேயும் தொழில் சட்டங்கள் சம்பந்தமாக இருக்கும் அறிவினையும் தெளிவினையும் விருத்தி செய்வதன் மூலம் தொழில் சமாதானத்தை உறுதி செய்தல்.
- தேசிய பொருளாதார கட்டமைப்பின் மாற்றங்களின் படி,உசிதமான தொழிலாளர் தரங்கள், சர்வதேச தரங்களின் படி தயாரித்தலும் செயற்பாட்டினை மேம்படுத்தலும்.
- ஊழியர் சேமலாப நிதியை சரியான முறையில் நிர்வகித்தலினூடாக, உரிமையாளர்களுக்கு நன்மைகளை உரியமுறையில் வழங்குதலை உறுதி செய்தலும், அதேபோன்று அனுமதிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு முறைகள் சம்பந்தமான நிர்வாகமும்.
- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமான தொழில் சட்டங்கள் உட்பட சகல தொழில் சட்டங்களும்ஆக்கபூர்வமான செயற்பாட்டினை மேம்படுத்தல்.
- வேலை தளத்தினுள் சுகாதார பாதுகாப்பு உள்ளதெனவும், விபத்துக்கள் அற்ற இடமெனவும் தொழிலாளர்களுக்கு விளக்குதல் மற்றும்சுகாதார பாதுகாப்பு உள்ளதென்பதை உறுதிப்படுத்துதலும், விபத்துக்கள் அற்ற இடமென்பதையும் உறுதிப்படுத்துதலும்.
- மேற்கூறிய விடயங்களுக்காக தீர்மானமெடுக்க அவசியமான புள்ளிவிபர தரவுகளை சேகரித்தலும் மற்றும் பகுப்பாய்வும்.
- இலங்கையினால் கையொப்பமிட்டு ஏற்கப்பட்டுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கையினை சட்டத்தினாலும் இணக்கப்பாட்டுடனும்அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- சிறுவர் தொழில் மற்றும் ஆபத்துக்குரிய சிறுவர் தொழில்களை ஒழிப்பதுக்கு நடவடிக்கையினை மேற் கொள்ளல்.

## 1.2 திணைக்களத்தின் அமைப்புப் படம்



## 1.3 திணைக்களத்தின் பணிக்குழு

| | |
|---|---|
| வருட ஆரம்பத்திலிருந்த முழு ஊழியர்களின் எண்ணிக்கை | 2495 |
| திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு | 50 |
| ஒன்றிணைக்கப்பட்ட சேவையில் புதிய நியமனங்களாக திணைக்களத்திற்கு வருகை | 275 |
| இடமாற்றம் (சரியான) | -15 |
| பல காரணங்களினால் திணைக்கள பணிக்குழுவிற்கு சேர்த்துக்கொள்ளல் | 1 |
| ஓய்வு பெறுதல் | -56 |
| வேறு காரணங்களால் திணைக்கள பணிக்குழுவிலிருந்து நீக்குதல் | -81 |
| வருட இறுதியில் முழு ஊழியர் எண்ணிக்கை | 2669 |

அட்டவணை 1.1 - திணைக்கள பணிக்குழு மாற்றம் - 2018

| பதவி | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31 திகதியில் இருந்த எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 210 | 150 | 60 |
| மூன்றாம் மட்டம் | 668 | 514 | 154 |
| இரண்டாம் மட்டம் | 1762 | 1553 | 209 |
| ஆரம்ப மட்டம் | 489 | 452 | 37 |
| மொத்தம் | 3129 | 2669 | 460 |

அட்டவணை 1.2 - திணைக்கள பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018

திணைக்களத்தின் அங்கிகரிக்கப்பட்ட முழு பணிக்குழு 3129 ஆவதோடு அதில் 15□ சதவிகிதம் வெற்றிடமாக நிலவுகிறது. அதேபோன்று சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25□ சதவீதமாகும். அதன்படி, மேற்பார்வை மற்றும் நடைமுறை மட்டத்தில் அனேகமான வெற்றிடங்களின் எண்ணிக்கை இருப்பதால், திணைக்களத்தில் புதுமையினை உருவாக்கவும் மற்றும் நடைமுறைப்படுத்தவும் சாத்தியமற்றதாக உள்ளது.

பிரிவுகளின் படியும் மற்றும் தொழில் காரியாலயங்களின் படியும் பணிக்குழு சம்பந்தமான விபரங்கள் கீழே உள்ள வகையில் உள்ளது.

| பதவிகள் | அனுமதி க்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31 ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றி டங்கள் |
|---|---|---|---|
| தொழில் ஆணையாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (இலங்கை நிர்வாக சேவை) | 1 | 1 | 0 |
| மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (திணைக்களம்) | 1 | 0 | 1 |
| மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (பொறியியல்) | 1 | 0 | 1 |

அட்டவணை 1.3 - பிரதான காரியாலயத்தின் பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி 2018

| பதவிகள் | அனுமதி க்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31 ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றி டங்கள |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் * | 33 | 16 | 17 |
| மூன்றாம் நிலை மட்டம் ** | 44 | 23 | 21 |
| இரண்டாம் நிலை மட்டம் *** | 138 | 119 | 19 |
| ஆரம்ப மட்டம் **** | 42 | 37 | 7 |
| மொத்தம் | 257 | 195 | 64 |

அட்டவணை 1.4 பிரதான காரியாலயத்தின் பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31 ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் * | 109 | 64 | 47 |
| மூன்றாம் நிலை மட்டம் ** | 118 | 50 | 68 |
| இரண்டாம் நிலை மட்டம் *** | 496 | 332 | 164 |
| ஆரம்ப மட்டம் **** | 139 | 133 | 6 |
| மொத்தம் | 862 | 579 | 285 |

அட்டவணை 1.5 வலய தொழில் காரியாலய பணிக்குழுவின் சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31 ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றிடங்கள |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் * | 40 | 35 | 5 |
| மூன்றாம் நிலை மட்டம் ** | 413 | 354 | 59 |
| இரண்டாம் நிலை மட்டம் *** | 944 | 914 | 33 |
| ஆரம்ப மட்டம் **** | 245 | 219 | 25 |
| மொத்தம் | 1642 | 1522 | 122 |

அட்டவணை 1.6 மாவட்ட தொழில் காரியாலய பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை மட்டம் ** | 77 | 67 | 10 |
| இரண்டாம் நிலை மட்டம் *** | 131 | 133 | -2 |
| ஆரம்ப மட்டம் **** | 34 | 40 | -6 |
| மொத்தம் | 242 | 240 | 2 |

அட்டவணை 1.7 உப தொழில் காரியாலய பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின்படி - 2018

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018.12.31ம் திகதி இருந்த எண்ணிக்கை | வெற்றிடங்கள |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் * | 20 | 20 | 0 |
| மூன்றாம் நிலை மட்டம் ** | 20 | 02 | 18 |
| இரண்டாம் நிலை மட்டம் *** | 40 | 34 | 6 |
| ஆரம்ப மட்டம் **** | 30 | 22 | 8 |
| மொத்தம் | 110 | 78 | 32 |

அட்டவணை 1.8 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியிலாளர் காரியாலய பணிக்குழு சிரேஷ்ட மட்டத்தின் படி - 2018

## குறிப்பு

### *சிரேஷ்ட மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்கள்

தொழில் ஆணையாளர் நாயகம், மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (இலங்கை நிர்வாக சபை), மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (திணை), மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (பொறியியலாளர்), வைத்திய உத்தியோகத்தர்,

வைத்திய உத்தியோகத்தர் (ஆராய்ச்சி), தொழில் ஆணையாளர் இலங்கை நிர்வாக சேவை, தொழில் ஆணையாளர் (திணை) தொழில் ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு ) மற்றும் பிரதான தொழிற்சாலை பரிசோதகர், பொறியிலாளர், (இலங்கை பொறியியலாளர் சேவை, தொழில் ஆணையாளர், (இலங்கை ஆய்வு சேவை) மற்றும் பிரதான தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் (இலங்கை பொறியியலாளர் சேவை) தொழில் ஆணையாளர் (இலங்கை பரிசோதனை சேவை) (இலங்கை வைத்திய சேவை), பிரதான கணக்காளர், பிரதான உள்ளக கணக்காய்வாளர், பிரதான சட்ட உத்தியோகத்தர் மற்றும் தொழில் ஆணையாளர், (சட்ட நடைமுறை) பிரதி தொழில் ஆணையாளர், இலங்கை நிர்வாக சபை, பிரதி தொழில் ஆணையாளார் (திணை) பிரதி தொழில் ஆணையாளர் மற்றும் உதவி தொழில் ஆணையாளர் (திணை) சட்ட உத்தியோகத்தர், உதவிப்பணிப்பாளர் - திட்டமிடல், நிபுணத்துவ தொழிற்சாலை பரிசோதகர் பொறியியலாளர் (மின்சார பாதுகாப்பு) விசேட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் (மிக கவனமான இயந்திரங்கள் பாதுகாப்பு) விசேட தொழிற்சாலை பரிசோதகர் பொறியியலாளர் (நிர்மாணிப்பு, பாதுகாப்பு) விசேட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் (இரசாயனம், இயந்திர பாதுகாப்பு) விசேட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர், மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர், சிவில் பொறியியலாளர் - இலங்கை பொறியிலாளர் சேவை, தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் (இலங்கை பொறியியலாளர் சேவை) இரசாயன பொறியியலாளர், சிரேஷ்ட பரிசோதனை உத்தியோகத்தர் - இலங்கை பரீட்சை சேவைகள், ஆராய்ச்சி உத்தியோகத்தர் இ.ப.சே. உதவிப்பணிப்பாளர் (இலங்கை. ச.தொ.ச)

## **மூன்றாம் நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்கள்

நூலகர் (விசேட தரம்), தொழிநுட்ப உத்தியோகத்தர் இ.தொ.சே. விசேட வகுப்பு, விரல் அடையாள பரிசோதனை உத்தியோகத்தர் (விசேட வகுப்பு) இ.தொ.நு.சே, தொழில் உத்தியோகத்தர், விசேட தரம், பதிவாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - ஆங்கிலம்), மொழிபெயர்ப்பாளர் (தமிழ் - ஆங்கிலம்) மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்), நிர்வாக உத்தியோகத்தர், தொழில் உத்தியோகத்தர்.

***இரண்டாம் நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்கள், மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்) தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் (மின்சாரம்) விரல் அடையாள பரிசோதனை உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர், கட்டட பரிசோதகர், திட்டமிடல் கலைஞர், நூலகர், முகாமைத்துவ உதவியாளர்சேவை, எழுது வினைஞர் (ஊழியர் சேமலாபநிதி) தட்டெழுத்தாளர், பொறுப்புத்தியோகத்தர், வதிவிட பெண் பொறுப்பாளர், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழிநுட்ப உதவியாளர், போக்குவரத்து உத்தியோகத்தர்.

****ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள்
சாரதிகள், மின்சார தொழிநுட்பவியலாளர், தச்சு தொழிநுட்ப உதவியாளர், குழாய் திருத்துனர், சுற்றுலா விடுதி பொறுப்பாளர், காரியாலய ஊழியர் சேவை,காவலாளி, லொறி சுத்திகரிப்பாளர்.

| | பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|---|
| 1 | தொழில் ஆணையாளர் நாயகம் | | திரு.ஏ.விமலவீர அவர்கள் |
| 2 | மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (பரிபாலனம்) | | திரு. சி.என். விதானாச்சி அவர்கள் |
| 3 | மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (திணைக்களம்) (பதில்) | | திரு.ஜனக பரணமான அவர்கள் |
| 4 | மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (பொறியியலாளர்) (பதில்) | | திரு. டபிள்யு. ஐ.சி.டி.ஆர். பெர்னாந்து அவர்கள் |
| 5 | கைத்தொழில் உறவுகள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. கே.டி. மனோஜ் பிரியந்த அவர்கள் |
| 6 | மனிதவள அபிவிருத்தி பிரிவு<br>(சமூக உரையாடல் வேலைத் தளப் அலகு) | தொழில் ஆணையாளர் | திரு. எல்.டி.சி. ஜயசீலி அவர்கள் |
| 7 | விஷேட விசாரணைப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திருமதி. என். ஜெகதீஸ்வரன் அவர்கள் |
| 8 | தொழில் தரநிர்ணய பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. ஜனக பரணமான அவர்கள் |
| 9 | கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. எல். ஜி. ஜேன்ஸ் அவர்கள் |
| 10 | தொழிற்சங்க சுகாதாரப் பிரிவு | தொழில் ஆணையாளர் | வைத்தியர் வஜிர எம். பலிபான அவர்கள் |
| 11 | பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு | தொழில் ஆணையாளர் | திருமதி. மாதவி என் குனவர்த்தன அவர்கள் |
| 12 | ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டி.பி.கே ஆர் வீரகோன் |
| 13 | சட்ட நடைமுறைப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திரு. டபிள்யு. ஏ.டீ.கே. மிலங்க |
| 14 | நிருவாகப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திருமதி. ஏ. டபிள்யு என் விராஜி |

| | | | |
|---|---|---|---|
| 15 | நிதிப் பிரிவு | பிரதான கணக்காளர் | செல்வி. கே.டி.ஜி. லக்மாலி |
| 16 | புள்ளி விபரப்பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்) | திரு. டி.வி வீரவர்ன |
| 17 | திட்டமிடல்,ஆராய்ச்சி பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு | தொழில் ஆணையாளர் | திருமதி. ஏம்.டி.எம்.டி கருனாதிலக்க |
| 18 | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | திரு. ஐ.எல். சோமசிறி |
| 19 | நிர்மாண மற்றும் கட்டிடப் பராமரிப்பு பிரிவு | பொறியியலாளர் (சிவில்) | திருமதி. ஜீ.எச்.ஆர் எஸ் ஈ.சில்வா |
| 20 | நூலகம் | நூலகர் | திருமதி. ஏச் ரேணுகா குமாரி ஜயவர்த்தன |

அட்டவணை- 1.9 தொழில் திணைக்களத்தின் பகுதி தலைவர்கள் - 2018

## 1.4 விசேட செயற்பாடுகள் - 2018

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது, தொழிலாளர்களின் உரிமைகளை கோரும் போது, பல வகையானதும் பிரச்சினைகள் நிறைந்ததுமான நிலைமையில்இருப்பதால், உரிமைகளை பெறுவதற்கு தடை ஏற்படுதலை கட்டுப்படுத்துவதற்காக, அந்த விடயத்தில் செல்வாக்கு செலுத்தும் சட்டதிட்டங்களை இலகுபடுத்துவதும் ஏதாவது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காகவும், இருக்கும் சட்டம் சக்தியற்றதாக இருக்கும்போது, தேவையான அடிப்படையில் வழங்குவதற்காக சரியான திருத்தத்தினை மேற்கொள்வதோ அல்லது புதிய சட்டத்தினை தயாரிப்பதன் மூலம், தொழிலாளரின் நியதிச்சட்ட உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக தொழில் திணைக்களம் எப்போதும் முயற்சியை மேற்கொள்கிறது. சட்டரீதியான விடயங்களை விருத்தி செய்வதற்காக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதன் மூலம், 2018ம் வருடத்தில் தொழில் திணைக்களம் ஆரம்பித்த அல்லது இறுதி முடிவுக்கு எட்டப்பட்ட அப்படியான செயற்பாடுகள் கீழ் கண்டவாறு ஆகும்.

### 1.4.1 வெளிநாடுகளில் சேவை புரிகின்ற தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு (Social Security Fund) சந்தாப்பணத்தினை செலுத்தும் போதும் நலனை கோரி விண்ணப்பிக்கும் போது ஏற்படுகின்ற சட்டரீதியான மற்றும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்குதல்.

இலங்கையில் சேவை புரியும் வெளிநாட்டவருக்கு மற்றும் வெளிநாட்டில் சேவை புரியும் இலங்கையருக்கு, தாம் வேலை செய்யும் நாட்டின் சட்ட திட்டங்களுற்கு இணங்க, அந்த நாட்டில் உள்ள சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு (Social Security Fund) பணம்செலுத்தியதன் பின்னர், பிரதிபயனுக்காக விண்ணப்பிக்கும் போது சட்ட மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் எழும். ஏன் என்றால்,வெளிநாடொன்றில் தொழில் புரியும் காலத்தினுள் தமது நாட்டின் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு தொடர்ச்சியாக சந்தா பணத்தை செலுத்துவதற்கு முடியாமையின் பெயரில் உறுப்புரிமை இழக்கப்படுதல், வெளிநாட்டுக்குரிய சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு தொடர்ச்சியாக பங்களிப்பு செய்வதற்கு முடியாமையின் பெயரில் உறுப்புரிமை இழக்கப்பதல், வெளிநாட்டுக்குரிய சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு (Social Security Fund) செலுத்தியுள்ள சந்தா பணத்தினை, மீண்டும் தாய் நாட்டுக்கு வரும்போது பிரதிதிபயனாக பெறுவதற்கு முடியாது போய்விடுகிறது.

இந்த பிரச்சினையினை தீர்ப்பதற்கு தற்போது உலகத்திலிருக்கும் நடைமுறையாவது, ஏதாவது நாட்டினால் ஏனைய நாடுகளோடு சமூக பாதுகாப்பு, ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக்கொள்வதாகும். அதற்காக ஊழியர் சேமலாப நிதிக்கு குறித்த வெளிநாடுகளுடன் சமூக பாதுகாப்பு ஒப்பந்தம், கையொப்பமிடுவதற்கு முடியுமான வகையில் ஊழியர் சேமலாப நிதி சட்டம் மற்றும் நிபந்தனைகளை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை ஆரம்பித்து தற்போது அனுமதிபெறப்பட்டுள்ளது.

### 1.4.2 ஊழியர் சேமலாப நிதியினை பதிவு செய்யாமையின் பெயரில் தொழிலாளி முகங்கொடுக்கும் கஷ்டங்களை நீக்குதல்

இதுவரையில் ஊழியர் சேமலாப நிதிப்பிரதிபயனைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வருகை தரும் உறுப்பினர்களில் அதிகமானோர், மூன்றில் ஒரு பங்கினர், அளவில் தொழில் வழங்குனரால், அந்த ஊழியர்கள், தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமையின் பெயரில் இலங்கை வங்கி, மத்திய வங்கி என்பன அவர்களின் பெயரில் வைப்பிலடப்பட்ட நிலுவையை பெறும்போது தாமதங்கள் உட்பட பல வகையான கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரிடுகிறது. அதற்கு காரணமென்னவெனில், ஊழியர் சேமலாபநிதி சட்டத்தில் நிபந்தனைகளின் மூலம் உறுப்பினரை பதிவு செய்வதற்காக குறிப்பிட்ட கால எல்லை நிச்சயிக்கப்படாமையாலும், பதிவு செய்யாமை சம்பந்தமாக அவ்வாறான தொழில் வழங்குனர்களுக்கு எதிராக சட்டத்தினை நடைமுறைப்படுத்தாமையும் ஆகும்.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஊழியர் சேமலாப நிதிக்கு உறுப்பினர்களை பதிவு செய்வதற்கு தொழில் வழங்குனர்களுக்கு

குறிப்பிட்ட காலத்தினை நிச்சயிப்பதற்கும், அந்த கால எல்லைக்குள் உறுப்பினர்களை பதிவு செய்வதை மீறினால், சட்டத்தின் மூலம் அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு, இப்போது அமைச்சரவை அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.4.3 மகப்பேற்று விடுமுறையினை சக்தி பெறச்செய்தல்

மகப்பேற்று விடுமுறையை பெற்றுக்கொண்ட, முன்னைய குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையினை கவனத்தில் கொள்ளாது, சகல குழந்தை பிறப்பின் போதும் தொழில்புரியும் பெண்களுக்கு 84 நாட்கள் சம்பளத்தோடு கூடிய பிரசவ விடுமுறை உரிமை வழங்கப்பட்டது. அதற்காக மகப்பேற்று உதவி கட்டளை சட்டத்தின் 3 வது உறுப்புரை மற்றும் கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சம்பந்தமாக (சேவைகள் மற்றும் சம்பள முறைப்படுத்தல்)கட்டளை சட்டத்தின் 18 வது உறுப்புரைதிருத்தம் செய்யப்பட்டது.

### 1.4.4 தாய்ப்பால் கொடுப்பதற்காக சேவைக் காலத்தினுள் வழங்கப்பட்டிருக்கும் விடுமுறைகால எல்லையை நீடித்தல்.

2018ம் வருடம் வரை புதிதாக பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதற்காக சேவை காலத்தினுள் கால எல்லை, வழங்குவதற்காக உரிமை இருந்தது, மகப்பேற்று கட்டளை சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டபெண் ஊழியர்களுக்கு மாத்திரமே. 2018ம் வருடத்தில் கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சட்டத்தின் கீழ் பெண்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட்டது. இதற்காக கடை மற்றும் காரியால ஊழியர்கள் சட்டத்தின் 18 (1) உறுப்புரை உள்ளடக்கம் செய்யப்பட்டது. பெண்கள் மற்றும் பிள்ளைகளின் சுகாதார, தொழில் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் தொழில் படையணிக்கு ஒன்று சேர்வதற்காக, மிகவும் சாதகமான நிலைஉருவாகியுள்ளது. நாட்டில் சமூக, பொருளதார அபிவிருத்தியில் இந்த நடவடிக்கையின் மூலம் தெளிவான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.5 சேவையிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமான சட்டத்தின் கீழ் வருகின்ற, ஆபத்தான தொழில் சம்பந்தமான நிபந்தனைகளை விரிவாக மீளாய்வு செய்து, சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆபத்தான தொழில் நிபந்தனைகளை திருத்தம் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது. பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தும் சட்டம், கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சம்பந்தமான (சேவை மற்றும் சம்பளத்தினை முறைப்படுத்தல்) கட்டளைச் சட்டம் மற்றும் தொழிற்சாலை கட்டளைச்சட்டத்தினை திருத்தம் செய்து, சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தக் கூடிய குறைந்த வயது மேலும் 14 வயதிலிருந்து 16 வயது வரை உயர்த்துவதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பினை மேலும் அதிகரிக்க அவசியமான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

### 1.4.6 தொழில் சட்டத்தில், தெளிவான தீர்வுகள் மற்றும் இலகுவாக முன்னேற்றுதல் மற்றும் சமமான பொறுப்புகளுக்காக சமமான உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

தற்போதுள்ள பல சட்டங்களில் தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்தும் போது சமமான உரிமைகள் கிடைக்க கூடிய சந்தர்ப்பங்களில் அவை கிடைக்காத நிலைமைகள், கீழ்க்காணும் காரணிகளால் நிகழ்ந்துள்ளதென்பது தெளிவான விடயமாகும்.

காரியாலயங்கள் கடைகள் மற்றும் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்காக ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவதனால், சமமான சேவை , சமமான காலத்தினுள் வழங்குகின்ற ஊழியர்களுக்கு சமமான கவனிப்புகள் கிடைக்காமை மற்றும் ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சரியான சட்டம் சம்பந்தமாக சிக்கலற்ற தன்மையில்லாமை மற்றும் ஊழியர்கள் சேவை செய்ய வேண்டிய கால எல்லை, பகுதி நேர தொழில்களில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம், பெண்கள் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமான சட்டத்தில் நிலவுகின்ற நெகிழ்வற்ற தன்மை மற்றும் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தக்கூடிய கால எல்லை சம்பந்தமான உற்பத்தி துறையினுள் இருக்கின்ற சமமற்ற தன்மை, தொழில் வழங்குகின்ற நிறுவனங்களில் தொழில் வழங்குனர் சம்பந்தமாக இருக்கும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வரைவிலக்கணத்தின் பேரில் ஏற்படுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள், தனியார் பிரிவில் இருக்கின்ற ஊழியர்களுக்கு மேலதிகமான கவனிப்பு மற்றும் பாலியல் தொந்தரவுகளை கட்டுப்படுத்துவதற்காக போதியளவு சட்டம் இல்லாமை, தொழிலாளர் படையணிக்குள் பெண்களின் பங்களிப்பு குறைவு எனும் காரணிகளின் பெயரில் ஊழியர்களுக்கு ஏற்படுகின்ற பாரபட்சத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, சேவை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு ஒரு சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக, அமைச்சரவையினால் 2018.07.10ம் திகதி அனுமதி வழங்கப்பட்டது. புதிய சட்டத்தின் மூலம் கீழ்க் காணும் இலக்கினை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்சாலைகள், காரியாலயங்கள், விவசாயம் போன்ற துறைகள் சம்பந்தமாக வேறாக கவனிக்காமல், தனியாக தொழில் சட்டத்தினை ஏற்படுத்துதன் மூலம் சேவைபுரிகின்ற தொழிலின் தராதரத்தின் படி வேறான கவனிப்பு இல்லாமல் விடுமுறை, மேலதிக நேர உரிமை, கடமை நேரம், சீருடை ஆகிய உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

நூதன சேவை நிலையங்களின் நிலைமைக்கு ஏற்ப நெகிழ்வான தொழில் சட்டம் மற்றும் நிரந்தரமான அங்கீகாரத்தினை

பெறுவதற்கு அவசியமற்ற நிச்சயமான சட்டத்தினை ஸ்தாபித்தல்.

அதன்படி, கடை மற்றும் காரியாலயங்கள் ஊழியர்களின் சட்டம், பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமான சட்டம்,மகப்பேற்று உதவி கட்டளைச் சட்டம் மற்றும் சம்பள கட்டுப்பாட்டாளர் சபை கட்டளைச் சட்டம் ஆகிய நான்கு சட்டங்களுக்காக தனியான சட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக ஆரம்ப வரைபினை தயாரிப்பதற்காக ஊழியர்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் கலந்துரையாடல்கள் 8 கட்டங்களாக நடத்தப்பட்டதோடு, இந்த சட்டத்தினை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய சட்டத்தினை செயல்முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய சவால்கள் மற்றும் பிரச்சினைகள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

### 1.4.7 விபத்துக்களிலிருந்து தொழிலாளர்களை பாதுகாத்தல்

தொழிற்சாலைகளில் சேவைபுரிகின்ற தொழிலாளர்கள் இயந்திரங்களின் ஏதாவது பகுதியின் காரணத்தினால் மின்சாரம், வெப்பம்,வாயு, அமுக்கம் ஆகிய பௌதீக காரணிகளின் பெயரில் விபத்துகள் ஏற்படும் ஆபத்துகள் நிலவுகின்றன. இந்த விபத்துகளைத் தவிர்ப்பதற்காக கைத்தொழிற்சாலை உரிமையாளர்களால் சில முன்னோடி நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டது என்பதற்கான விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருப்பினும் அவை சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலமையினை கட்டுப்படுத்துவதற்கு செய்ய வேண்டியது தேவையான சட்டத்தினை அறிமுகப்படுத்தியும் அதனை நடைமுறைக்கு கொண்டுவருதல் மூலமும் ஆகும். ஆதலால் இந்த ஆபத்தான நிலையினை கட்டுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு,

- தொழிற்சாலைகளை பதிவு செய்தல் மற்றும் கட்டிடங்களின் நில அளவைப் படத்தை அங்கீகரிப்பது சம்பந்தமான நிபந்தனை
- ஆவி பொய்லர்களை பதிவு செய்தல் சம்பந்தமான நிபந்தனை
- ஆவி பொய்லர்கள் மற்றும் ஏனைய அமுக்க உபகரணங்களை பரிசோதனை செய்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் மற்றும் சான்றிதழ் வழங்குவது சம்பந்தமான நிபந்தனை
- அதிக சத்தத்திலிருந்து ஊழியர்களை பாதுகாக்கும் நிபந்தனை
- ஒளியுடன் உடன்பாடான நிபந்தனை

தயாரிக்கப்பட்டு முற்பிரிவினரும் கலந்துரையாடி தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தினை திருத்தி பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த திருத்திய சட்டம் உடன்பாடாகி நடைமுறைப்படுத்தப்படும் போது மேலே விளக்கிய விபத்துக்களிலிருந்து தொழிலாளர்களின் நடைமுறை மற்றும் சுகாகாரத்திற்கு உடனடியாகவோ நீண்டகாலமாகவோ நிகழக்கூடிய பாதிப்புகளிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கோ அல்லது ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு நட்டயீட்டினை பெற்றுக்கொள்வதற்கு இலகுபடுத்தக்கூடிய சட்டரீதியான நிலைமை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

1.4.8 தொழில் திணைக்களம் மீள் கட்டமைப்பு

தொழில் திணைக்களத்தின் தாபன கட்டமைப்பு 2016 ம் வருடம் ஆகும் போது தயாரிக்கப்பட்டிருந்தது,2012ம் வருடம் கடைசியாக செய்யப்பட்ட மீள் கட்டமைப்பின் படி தயாரிக்கப்பட்டிருந்த அமைப்பு கட்டமைப்பு மற்றும் பணிக்குழுவின் படியாகும். அப்படியிருந்தும் அந்த காலத்தினுள் எங்களால் சேவை வழங்கப்படவேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்து இருந்ததாலும், தொழிநுட்ப முன்னேற்றத்தில் சேவை வழங்கும் வசதிகளில் ஏற்பட்டிருந்த தரமான விருத்தி ஆகிய காரணிகளை கவனத்திற் கொண்டு, மிகச் சிறந்த சேவையினை வழங்குவதற்காக, தாபன கட்டமைப்பினை மீள் கட்டமைப்பு செய்யும் அவசியம் 2016ம் வருடத்தில் எழுந்தது. தொழில் திணைக்களத்தின் இலக்கு மற்றும் நோக்கினை அடைவதற்காக தற்போதய திணைக்களத்தில் நடைமுறையிலுள்ள அமைப்பு, கட்டமைப்பு மற்றும் அதிகாரத்தினை பன்முகப்படுத்தும் நடைமுறையில் மாற்றத்தினை ஏற்படுத்தி, தொழில் திணைக்களம் மீள்கட்டமைப்பு செய்யும் நடவடிக்கை, தொழில் திணைக்கள மீள்கட்டமைப்பு செய்யும் குழுவின் அறிக்கை மற்றும் අමප/17/1970/712/024 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த குழுவினால் தொழில் திணைக்களம் மீள்கட்டமைப்பு செய்யும் நடவடிக்கைகளுக்கு ஏற்ப, திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் வலயங்களும் மாவட்டங்களும் மற்றும் உப தொழில் காரியாலயங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகள் மற்றும் ஒவ்வொரு காரியாலயங்களின் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கபட்ட கடமைகள் சம்பந்தமாக நியாயப்படுத்தியும் தயாரித்து மீள்கட்டமைப்பு செய்வதன் ஊடாக ஏற்படுகின்ற பதவிகளை அனுமதிப்பதற்காக 2018.06.22 ம் திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதோடு, அந்த திணைக்களத்தின் மூலம் 2018.07.26 ம் திகதி தேசிய சம்பள மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை ஆணைக்குழுவின் அவதானிப்பு மற்றும் சிபாரிசினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2018.11.01 ம் திகதி அதற்குரிய நியாயப்படுத்தலுடன் கூடிய அறிக்கை, தேசிய சம்பள மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மீள்கட்டமைப்பிற்குரிய புதிய பதவிகள் அங்கீகரிப்பதற்காக தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை, ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்ட யோசனைகள் சம்பந்தமாக கலந்துரையாடல்கள் 3 தடவைகள் 2018 ம்

வருடத்தினுள், தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்டது.

இந்த மீள்கட்டமைப்பு செய்வதன் மூலம் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை வழங்கும் போது சேவை பெறுநர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை குறைப்பதற்கு மற்றும் அதிகபட்ச சேவையினை பிரதேச மட்டத்தில் சேவை பெறுநர்களுக்கு சென்றடைவதற்கு உரிய திறன் அதிகரிக்க செய்யும் என்பதனை எதிர்பார்க்க முடியும். அதேபோன்று, போதியளவு பதவி உயர்வு சந்தர்ப்பங்கள் இன்மையால் தமது தொழில் சம்பந்தமாக போதியளவு விழிப்புணர்வற்ற, சேவையினை வழங்குகின்ற பணிக்குழுவிற்கு ஏதாவது எதிர்பார்ப்புடன் கூடிய சேவையினை வழங்கினால் வினைத்திறமையுடன் கூடிய நிலைமை உருவாகுமென எதிர்பார்க்கப்படும்.

## 1.5 சர்வதேச தொடர்பு

### 1.5.1 சர்வதேச தொழிலாளர் அமைப்பு

சர்வதேச தொழில் சட்டத்தினை ஏற்படுத்தியும், சகல நாடுகளும் அவற்றினை உறுதி செய்வதன் மூலம் சமூகத்தினை நியாயமான முன்னேற்றத்தினை ஏற்படுத்தி தொழிலாளர்களின் கௌரவம், சுதந்திரம்,பாதுகாப்பு மற்றும் உரிமைகளை வழங்குகின்ற, மக்களின் தேவைகள் சம்பந்தமாக கவனித்து மிகச்சிறந்த வேலைச்சூழலை தோற்றுவிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்ற, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கின்ற ஒரு சர்வதேச தொழில் அமைப்பாகும். இலங்கையினுள் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக உபதேசங்கள், தொழிநுட்ப உதவிகள் மற்றும் பயிற்சிகளுக்காக நிரந்தரமான வழிகாட்டல்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பு இலங்கை கிளை மூலம் செய்துவருகிறது.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தொழில் திணைக்களத்தோடு மிகவும் நெருங்கிய சர்வதேச தொழில் அமைப்பின் இலங்கை கிளை செயல்படுவதோடு, திணைக்களத்தின் செயற்பாடுகள் அந்த அமைப்பின் வழிகாட்டலின் படி இற்றைப்படுத்தப்படுதல் மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் சர்வதேச தொழில் அமைப்பின் இலக்கினை அடைவதற்கு ஒத்துழைத்தல் மற்றும் இலங்கையின் தொழிலாளர் படையணிக்கு மிகச்சிறந்த சேவைநிலையினையும் சேவை சூழலையும் ஏற்படுத்துவதற்கு அந்த அமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகிய இருவகையான விடயங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் அந்நியோன்ய பிரதிபலன் கிடைக்கின்ற சிறந்த தொடர்பினை தொழில் திணைக்களமும் சர்வதேச தொழில் அமைப்பும் நீண்டகாலமாக நடத்திக்கொண்டுவருகின்றது.

2018 ம் வருடத்தின் போது இலங்கையில் சர்வதேச உடன்படிக்கை 43 இல் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, 29 புரோட்டோகோல் இக்காக அடுத்த வருடத்தில் ஒப்பமிட தேவையான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றன.

சர்வதேச தொழில் மாநாடு, சர்வதேச தொழில் அமைப்பின் கொள்கை தயாரிப்பில் அடிப்படை அமைப்பின் கட்டமைப்பாகும். அந்த மாநாடு வருடாந்தம் இலங்கையில் தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சின் பிரதிநிதிகள், தொழில் திணைக்கள பிரதிநிதிகள், தொழிற்ச சங்க ஊழியர் தொழிற்சங்கம் மற்றும் தொழில் வழங்குனர்களின் சங்கம் ஆகிய 3 பிரிவினரும் கூடிய குழுவினர் பங்குபற்றியதோடு, அங்கு கிடைக்கப்பெற்ற வழிகாட்டல்கள் மற்றும் அனுபவங்கள் இலங்கை தேச தொழில் சட்டத்தொகுதியின் சிறந்த முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்தது.

இலங்கை தேச தொழிலாளர் படையணிக்காக, திறந்த நிலைமையினை உருவாக்குவதற்காக தொழிநுட்ப உதவி வழங்குதற்காகவும்,உத்தியோகத்தர்களின் அறிவாற்றலை உயர்வடையச் செய்வதற்காகவும் சர்வதேச தொழில் அமைப்பின் முன்னிற்றலோடு அதற்காக வளவாளர்கள் மற்றும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. 2018ம் வருடத்தில் இலங்கையினுள் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்க் கண்டவகையிலாகும். இதைவிட தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 03 பேருக்கு வெளிநாடுகளில் குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 03 க்காக அனுப்புவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| தொடர் இல | நிகழ்ச்சி நடைபெற்ற தினம் / தினங்கள் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சி நடைபெற்ற நிலையம் | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த அடைவுகள் | எதிர்பார்த்த விளைவுகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 18.01.19 | பலாத்காரமாக வேலையில் ஈடுபடுத்துவது சம்பந்தமாக சர்வதேச தொழில் அமைப்பின் 29வது ஒப்பந்தத்தின் புரோட்டகோல் 29 சம்பந்தமாக முத்தரப்பினர் உபதேச செயலமர்வு | ரேணுகா சிடி ஹோட்டல் கொழும்பு 03 | தேசிய தொழில் சபையின் உறுப்பினர்கள் 50 பேர் | தரப்பினர்களின் கருத்துக்களைப் பெறல் | புரோட்டகோல் 29 கையொப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| 02 | 18.02.19 | சிறுவர் தொழில் சம்பந்தமாக ஒரு நாள் செயலமர்வு | ஹோட்டல் ஜானகி கொழும்பு 03 | உறுப்பினர்கள் 87 பேரும் உதவி தொழில் ஆணையாளர், பிரதி தொழில் ஆணையாளர், மற்றும் சிரேஷ்ட தொழில் உதவி உத்தியோகத்தர்கள் | • சிறுவர் தொழில் சிரேஷ்ட அலகு தயாரித்தல்<br>• சகல மாவட்டங்களுக்கும் செயற்பாட்டு திட்டத்தினை தயாரிப்பதற்காக சிறுவர் தொழில் சம்பந்தமான வழிகாட்டல் மற்றும் சிறுவர் தொழில் கொள்கை சம்பந்தமான தொழில் உத்தியோகத்தர்களின் கொள்ளளவு விருத்தி<br>• சிறுவர் தொழிலைக் குறைப்பதற்கு விசேடமாக சிறுவர் பாதுகாப்பு, மாவட்டத்தின் இயந்திரமான மாவட்ட மட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி குழுக்களினுள் தொழில் உத்தியோகத்தர்களின் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்தல், மற்றும் மாவட்ட பிரதேச சமூக மட்டத்தில் சமூகப் பாதுகாப்பு இணையம் விருத்தி செய்தல் | பிள்ளைகள் சம்பந்தமான விடயம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களிடையே சிறந்த தொடர்பினை ஏற்படுத்தல் |
| 03 | 18.04.09 | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சட்டம் தயாரித்து முடிக்கும் செயலமர்வு | ஹோட்டல் ஜானகி கொழும்பு 03 | தரப்பினர் 20 ஏனையோர் 5 | தரப்பினர்களின் கருத்துக்களைப் பெறுதல் | இறுதி வரைபு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | 18.08.20 | இலங்கைப் பிரதி நிதிகளின் தென்னாபிரிக்கா முத்தரப்பினர் கல்விச் சுற்றுலா | தென்னாபிரிக்கா | பிரதிநிதிகள் 09 பேரும், கௌ. அமைச்சர், உப தலைவர் இலங்கை தொழில் சம்மேளனம், இணைப்புச் செயலாளர்கள் ஏற்றுமதி தயாரிப்பு வலயம் மற்றும் பொதுச்சேவை ஊழியர் சங்க பொதுச் செயலாளர் தேசிய தொழிற் சங்க சம்மேளனம், பணிப்பாளர் இலங்கை சேவை சம்மேளன மனித வள பணிப்பாளர் எயிட்டிகன் ஸ்பென்ஸ் ஹோட்டல் முகாமைத்துவம் தனியார் கம்பனி, Group chief People Officer - பிறன்டிக்ஸ் | தென்னாபிரிக்காவின் தொழிலாளர் பிரிவு சம்பந்தமான அறிவினை விருத்தி செய்தல் | தேசிய தொழில் ஆலோசனை சபை (டேுயுஊ) மீளமைப்பு செய்தல் |

அட்டவணை 1.10 சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்

| தொடர் இல | நிகழ்ச்சியின் பெயர் | நிகழ்ச்சி நடைபெற்ற இடம் | பங்குபற்றிய உத்தியோகத்தர் குழாம். | பங்குபற்ற-ிய உத்-தியோகத்-தர்களின் எண்ணி-க்கை |
|---|---|---|---|---|
| 01 | தேயிலை தோட்டக் கைத்தொழிலினுள் சிறந்த நடவடி-க்கைகள் | ரேனுகா சிடி ஹோட்டல் கொழும்பு 03 | தொழில் உத்தியோகத்தர் | 48 |
| 02 | தேயிலை தோட்டக் கைத்தொழிலினுள் சிறந்த நடவடி-க்கைகள் | பொல்கொல்ல பயற்சி மத்திய நிலையம் கண்டி | பி.தொ.ஆ / தொ.உ | 56 |
| 03 | தேயிலை தோட்டக் கைத்தொழிலினுள் சிறந்த நடவடி-க்கைகள் | களம்போ சிடி ஹோட்டல், கோட்டே, கொழும்பு | பி.தொ.ஆ / தொ.உ | 61 |
| 04 | தேயிலை தோட்டக் கைத்தொழிலினுள் சிறந்த நடவடி-க்கைகள் | களம்போ சிடி ஹோட்டல், கோட்டே, கொழும்பு | பி.தொ.ஆ / தொ.உ | 56 |
| 05 | தொழிற் சுகாதாரம் சம்பந்தமாக பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்சித் திட்டம் | ஹோட்டல் விலாஓஸன் வீவ் வாத்துவ | தொ.உ | 30 |
| 06 | தொழில் திணைக்களத்திற்காக யுக்தி முறைகளை திட்டமிடுதல் சம்மந்தமான செயலமர்வு | ரேனுகா சிடி ஹோட்டல் கொழும்பு 03 | மே.தொ.ஆ.நா / தொ.ஆ. / கணக்காளர் / பொறியியலாளர் பிரதான உள்ளக கணக்காய்வாளர் / பி.தொ.ஆ / உ.தொ ஆ / உ.ஆ. தி / பி.ப /. சட்ட உத்தியோகத்தர் | 37 |

அட்டவணை 1.11. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் திணைக்கள ஊழியர்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

# 2. பொருளாதார அபிவிருத்தியை விருத்தி செய்வதற்காக கைத்தொழில் சமாதானத்தினை பாதுகாத்தல்.

**2.1 அறிமுகம்.**

சர்வதேசரீதியில் போட்டி பொருளாதாரத்திற்காக நீடித்த கைத்தொழில் சமாதானத்துடன் கூடிய நாட்டினை நிர்மாணிப்பதற்கான பங்களிப்பினை வழங்குதல் திணைக்களத்தின் இலக்கு ஆவதால், கைத்தொழில் சமாதானத்தை ஏற்படுத்துவது திணைக்களத்தின் அடிப்படை மற்றும் அத்தியவசியமான விடயமாகும். இதற்காக பிரதான 4 பிரிவுகளின் கீழ் திணைக்களம் செயல்படுகிறது.

அவை

2.1.1 சேவை வழங்குனர், ஊழியர்கள் இருசாராருக்கிடையே கலந்துரையாடல்கள், நடத்துதல்.

2.1.2 சேவை செய்யும் இடம் (தொழிலாளர், விசாரணைகள்) விசாரணை செய்தல்

2.1.3 நியதிச்சட்ட உரிமைகளை இழப்பது சம்பந்தமான முறைப்பாடுகளுக்கு தீர்வும் கைத்தொழில் பிணக்குகளை தீர்த்தலும்.

2.1.4 தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தினை நாடுதல்.

ஆகிய விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் கைத்தொழில் சமாதானத்தினை நிலைநாட்டுவதற்குரிய சகல முயற்சிகளும் திணைக்களத்தினால் எடுக்கப்படுகிறது.

## 2.2 பொறுப்பு

### 2.2.1 சேவை வழங்குனர், ஊழியர்கள் இருசாராரிடையே உரையாடல்கள் நடத்துதல்

இலங்கை முழுதும் பரந்துள்ள பகுதியளவு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் அதிகபட்ச வினைத்திறன் மற்றும் விளைதிறனை விருத்தி செய்வதற்காக சேவை வழங்குனர், ஊழியர்கள் இருசாராரிடையே கைத்தொழில் சமாதானத்தினை உறுதி செய்வதற்கான வேலைச் சூழலை நிர்மாணிக்கும் செயற்பாட்டினை நிறைவேற்றுதல், மனித வள அபிவிருத்தி பிரிவினால் செய்யப்படுகிறது.

இதற்காக,

2.2.1.1 சமூக கலந்து உரையாடலை விருத்தி செய்வதற்கான கொள்கை மற்றும் உபாய வழிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிறுவன மட்டத்தில் வேலைத்தள ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதல்.

2.2.1.2 கூட்டு ஒப்பந்தத்தினை உருவாக்குவதற்காக வசதிகளை வழங்குனராக செயற்பட்டு கைத்தொழில் சமாதானத்தை கட்டியெழுப்புதல்.

2.2.1.3 சிறந்த வேலை சூழலை ஸ்தாபிப்பதற்காக பகுதியளவு அரச மற்றும தனியார் பிரிவின் நிறுவனங்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சேவை வழங்குனர், ஊழியர்கள் இருசாராருக்கும் தொழில் சட்டம் சம்பந்தமாக அறிவூட்டுதல். இதற்காக நிறுவன மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமையாளர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.



2.1 படம். பகுதியளவு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தொழில் வழங்குனர் - ஊழியர்கள உரையாடல் - 2018 திணைக்கள உத்தியோத்தர்கள்



2.2 படம். பகுதியளவு அரச மற்றும தனியார் நிறுவனங்களின் தொழில் வழங்குனர் - ஊழியர்கள் உரையாடல் - 2018 சேவை வழங்குநர், ஊழியர்களின் பங்களிப்புடன்

2.2.1.4 அவ்வாறு சேவை வழங்குனர் ஊழியர்கள் இருசாரர் மற்றும் பிரதி / உதவி தொழில் ஆணையாளர்களின் பங்குபற்றுதலோடு, தொழில் திணைக்களத்தின் மாகாண காரியாலயங்கள் ஊடாக முப்பிரிவினரதும் தொடர்புகளோடு கட்டியெழுப்புதல் மற்றும் கொள்கையினை உருவாக்குவதற்கு தேவையான விபரங்களை சேகரிப்பதற்கு வலய ஆலோசனைக்குழு நடத்துதல்.


2.2.1.5 அறிவினை பரிமாறிக்கொள்வதற்கும் சேவை வழங்குனர் ஊழியர்கள் இருசாரருக்கும் இடையே தொழில் சட்டம் சம்பந்தமாக நிலவுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் வலய கலந்துரையாடல்கள் நடத்துதல்.

2.2.1.6 கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுதலை தவிர்த்தலுக்காக அறிவினை வளர்ப்பதற்கு உரையாடல் சஞ்சிகை வெளியிடல்.

2.2.1.7 சமூக கலந்துரையாடல் எவ்வளவு தூரம் நிறுவனத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது சம்பந்தமாக வருடாந்தம் உற்பத்தி சேவை ஆடைத்தொழில் மற்றும் தோட்டப் பிரிவு என்பன பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறிய, மத்திய, பாரிய அளவிலான நாடளாவிய சமூக உரையாடல்கள், வேலைத்தளங்களின் ஒத்துழைப்பு சம்பந்தமாக போட்டித் தொடரினை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு இணைந்தாற்போல் அங்கு சமூக கலந்துரையாடல் வேலைத்தளத்தின் பங்களிப்பு சம்பந்தமாக இயல் மற்றும் இசை (சிங்கள அல்லது தமிழ்) சித்திரம், போஸ்டர், சிறிய வீடியோ படைப்புகளிலான போட்டி ஒன்றினை நடத்துதல்.




2.3 படம் தொழில் ஆணையாளர நாயகம் சபையில் உரையாற்றுகின்றார



2.4 படம் அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் போட்டிககு முன்வைக்கப்பட்ட சித்திரங்களைப் பார்வையிட்ட போது

## சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு சம்பந்தமான போட்டித் தொடர் -2018

| தொடர் இலக்கம் | விடயங்கள் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| 01 | சமூக கலந்துரையாடல் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில் வழங்குனர், ஊழியர்கள் இருசாராருக்கும் அறிவூட்டும் நிறுவன மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்கள் | 72 |
| 02 | சமூக உரையாடல் பிரிவினால் நடத்தப்பட்ட முகாமையாளர் மற்றும் தொழில் வழங்குனர் களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 10 |
| 03 | மாவட்ட காரியாலயங்களினூடாக நடத்தப்பட்ட சேவை வழங்குனர்கள் ஊழியர்கள் இருசாராருக்குமான அறிவூட்டல் செயலமர்வு | 40 |
| 04 | உப காரியாலயங்கள் மூலம் நடத்தப்பட்ட தொழில் வழங்குனர் ஊழியர்கள் இருசாராருக்குமான அறிவூட்டல் செயலமர்வு | 17 |
| 05 | வலய சமூக கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் | 11 |
| 06 | உரையாடல் சஞ்சிகை | 01 |
| 07 | சமூக கலந்துரையாடல் விஷேட விருது விழா (2018.12.04) | 01 |

அட்டவணை 2.1 மனித வள அபிவிருத்திப் பிரிவினூடாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் - 2018

## 2.2.2 சேவை நிலையம் (தொழிலாளர்) விசாரணை நடத்துதல்

சேவை நிலையம் (தொழிலாளர்) விசாரணை நடத்தும் முக்கிய நோக்கமாக இருப்பது சேவைபுரியும் நிலையத்தில் தொழிலாளர்களின் நியதிச்சட்ட உரிமைகளை பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டம் மற்றும் நிபந்தனைகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை விசாரணைக்கு உட்படுத்தி, தேவையான நடவடிக்கை எடுப்பது மற்றும் சேவை வழங்குனர் ஊழியர்கள் இருசாராரிடையே பிணக்குகள் ஏற்படுதலை கட்டுப்படுத்தி சமூக உறவினை ஏற்படுத்தலாகும். இங்கு தொழில் சட்டம் மீறப்படக்கூடிய நிலைமை அவதானிக்கப்பட்டவுடன் அதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் சிறந்த தொழிலாளர் விசாரணை நடைமுறையென எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று சேவை வழங்குனர், ஊழியர் இருசாராருக்கும் இடையே ஏற்படக்கூடிய பிரச்சினைக்குரிய நிலைமைகளை தவிர்ப்பதும் தொழிலாளர் விசாரணைகளின் ஏனைய நோக்கமாகும்.

### தொழில் உத்தியோகத்தரால்,

- சம்பளத்தோடு கூடிய சேவை நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நிபந்தனைகள் வேலைநேரம், விடுமுறை, உரிமை மேலதிக, நேர கொடுப்பனவு
- ஊழியர் சேமலாப நிதி உரிமை
- வேலைத்தளத்தில் சுகாதார பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான நிலைமை
- பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் போன்ற ஆபத்தினை எதிர்நோக்க கூடிய தொழிலாளர்கள்.

ஆகிய விடயங்கள் சம்பந்தமாக அவதானத்துடன் கூடிய கீழ்க் காணும் விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

2.2.2.1 இலங்கையினுள் நிலவுகின்ற தொழில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது மற்றும் குறித்த சட்டரீதியான செயற்பாடு


2.2.2.2 நடைபெறுகின்ற தொழில் சட்டத்தின்படி செயல்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை சம்பந்தமாக தொழில் வழங்குனர்களுக்கு அறிவூட்டுதல்.

2.2.2.3 நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தீர்க்கமுடியாதென இனங்காணப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக உயர்மட்ட உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தல்.


2.2.2.4 கூட்டு ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தல்.

2.2.2.5 நடைமுறையிலுள்ள சட்டத்தின் எல்லையின் கீழ் சமூக பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்த்து வைக்க முன்னிற்றல்.

2.2.2.6 அநாமதேய மற்றும் விசேடமாக கவனம் செலுத்தப்படவேண்டிய முறைப்பாடுகள் சம்பந்தமாக நுண்ணாய்வு மற்றும் தொழில் வழங்குனர் தொழிலாளர் இருசாராரிடையே சமூக உறவினை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.




வரைபடம்- 2.1 சேவை நிலையங்கள் (தொழில்) விசாரணை - 2018
(2018ம் வருடத்தினுள் விசாரணைகளின் முழு எண்ணிக்கை 83,333)




2.2. தொழில் உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் நடத்திய சேவை நிலையங்கள் (தொழிலாளர்)விசாரணைகளின் பொதுவான எண்ணிக்கைகள் - 2018 க்கைகள் - 2018

இந்த விடயங்களுக்காக வலய தொழில் காரியாலயங்கள் 11, அதன் கீழ் மாவட்ட தொழில் காரியாலயங்கள் 40 மற்றும் உப தொழில் காரியாலயங்கள் 17 மாக இலங்கை முழுவதும் உள்ளடக்ககூடியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, தொழில் உத்தியோகத்தர்கள் 507 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த விடயம் நிறைவேற்றுவது மாவட்ட தொழில் மற்றும் உபதொழில் காரியாலயங்களின் மூலம் நிறைவேற்றப்படுவதோடு, அந்த காரியாலயங்களின் மேற்பார்வை முறையே உதவி ஆணையாளராலும் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தராலும் நடத்தப்படுகின்றது. இந்த காரியாலயங்களின் மேற்பார்வை பிரதி ஆணையாளர் ஒருவருடைய வழிகாட்டலின் கீழ் இருப்பதோடு, வலய தொழில் காரியாலயத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றதோடு, மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (திணைக்களம்) அவரது மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்த முழு செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒரு தொழில் உத்தியோகத்தர் 2018 ம் வருடத்தில் பொதுவாக தொழிலாளர் விசாரணைகள் 204 நடத்தியதோடு அதன்படி 2018 ம் வருடத்தினுள் முழு விசாரணைகளும் 83,333 நடைபெற்றுள்ளன.

## 2.2.3 நியதிச்சட்ட உரிமைகளை இழப்பது சம்பந்தமாக முறைப்பாடு தீர்த்தல் மற்றும் கைத்தொழில் பிணக்குகளை தீர்த்தல்.

நியதிச்சட்டத்தினை மீறுதல் மற்றும் கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதற்கு இடமளிக்கும் சந்தர்ப்பங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள், பிரதான காரியாலயம், மாவட்ட காரியாலயம் மற்றும் உப காரியாலயங்களுக்கு அனுப்புதல், ஊழியர்கள் அல்லது வேறு பல்வகையான சாரார்களினால் நடைபெறுகிறது. மாவட்ட காரியாலயங்கள், வலய காரியாலயங்கள் மற்றும் பிரதான காரியாலயங்களில் குறித்த பிரிவுகள் மூலமும் அவற்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அந்த முயற்சி வெற்றியடையாவிட்டால் குறித்த கைத்தொழில் பிணக்குகள் விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரின் கட்டளைப்படி,நடுவருக்கோ அல்லது கைத்தொழில் நீதிமன்றத்திற்கோ அனுப்பி தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் மூலம் தனிப்பட்ட அந்த தொழில் வழங்குனர் ஊழியர் இருசாராருக்கும் பிரதிபலன்களும், பொதுவாக தேசிய பொருளாதாரம் உயர்வடைவதற்கும் பங்களிப்பு செய்யும். முழுமையாக எடுத்தால் சேவை வழங்குனர் ஊழியர்களின் உரிமையையும் பாதுகாத்து, நாட்டினுள் கைத்தொழில் சமாதானத்தினை ஏற்படுத்தி, நாட்டினை பொருளாதார விருத்திக்கும் மற்றும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும் பொறுப்பு கைத்தொழில் உறவுகள் பிரிவு மூலம் செயற்படுகிறது. இதற்காக கைத்தொழில் உறவுகள் பிரிவின் கீழ் அந்த பிரிவுக்கு மேலதிகமாக மேலும் 3 உப பிரிவுகள் உள்ளன. அவை சேவையை முடிவுறுத்தல் பிரிவு, தொழிற்சங்க பிரிவு மற்றும் கைத்தொழில் நீதிமன்றம் ஆகியவை ஆகும்.

### 2.2.3.1 நடைமுறைப்படுத்தப்படும் சட்டரீதியான ஏற்பாடுகள்

2.2.3.1.1 1950ம்ஆண்டின் 43ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்திய) சட்டம்

2.2.3.1.2 1983ம்ஆண்டின் 12ம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு (திருத்திய) சட்டம்

2.2.3.1.3 1971ம்ஆண்டின் 45ம் இலக்க தொழிலாளர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்திய) சட்டம்


2.2.3.1.4 1935ம்ஆண்டின் 14ம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டம் (திருத்தியது)

### 2.2.3.2 கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

கைத்தொழில் பிணக்குகள் என்பது,எவராவது ஒருநபரை சேவையில் ஈடுபடுத்தல் அல்லது ஈடுபடுத்தாது விடல் அல்லது எவராவது நபருடைய சேவையில் நிபந்தனைகள் அல்லது சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய நிலமைகள் அல்லது ஏதாவது நபரின் சேவையை முடிவுறுத்தலும் அல்லது எவராவது நபரை சேவையில் மீண்டும் இணைத்துக்கொள்வது சம்பந்தமாக அல்லது சேவை வழங்குனரும் மற்றும் ஊழியரிடையே அல்லது ஊழியர்கள் மற்றும் ஊழியர்களிடையே ஏதாவது பிணக்குகள் அல்லது கருத்து வேறுபாடுகள் என்று கருதப்படும். (கைத்தொழில் பிணக்குகள் சட்டம் 48)(வரைவிலக்கணம்)( உறுப்புரை)


கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதை தவிர்த்தல் மற்றும் அல்லது ஏற்படுவதற்கு சூழ்நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் முன்னின்று பிணக்குகளுக்குரிய சாராருக்கு ஏற்படவிருந்த நிதி ரீதியிலான சேதத்தினை தவிர்ப்பது போல, இருசாராருக்கிடையே ஏற்படுகின்ற அந்நியோன்ய சம்பந்தம், குறித்த சேவை நிலையத்தில் நீண்டகாலம் நிலைக்கத்தக்க, நேர்மையாக பங்களிப்பு செய்தல் ஆகும். ஏதாவது சந்தர்ப்பத்தில் கைத்தொழில் பிணக்குகள் ஏற்பட்டால் அதனை பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர முன்னிற்பவராக மாவட்ட காரியாலய உப காரியாலய மற்றும் கைத்தொழில் உறவுகள் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளும். அப்படியான சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்ற இணக்கப்பாடு , கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 12(1) உறுப்புரையின் கீழ் உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் நியாயமானதாகிறது. இந்த நடவடிக்கை மாவட்ட தொழில் காரியாலயம் மூலம், வலய தொழில் காரியாலயம் மூலமும் நடத்தப்படுவதோடு, நேரடியாக கைத்தொழில் உறவுகள் பிரிவினாலும் நடத்தப்படுகிறது. அவ்வகையிலும் இணக்கப்பாட்டுக்கு எட்டப்படாத பிணக்குகள் நடுவருக்கோ அல்லது கைத்தொழில் நீதிமன்றத்திற்கோ தாக்கல் செய்வதோடு நடுவர் ஃ கைத்தொழில் நீதிமன்றம் சுயாதீனமான தரப்பினராலார்.

சுரப்பினர்களினால் முன்வைக்கப்படுகின்ற விடயங்களை நியாயமானதாகவும் பக்கசார்பின்றியும் கவனித்து நடுவர் ஃ கைத்தொழில் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்குவதோடு,அது நீதிவான் நீதிமன்றத்தின் மூலம் அமுலாக்கப்படகூடிய நியாயபூர்வமான தீர்ப்புமாகும். நடுவர் சபைக்கு அனுப்பப்படுவது என்பது, ஒரு நடுவருக்கு பிரச்சினையை அனுப்புவதென கருதப்படுவதோடு, கைத்தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்புவது என்பது,நடுவர்கள் சபைக்கு பிரச்சினைக்கு அனுப்புவதென கருதப்படும் அவ்வாறு அந்த வழக்குகளை நடைமுறைப்படுத்தும் பிரிவினை பொதுவாக அறிமுகப்படுத்துவது கைத்தொழில் நீதிமன்றம் என்ற பெயரிலாகும்.




வரைபடம் 2.3 ஊழியர் உரிமைகள் மீறுதல் சம்மந்தமாக முறைப்பாடுகள் கிடைப்பதும் தீர்த்தலும் - 2018

வருடத்தினுள் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் எண்ணிக்கை கூடிய பெறுமானத்தை கொண்டிருப்பதும் முறைப்பாடுகளை தீர்ப்பது, முறைப்பாடு கிடைக்கின்ற வகையை விட கூடுதலான சரிவினை கொண்டுள்ளதாகவும் முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு எடுக்கும் காலத்தினை எதிர்காலத்தில் குறைத்துக்கொள்வதற்கு உள்ள சாத்தியங்களை காட்டுகிறது.




2.4 கைத்தொழில் பிணக்குகள் சம்மந்தமாக முறைப்பாடுகள் கிடைப்பதும் தீர்த்து வைத்தலும் - 2018

### 2.2.3.2.1 வேலை நிறுத்தங்கள் நடத்தப்படுதலை குறைத்தல


மேற்கூறிய தலைப்பின் கீழ் விளக்கியவாறு வேலை நிறுத்தம் அளவிற்கு மேலோங்கச் செய்வதற்கான நிலைமையினை அவதானித்த உடனேயே தொழில் உத்தியோகத்தர்களால் அந்த நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதோடு, வேலை நிறுத்தம் ஏற்பட்டால் இதற்காக குறித்த தொழில் உத்தியோகத்தர் உதவி தொழில் ஆணையாளர் மற்றும் பிரதி தொழில் ஆணையாளரின் முன்னிற்றல் மூலம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, அவசியமான சந்தர்ப்பங்களில் ஆணையாளரும் முன்னிற்பார். வேலை நிறுத்தம் ஏற்படுவதனை கட்டுப்படுத்துவது அல்லது வேலை நிறுத்தம் ஏற்பட்டவிடத்து தொழில் வழங்குனர் ஊழியர்கள் இருசாராருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு எட்டவைப்பது அவசியமாகும். அவ்வாறின்றேல் முதலாவதாக நிறுவனத்தின் உற்பத்தி சரியும், செயலிழக்கப்படும், மனிததொழில் நேரம் இழக்கப்படும் சில நேரம் நிறுவனம் செயலிழந்து மூடப்படும் நிலைவரை தேசிய பொருளாதாரத்தை பின்னடையச் செய்யும் சக்தியாக உருவாகுவதற்கு இடமளிக்கப்படுவதாலாகும். 2016 ம் வருடத்திற்கு ஏற்ப 2017 ம் வருடத்தில் அறிக்கையிடப்பட்ட வேலை நிறுத்த எண்ணிக்கை தெட்டத் தெளிவாக தெரிகின்ற அளவுக்கு கீழே சரிந்ததோடு 2018 ம் வருடத்தினுள் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை 2017 ம் வருடத்திற்கு அண்மித்த தொகையாகும்.

| தொடர் இல | நிகழ்வு | தோட்டம் | நிர்மாணம் | உற்பத்தி | மாணிக்க அகழ்வு | அரச சார்பற்ற | வேறு சேவைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | வேலை நிறுத்த அறிக்கைகள் கிடைத்தவை | 21 | 01 | 14 | 01 | 02 | 02 | 41 |
| 02 | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை | 7402 | 110 | 4360 | 60 | 830 | 198 | 12"960 |
| 03 | இழக்கப்பட்ட மனித நாட்களின எண்ணிக்கை | 23654 | 110 | 9965 | 120 | 5815 | 344 | 40"008 |

அட்டவணை 2.2 வேலை நிறுத்தம் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட தரவுகள் - 2018

### 2.2.3.2.2 கூட்டு ஒப்பந்தங்கள் பதிவு செய்தல்.

கைத்தொழில் பிணக்குகளை தீர்க்கும் போது கூட்டு ஒப்பந்தங்களுக்கு ஏற்ப தொழில் வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் இருசாராருக்கும் சிறந்த நிரந்தர தீர்வு கிடைக்கும். அதேபோன்று ஊழியர்களுக்கு தொழில் சட்டதிட்டங்களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களை விட கூடுதலான வரப்பிரசாதங்களை பெறுவதற்கு கூட்டு ஒப்பந்தத்தினால் முடியும். கடந்த சில வருடங்களுள் பதிவு செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தம் எண்ணிக்கையில் படிப்படியாக குறைவு காணப்படுவதால் சமூக ஒப்பந்தத்திற்காக சமூக உரையாடல் மூலம் ஊக்கப்படுத்தி நடாத்துவதற்கு திணைக்களத்தினால் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.





வரைபடம் 2.5 கூட்டு ஒப்பந்தம் பதிவு செய்தல் - 2018

### 2.2.3.2.3 நடுவர் சபை மற்றும் கைத்தொழில் நீதிமன்ற நடவடிக்கைகள்

நடுவர் குழு மற்றும் கைத்தொழில் நீதிமன்றத்தின் பிரதானமான நோக்கமாக இருப்பது, கைத்தொழில் பிணக்குகளை தீர்த்தலாக இருப்பதோடு, நடுவர் குழு / கைத்தொழில் நீதிமன்றத்தினால் பிரச்சினையை விசாரணை செய்து தீர்ப்பினை வழங்குவதோடு, அதனோடு சம்பந்தப்பட்ட அவசியமான வரைவிலக்கணத்தை கோருதல் மற்றும் நடுவர் குழுவின் தீர்ப்புக்கு எதிராக ரிட் கட்டளை வழங்கினால், சட்டநடைமுறை பிரிவு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, நடவடிக்கை மேற்கொள்ளல் கைத்தொழில் உறவுகள் பிரிவினரால் நடத்தப்படுகிறது.

2018 ம் வருடத்தில் கைத்தொழில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக 17 ஊழியர்களுடன் கூடிய சபையொன்று நியமிக்கப்பட்டதோடு, அதன் மூலம் கைத்தொழில் துறை முறைப்பாடுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





வரைபடம் 2.6 கைத்தொழில் நீதிமன்ற செயற்பாடுகள்- 2016,2017,2018

### 2.2.3.1. பணிக் கொடைக் கொடுப்பனவு சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

தனியார் அல்லது பகுதியளவு அரசு பிரிவில் எவராவது சேவை வழங்குநரால், தொழிலாளரால் அல்லது தொழிலாளர் ஓய்வு பெறுவதன் பெயரில் அல்லது மரணம் சம்பவிப்பதனால் அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதன் பேரில் வேறு ஏதாவது ஒரு வகையில் தொழிலாளரின் சேவையினை முடிவுறுத்தும் போது அவருக்கோ அல்லது தங்கி வாழ்பவருக்கோ அந்த ஊழியரின் சேவைக்காலம் மற்றும் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு பணிக்கொடை எனப்படுவதோடு பணிக் கொடை உரிமை மற்றும் கொடுப்பனவு சம்பந்தமான சகல சட்டதிட்டங்களும் அடங்கிய நிபந்தனைகள் இந்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பணிக்கொடை கொடுப்பனவின் போது சேவை வழங்குநர் மற்றும் ஊழியர் இரு சாராரிடையே ஏற்படுகின்ற பிணக்குகளுக்காக எழுத்து மூலம் மற்றும் வாய்மூல உபதேசங்கள் வழங்கப்படுவதோடு, அந்த சட்டத்திற்கு அமைய கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் அவசியமான நடவடிக்கைகள் கைத்தொழில் உறவுகள் பிரிவினரால் எடுக்கப்படும்.

பணிக்கொடை கொடுபடாமை சம்பந்தமான முறைப்பாடு விசாரணை நடத்துவது, மாவட்ட தொழில் காரியாலயத்தின் மூலம் நடத்தப்படுவதோடு, பணிக்கொடை கொடுபடாமை சம்மந்தமாக அறிவித்தல் அனுப்புதலும் நடைபெறும். அந்த அறிவித்தலை அமுல்படுத்துவதற்காக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தல் குறித்த வலய தொழிலாளர் காரியாலயத்தின் பிரதி தொழில் ஆணையாளரால் நடத்தப்படுவதோடு, அந்த வழக்கை நடத்திக் கொண்டு போவது மாவட்ட உதவி தொழில் ஆணையாளரால் ஆகும். இந்த நடைமுறையினுள் மாவட்ட உதவி தொழில் ஆணையாளருக்கும் மற்றும் வலயத்திற்கு பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளருக்கும் தேவையான ஆலோசனை களை கைத்தொழில் உறவுகள் பிரிவினரால் வழங்குகின்றனர்.




வரைபடம்.2.7பணிக் கொடை கொடுப்பனவு செய்யப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தலும் தீர்த்துவைத்தலும்.

### 2.2.3.3 தொழிலாளர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விஷேட ஏற்பாடுகள்)சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

ஊழியருடைய சேவையை முடிவுறுத்துவது சம்பந்தமாக சட்டதிட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.தன்னிச்சையாக மற்றும் அநீதியான வகையில் சேவையை முடிவுறுத்தலை குறைத்தல், சுற்றாடல் மாற்றங்களின் விளைவாக சேவையினை இழக்கின்ற ஊழியர்களுக்கு நியாயமான மற்றும் நீதியான வகையில் சலுகை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியில் மாறுபாடுகளுடன் தமது வியாபாரத்தினை பலப்படுத்துவதற்கு எடுக்கும் தந்திரோபாயங்களை மேலதிக ஊழியர்களை துரிதமாக நீக்குவதற்கு அவசியமான ஏற்பாடுகளை வியாபார சமூகத்திற்கு வழங்குதல் ஆகிய விடயங்கள் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தனியார் பிரிவில் ஊழியர்கள் சம்பந்தமாக ஊழியரின் விருப்பம் அல்லது தொழில் ஆணையாளருடைய முன்கூட்டிய எழுத்துமூல அனுமதி இன்றி நடத்தப்படுகின்ற சேவையிலிருந்து முடிவுறுத்தவது அநீதியான சேவை முடிவுறுத்தல் ஆகும். (விதிவிலக்கானவர்களுக்கு கீழ்) அநீதியான சேவை முடிவுறுத்தல் சம்பந்தமாக சலுகை கோரி தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்வற்கு ஊழியருக்கு உரிமை உள்ளதோடு, அவ்வாறான முறைப்பாடுகள் சம்மந்தமாக எஞ்சியுள்ளவற்றை சேவை முடிவுறுத்தும் பிரிவினால் முன்னெடுக்கப்படும்.

ஏதாவது நியாயமான காரணத்தின் பேரில் ஊழியருக்கு அல்லது ஊழியர் குழுவினருக்கு சேவையை முடிவுறுத்துவதற்கு சேவை வழங்குநருக்கு அவசியமாகுமிடத்து, குறித்த சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்றினை சமர்ப்பிக்க முடிவதோடு, அவ்வாறான சேவை வழங்குநரின் விண்ணப்பப்பத்திரம் சம்பந்தமாகவும் எஞ்சியுள்ள நடவடிக்கையினை சேவையை முடிவுறுத்தும் பிரிவினரால் நடாத்தப்படும். ஊழியர்களின் முறைப்பாடுகள் சேவை வழங்குநரின் விண்ணப்ப பத்திரம் சம்பந்தமாக குறித்த தரப்பினரை அழைத்து விசாரணகள் நடத்தி ஆணை பிறப்பிப்பதும் இந்த பிரிவினர் மூலம் நடத்தப்படுவதோடு, அந்தக் கட்டளையும் நீதிவான் நீதிமன்றத்தின் மூலம் செயற்படுத்தக் கூடிய கட்டளை ஆகும்.


### 2.2.3.4 தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

அரசியலமைப்புச் சட்டத்தில் iii அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள, அடிப்படை உரிமைகளின் கீழ்பந்தி இல 14 (ஈ) வில் “சகல பொதுமக்களுக்கும் தொழிற் சங்கங்கள் அமைப்பதற்கும் மற்றும் தொழிற் சங்கங்களில் சேருவதற்கும் சுதந்திரமான உரிமை உண்டு.” என்று உள்ளடக்கப்பட்டு பொதுமக்களின் பேச்சு கூட்டங்கள் மற்றும் ஒன்று கூடும் சுதந்திரம் என்பன

உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்கும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டும் தொழிற் சங்கங்களை தோற்றுவிப்பதற்கு நடத்திக் கொண்டு போவதற்கு மற்றும் அதன்படி தமது உரிமைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும் ஊழியர்களக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கைத்தொழில் சமாதானம் மீறப்படும் போது தொழில் வழங்குநர் ஊழியர்கள் இருசாராரிடமும் முன் வைக்கப்படுகின்ற நியாயமான மற்றும் நீதியுள்ளதுமான சமனான அவதானத்துடன் கூடிய, கவனத்திற் கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதற்காக தனித்தனி ஊழியர்களாக இல்லாமல் கூட்டாக விடயங்களை விளக்குவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வது தொழிற்சங்கம் அமைப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் நடைபெறுகின்றது.





வரைபடம் 2.8 தொழில் சங்கங்களை பதிவு செய்தலும் இரத்து செய்தலும் - 2018
(2018.12.31 ம் திகதியில் செயற்படுத்தப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 1909 ஆகும்.)

### 2.2.3.5 விசேட நுண்ணாய்வு நடவடிக்கைகள்

சாதாரணமான வகையில் நடைபெறுகின்ற தொழிலாளர் விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள் விசாரணைகளுக்கு மேலதிகமாக ஏதாவது முறைப்பாடு நுண்ணாய்வுக்கோ அல்லது நிறுவன (ஊழியர்கள்) விசாரணை நடத்தப்பட்ட விதம் சம்பந்தமாக போதிய தற்றுணிபு ஏற்படாத நபரினால் சுயாதீன விசாரணை மீண்டும் வழங்குமாறு கோரும் கோரிக்கை அனுப்பப்படுவது விஷேட நுண்ணாய்வு பிரிவுக்காகும். தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையுடன் இலங்கையில் வேண்டிய இடத்தில் நுண்ணாய்வு நடவடிக்கைகளை மேற் கொள்ளும் அதிகாரம் இந்த பிரிவுக்கு இருக்கிறது. அதேபோலஅவசரமான மற்றும் விரைவான விசாரணைகளும் மற்றும் விஷேட நுண்ணாய்வு கடமைகளும் செய்யப்படுவதால் இந்தப் பிரிவு திணைக்களத்தின் விஷேட பிரிவாகும்.

ஜனாதிபதி காரியாலயம், பாராளுமன்ற உபதேச குழு, பொதுமுறைப்பாட்டு குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஒம்புட்ஸ்மன் காரியாலயம், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் காரியாலயத்தின் மூலம் அனுப்பப்படுகின்ற முறைப்பாடுகளின் விசாரணை பகுதியளவு அரச நிறுவனங்களக்குரிய குறித்த முறைப்பாட்டு விசாரணைகள் மற்றும் காரியாலய மற்றும் நிலையத்தின் முறைப்பாடுகள், விசாரணை செய்தல் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கை செய்தல் விசேட நுண்ணாய்வு பிரிவின் பொறுப்பாகும்.

அதன்படி, 2018ம் வருடத்தில் முறைப்பாடு விசாரணைகள் 501 நடைபெற்றதோடு கணக்கெடுக்கப்பட்ட நிலுவைப்பணத்தின் பெறுமதி 141776811.58 ரூபா ஆகும்.




வரைபடம் 2.9 விஷேட நுண்ணாய்வு செயற்பாடுகள் - 2018

# 3. தொழிலாளர்களின் உரிமைகளை தரநிர்ணயம் செய்தல்

## 3.1. அறிமுகம்

தனியார் பிரிவில் தொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாப்பதற்கும் நலன்புரி விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் சம்பளம் சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தமாக தரநிர்ணயம் தயாரித்தல் இற்றைப்படுத்தல் மற்றும் அதற்குரிய சட்டரீதியிலான நிலமையினை வழங்குதல் திணைக்களத்தில் தொடர்ச்சியான செயற்பாடாகும்.சேவை நிலைமை மற்றும் நிபந்தனைகளில் குறித்து எழுகின்ற சிக்கலான நிலமைகளை தீர்த்து வைப்பதற்கும் அதற்குரிய விளக்கத்தினை வழங்குவதற்கும் தரநிர்ணயம்நடைமுறைப்படுத்தலில் உள்ள முன்னேற்றத்தினை போன்றே மேற்பார்வை விடயமும் நிறைவேற்றுவதன் மூலம் தொழிலாளரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு இந்த செயற்பாடுகள் முக்கியமான பகுதியாவதோடு இது முழுப்பொறுப்புக்களையும் நிறைவேற்றும் திணைக்களத்தின் தொழில் தரநிர்ணயப் பிரிவினரால் நடத்தப்படும்.

## 3.2 வினைப்படுத்தும் சட்டரீதியிலான ஏற்பாடுகள்

3.2.1. 1947ம் இலக்க சம்பள கட்டுப்பாட்டாளர் சபை கட்டளைச்சட்டம்

3.2.2. 1954ம் ஆண்டின் 19ம் இலக்க கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சம்பந்தமான (சேவை மற்றும் சம்பளம் முறையான வகையிலான) சட்டம்

3.2.3 2005ம் ஆண்டின் 36ம் இலக்க ஊழியர்களின் வரவு செலவு திட்ட நிவாரண கொடுப்பனவு சட்டம்

3.2.4 2016ம் ஆண்டின் 03ம் இலக்க தசிய குறைந்த சம்பளச் சட்டம்.

3.2.5 2016ம் 4ம் ஆண்டின இலக்கஊழியர்களின் வரவு செலவு திட்ட நிவாரண கொடுப்பனவு சட்டம்

## 3.3 சட்டரீதியிலான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலயங்களில் தொழில் உத்தியோகத்தர்களால் நடத்தப்படுகின்ற நிறுவன விசாரணைகளில் (தொழிலாளர் விசாரணை) குறித்த சட்டரீதியிலான ஏற்பாடுகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான விசாரணைகள் நடத்தியதோடு, ஏற்பாடுகளை மீறியதாக முறைப்பாடு முன் வைக்கப்பட்டதோடு அதனைப் பரிசோதனை செய்து தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.2.1. சம்பள கட்டுப்பாட்டுச் சபை கட்டளைச் சட்டம்

3.2.1.1 சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக தொழில் தரநிர்ணயப்பிரிவின் பொறுப்புக்கள்

3.2.1.1.1 தொழில் வழங்குநர் ஊழியர்களின் பிரதிநிதிகளை நியமித்தல் மற்றும் சம்பளக்கட்டுப்பாட்டாளர் சபை ஸ்தாபித்தல் தீர்மானங்களை அறிக்கை செய்தல் மற்றும் அவ் அறிக்கைகளை பிரசித்தப்படுத்தல் ஆகிய விடயங்கள்களுக்குரிய ஏற்பாடுகளைத் தயாரித்தல். சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானங்கள் பத்திரிகைகள்ஃ வர்த்தமானியின் மும்மொழியிலும் பிரசுரித்து மக்கள் கருத்துக்காக 14 வேலை நாட்கள் வழங்கப்படும் ஏதாவது திருத்தம் முன்வைக்கப்பட்டால், மீண்டும் சம்பளக் கட்டுபாட்டுச் சபை கூடி மீண்டும் மாற்றம்செய்து கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் பெற்றபின், வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் அத்தீர்மானம் சட்ட ரீதியானதாக கருதப்படும்.

3.2.1.1.2 நடைமுறைப்படுத்தப் படும் சபைகளில் பதவிகளை விருத்தி செய்து முறையற்ற பிரிவின் ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்

3.2.1.1.3 மாற்றமடையும் பொருளாதார சமூக சூழலில் போதியளவு ஊழியர் எண்ணிக்கையுள்ள ஊழியர் தொழிற்சாலைகளை இனம் காணுதல் மற்றும் அவற்றுக்குரிய தகவல்கள் மாவட்ட தொழிற்சாலைக் காரியாலயம் மூலம் சேர்த்தல் மற்றும் புதிய சபைகள் அமைக்க நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

3.2.1.1.4 தற்போது அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பாவிக்கப்படாத சேவைத் தொகுதி இருப்பதால் அவற்றினை இனம்கண்டு புதிய சேவைத் தொகுதிகளாக இற்றைப்படுத்தி தீர்ப்பு வழங்குதல். (உதாரணம்: இறப்பர் வளர்த்தல்கைத்தொழில் துறைமுக கப்பல் மற்றும் துறைமுகங்கள் என்பவற்றில்போக்குவரத்து கைத்தொழில்)

3.2.1.1.5 குறித்த சம்பளக் கட்டுப்பாட்டுச் சபைக்குரிய குறைந்த சம்பளத்தை இற்றைப்படுத்தல்

### 3.2.1.2 சட்டத்தின் ஏற்பாடுகள்

கைத்தொழில்களில் சேவை புரிகின்றவர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதிய முறைமையினை ஆக்குவதற்காக சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையை அமைத்தல் மற்றும்நிறுவதற்காகவும் அந்த விடயங்கள் சம்பந்தமாக அல்லதுஅதனோடு இணைந்த வேறு விடயத்திற்காக ஏற்பாடுகளைக் கவனிப்பது இந்தச்சட்டத்தின் நியமத்தின் படி நடைபெறும். ஆதலால் ஏதாவதுவேலைக்காக செலுத்தப்பட வேண்டிய குறைந்த சம்பள அளவு, வேலை செய்ய வேண்டிய நேரம், விடுமுறை வழங்க வேண்டிய கால எல்லைக்குள் மற்றும் அதற்குரிய விடயங்கள் சம்பந்தமான நியமங்கள் மற்றும் அந்த நியமங்கள்

உருவாக்குவதற்கு குறித்த சட்டரீதியான நிலைமைகள் சம்பந்தமான ஏற்பாடுகள் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்படும்.

சம்பளக் கட்டுப்பாட்டுச் சபை கட்டளைச்சட்டம்02 பிரிவுஆகும்

1. சகல கைத்தொழிலுக்குமுரிய குறித்த பொது ஏற்பாடுகள்
2. திட்டமான 44 கைத்தொழிலுக்குமான ஏற்பாடுகள் (சம்பள கட்டுப்பாட்டுச்சபை 44)

**1ம் பகுதி - சகல தொழில்களுக்குமான குறித்த பொது ஏற்பாடுகள்**

சம்பளக் கொடுப்பனவு சம்பளத்திலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட குறைப்புகள் சம்பளம் வழங்க வேண்டிய திகதி போயாவிடுமுறை தினம் மற்றும் போயா தின சேவையில் ஈடுபடுத்துவதற்கு குறித்த கொடுப்பனவுகள், நியமங்கள், சம்பள அறிக்கைக்கு உள்ளடக்கப்பட்ட விடயங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளை சகல கைத்தொழில்களுக்கும் குறித்தபடி சம்பள கட்டுப்பாட்டாளர் சபை கட்டளைச் சட்டத்தின் 1ம் பகுதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2ம் பகுதி - திட்டவடட்மான கைத்தொழில் 44 க்கு உரிய ஏற்பாடுகள் (சம்பள கட்டுப்பாட்டாளர் சபை 44)**

சம்பள கட்டுப்பாட்டாளர் சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதாவது கைத்தொழில் அப்படியான கைத்தொழிலின் கிளை அல்லது கைத்தொழில், ஏதாவது விடயம் அல்லது செயற்பாட்டிற்காக நிருவாக சபை ஒன்றினை நிறுவதற்கு தொழில் அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. சம்பள கட்டுப்பாட்டாளர் சபை ஒன்று சேவை வழங்குனர், ஊழியர் மற்றும் அமைச்சரால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஆகிய மூவர் அடங்கிய இயந்திரமாகும்.

இங்கு கைத்தொழில் என்பது எவராவது சேவை வழங்குநரால் அல்லது தொழிலாளர் ஒருவரால் செய்து நிறைவேற்றும் அல்லது யாராவது சேவை வழங்குநர் அல்லது தொழிலாளர் சேவை புரியும் ஏதாவது கைத்தொழில் வியாபாரம், விடயங்கள் தொழில் வேலை அல்லது செய்யும் கைத்தொழில் ஏதாவது கிளையில், விடயம் அல்லது ஏதாவது செயற்பாடு உள்ளடக்கப்படும்.

### 3.2.1.3. சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபையின் பொறுப்புக்கள்

அந்தந்த சம்பள கட்டுப்பாட்டாளர் சபைகளுக்கு குறிப்பிட்ட குறைந்த சம்பளத்தினை தீர்மானிக்க சேவை செய்யும் கால எல்லையினை தீர்மானிப்பது (ஒரு நாளைக்கு / வாரத்துக்குரிய குறித்த மணிக்கணக்கு) வேலை செய்ய வேண்டிய நாட்களின் எண்ணிக்கை, மேலதிக நேரம், வார விடுமுறை தினங்கள் மற்றும் அதற்குரிய ஏற்பாடுகள் வருடாந்த விடுமுறையில் மற்றும் அவற்றினைக் கணிக்கும் விதம் பகிரங்க விடுமுறை நாட்களின் எண்ணிக்கை மற்றும் அத்திகதிகளில் சேவையில் ஈடுபடும் போது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய விதம் என்னும் விடயங்களை சுருக்கி அந்தந்த கைத்தொழிலுக்கு உரிய தீர்மானத்தினை எடுப்பது அவற்றின் சட்டரீதியிலான ஏற்பாடுகளாக அமையும்.

இதற்கு மேலதிகமாக சம்பளம் சேவை நிலமை மற்றும் நிபந்தனைகள் நிறுவுதல் நிகழும்.

### 3.2.2 கடை மற்றும் காரியாலய தொழிலாளர்கள் சம்மந்தமாக (சேவை மற்றும் சம்பளம் முறையாக்குதல்) சட்டம்

சடைகளில் மற்றும் காரியாலயங்களில் வேலை புரியும் வேளைகளில் மற்றும் அவற்றிலுள்ள ஊழியர்களினதும் வசதி வாய்ப்புக்களை முறைமையுடன் செய்தல் சம்பளத்தினை முறைமையுறச் செய்தலும் சடை திறந்து வைக்கக் கூடிய வகையில் நேரங்களை தீர்மானித்தல் சம்பந்தமாக ஏற்பாடுகள் இந்தச்சட்டத்தில் அடங்கியுள்ளது.

சடை மற்றும் காரியாலயங்களில் சேவை புரிகின்ற ஊழியர்களில் சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகளை நியமம் செய்தல் முன்னேற்றுதலின் கீழ் வேலை செய்யும் நேரங்களை நியமம் செய்தல். வாரவிடுறை தினங்களை நியமம் செய்தல் மற்றும் உரிமையுள்ள வகையில் வேலை விடுமுறை தினம் வருடாந்த விடுமுறை தினங்களின் எண்ணிக்கை மற்றும் பொதுவிடுமுறை தினங்களின் எண்ணிக்கை மேலதிக நேரம் கணக்கிடும் விதம் மற்றும் ஊழியர்களுக்காக வழங்க வேண்டிய வசதிகள் சம்மந்தமாக நியமங்கள் சட்டமாக்கப்பட்டுள்ளன. அதே போல ஊழியர்கள் வேலைக்கு ஆட்சேர்க்கும் போது நியமனக்கடிதம் வழங்குவது, வேலை நியமனக் கடிதத்ததுடன் உள்ளடக்கி இருக்க வேண்டிய விடயங்கள் சம்மந்தமாகவும் குறிப்பிடப்படும் இருசாராருக்குமிடையே ஏற்படுத்திற் கொண்ட வேலை ஒப்பந்தத்தின் படி தீர்மானிக்கப்படுகின்ற சம்பளம் மற்றும் வேலை நிபந்தனைகள் எனும் விடயம் தொடர்பான விபரங்கள் நியமனக் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் காட்டப்படுகின்றது. சடை மற்றும் காரியாலய ஊழியர் சம்மந்தமான சட்டத்தின் கீழ் வரவு மற்றும் வெளியேறுதல் பதிவேடுகள், விடுமுறைப் பதிவேடுகள், சம்பளப் பதிவு ஊழியர்கள் அறிக்கை, நியமனக் கடிதம் மற்றும் தனிப்பட்ட கோப்பு நடைமுறைப்படுத்தப்படும் பதிவேடுகள் ஆகும்.

## 3.2.3 வரவு செலவு சலுவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டம்

2005ம் ஆண்டின் 36ம் இலக்க ஊழியர்களின் வரவு செலவு சலுவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டம்.

தொழில் வழங்குநர்களால் ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்குதற்காக அதற்கு தற்செயலான விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் திட்டமிடுவதற்கான சட்டமாகும்.

ஏதாவதொரு கைத் தொழிலில் சேவை புரியும் 20000/- குறைந்த சம்பளம் பெறும் சகல ஊழியர்களுக்கும் மாதாந்தம் 2005.08.01ம் திகதியில் இருந்து 1000/- கொடுப்பனவுக்கு உரிமை உண்டு. இந்தக் கொடுப்பனவு சகல நியதிச்சட்ட உரித்துக்களுக்கும் உரியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

2016ம் ஆண்டின் 4ம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரண கொடுப்பனவுச் சட்டம்

சேவை வழங்குரால் ஊழியர்களுக்கு வரவு செலவு சட்டத்தின் நிவாரண கொடுப்பனவு வழங்குவதற்காகவும் தற்செயலான விடயங்களாக ஏற்பாடுகளைத்திட்டமிடுதற்காகவுமான சட்டமாகும். ஏதாவது கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் 40000/- குறைந்த சம்பளம் பெறுகின்ற சகல ஊழியர்களுக்கும் 2015.05.01ம் திகதியில் இருந்து ரூபா 1500/- கொடுப்பனவும் 2016.01.01 ம் திகதியிலிருந்து மேலும் ரூபா 1000/- மொத்தம் 2500/- என்ற வகையில் கொடுப்பனவும் கிடைப்பதற்கு உரிமைகிடைக்கின்றது. அக்கொடுப்பனவு சகல நியதிச்சட்ட உரிமைகளுக்கும் உட்பட்டதாகும்.

### 3.2.4 தேசிய குறைந்த சம்பளச் சட்டம்

தொழில் வழங்குநரால் ஊழியர்களுக்கு கொடுபட வேண்டிய குறைந்த சம்பளம் மற்றும் அதனோடு தற்செயலான விடயங்களுக்காக ஏற்பாடுகள் திட்டமிடுவதற்குமான சட்டமாகும்.

ஏதாவது கைத்தொழிலுள்ள சகல ஊழியர்களுக்கும் குறைந்த மாதாந்த சம்பளமாக ரூபா 10000/- க்கு குறையாத சம்பளம் வழங்க வேண்டும் என சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2016.01.01ம் திகதி கொடுப்பனவுக்கு அச்சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.2.5 தொழில் உரிமையினை தரப்படுத்தலைத் தவிரதொழில் தரப்படுத்தல் பிரிவு மூலம் நடத்தப்படும் ஏனைய விடயங்கள்

சம்பளத்தில் குறைப்பதற்காக அனுமதி வழங்குதல்
பொது விடுமுறை தினங்களில் சேவையிலீடுபடுத்த குறித்த அனுமதி வழங்குதல்
5 நாட்கள் வேலை வாரத்திற்காக அனுமதி வழங்குதல்
நடைமுறைப்படுத்தப்படுகின்ற 5 வது சட்டத்தின் படி, சட்டரீதியிலான தெளிவுகளை வழங்குதல்
கூட்டு ஒப்பந்தங்களுக்கு சட்டரீதியிலான செல்லுபடித்தன்மையினைப் பரிசோதித்தல்
சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானத்தினை இற்றைப்படுத்தல்
சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானப் புத்தகம் தயார் செய்தல் (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம் போன்ற மொழிகளில்)

## 3.4 நிறைவேற்றப்பட்ட விடயங்கள் - 2018

| தொடர் இல | சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபை | சம்பளம் இற்றைப்படுத்து வதற்கு முன்குறைந்த மாதாந்த சம்பளம் | சம்பளம் இற்றைப்படுத் துவதற்கு பின் குறைந்த மாதாந்த சம்பளம் (அடிப்படைச் சம்பளம்) |
|---|---|---|---|
| 1 | **தோட்டத்துறை** | | |
| 1.1 | தேயிலை வெளிநாட்டுக்கு அனுப்பும் கைத்தொழில் | 9,660.00 | 14,000.00 |
| 1.2 | இறப்பர் வெளிநாட்டுக்கு அனுப்பும் கைத்தொழில் | 8,970.00 | 13,000.00 |
| 1.3 | தென்னை வளர்ப்புக் கைத்தொழில் | 9,520.00 | 12,520.00 |
| 2 | **உற்பத்தித்துறை** | | |
| 2.1 | தோல்பதப்படுத்தல் பாதணிகள் தொல் பொருட்கள் கைத்தொழில் | 9,660.00 | 14,500.00 |
| 2.2 | ஐஸ் குளிர்பானம் பழச்சாறு ஜேம் தயாரித்தல் கைத்தொழில் | 9,315.00 | 13,000.00 |
| 2.3 | பிஸ்கட் மற்றும் இனிப்பு பண்டங்கள் கைத்தொழில் | 9,660.00 | 13,000.00 |
| 2.4 | உடைகள் தயாரிக்கும் கைத்தொழில் | 8625.00 | 12,000.00 |
| 2.5 | பீங்கான பொருட்கள் உற்பத்தி கைத்தொழில் | 8,970.00 | 11,000.00 |
| 2.6 | பேக்கரி கைத்தொழில் | 8970.00 | 10,070.00 |
| 2.7 | சீலைகள் உற்பத்தி கைத்தொழில் | 9660.00 | 10,000.00 |
| 2.8 | இறப்பர் பிளாஸ்டிக் மற்றும் பெற்றோலியம் ரெசின் அடங்கிய பொருட்கள் உற்பத்தி கைத்தொழில் | 9315.00 | 10,000.00 |
| 3 | **சேவைத்துறை** | | |
| 3.1 | நுர்சிஸ் வீடு கைத்தொழில் (நேர்ஷிங் ஹோம்) | 9,315.00 | 12,500.00 |

| | | | |
|---|---|---|---|
| 3.2 | சினிமாக் கைத்தொழில் | 8,850.00 | 12,000.00 |
| 3.3 | சில்லறை மற்றும் மொத்த வியாபாரக் கைத்தொழில் | 8970.00 | 11,500.00 |
| 3.4 | ஹோட்டல் மற்றும் போசணைகள் வழங்கும் கைத் தொழில் | 9660.00 | 10,000.00 |
| 3.5 | அச்சிடல் கைத்தொழில் | 8970.00 | 10,000.00 |
| 3.6 | பாதுகாப்பு சேவைக் கைத்தொழில் | 8820.00 | 10,000.00 |
| 3.7 | மோட்டார் வாகன போக்குவரத்து கைத்தொழில் | 8625.00 | 10,000.00 |
| 3.8 | துப்புரவு சேவைக் கைத்தொழில் | 380.00 * | 600.00 * |

*ஒருநாள் சம்பளம்

அட்டவணை 3.1 - 10000/- க்கு குறைந்த சம்பளத்தினை சம்பளக் கட்டுப்பாட்டாளர்

| தொடர் இல | விடயங்கள் | கிடைத்த கோ-ரிக்கை எண்ண-ிக்கை | நிராகரிக்கப் பட்ட கோரிக்கை எண்ணிக்கை | அங்கீகரிக்கப் பட்ட குறித்த கோரிக்கை எண்ணிக்கை | அனுமதி பெற-ப்பட்ட கோரி-க்கை எண்ணி-க்கை |
|---|---|---|---|---|---|
| **01** | ஐந்து நாட்கள் வேலையுடன் கூடிய ஒரு கிழமைக்க கிடைக்கும் கோரிக்கைக்காக அனுமதி வழங்குதல் | **400** | **42** | **89** | **269** |
| **02** | கூட்த ஒப்பந்தங்களில் சட்டரீதியிலான செல்லுபடியினை பரீசோதனை செய்தல | **44** | **01** | **11** | **61** |
| **03** | 2016ம் ஆண்டின் 04ம் இலக்க வரவு செலவு கொடுப்பனவு சட்டத்தின் கீழ் தெளிவாக்குதல் மற்றும் சட்ட ரீதியிலான வரைவிலக்கணம் வழங்குதல | **44** | **00** | **17** | **27** |
| **04** | 2016ம் ஆண்டின் 03ம் அலக்க தேசிய குறைந்த சம்பளத்திட்டத்தின் கீழ் தெளிவுபடுத்தல் மற்றும் சட்டரீதியிலான வரைவிலக்கணம் வழங்குதல் | **04** | **00** | **00** | **04** |
| **05** | சும்பளக் கட்டுப்பாட்டாளர் சபைக் கட்டளைசட சட்டத்தின் கீழ் தெளிவு செய்தல் மற்றும் சட்டரீதியிலான வரைவிலக்கணம் வழங்குதல் | **131** | **00** | **00** | **131** |
| **06** | கடை மற்றும் காரியாலய சட்டத்தின் கீழ் தெளிவு தெளிவுப்படுத்தல் மற்றும் சட்டரீத-ியிலான வரைவிலக்கணம் வழங்குதல | **79** | **00** | **00** | **79** |

அட்டவணை 3.2 அனுமதி / சட்டரீதியிலான வரைவிலக்கணம் சட்டரீதியான செல்லுபடித் தன்மையினை பரிசோதித்தல்.- 2018

| மொழி பெயர்ப்பு செய்வதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கை | தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்த எண்ணிக்கை |
|---|---|
| 38 | 11 |

அட்டவணை 3.3 சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானம் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் - 2018

| தொடர் இல | திகதி | பங்கபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 2018.03.08 | 03 | மகியங்கணை |
| 02 | 2018.03.09 | 04 | நுவரேலியா |
| 03 | 2018.05.17 | 10 | ஹட்டன் |
| 04 | 2018.05.25 | 14 | குருநாகல் |
| 05 | 2018.05.28 | 03 | பெலியத்த |
| 06 | 2018.06.08 | 10 | கஹவத்த |
| 07 | 2018.07.06 | 06 | மத்துகம |
| 08 | 2018.07.12 | 07 | அவிஸ்ஸாவெல |
| 09 | 2018.07.20 | 09 | காலி |

அட்டவணை 3.4 - புதிய நியமனங்கள் பெற்ற தொழில் உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்ற மீளாய்வு மற்றும் தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடத்துதல் - 2018

# 4. தொழிலாளர்களின் தொழில் சுகாதார பாதுகாப்பு மற்றும் விபத்துக்களற்ற வேலைச் சூழலை உறுதிப்படுத்தல்

## 4.1 தொழில் சுகாதார பாதுகாப்பு என உறுதிப்படுத்தல்

### 4.1.1 அறிமுகம்.

நடைமுறையிலுள்ள கைத்தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தின் படி, ஊழியர்களின் சுகாதார நிலைமையைப் பாதுகாக்கும் வகையில் சேவை நிலையத்தில் அதற்கான சூழலைத் தயாரிப்பது தொழில் வழங்குரின் கட்டாயமான பொறுப்பாவதோடு, பாதுகாப்புச் சேவை சூழலில் வேலை செய்வதற்குள்ள உரிமை ஊழியர்களின் அடிப்படை உரிமையாகும்.

தொழிலில் ஈடுபடும் வேலை சூழலின் பலவீனத்தினால் தொழிலாளர் நோய் நிலைமையினால் பீடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் திடீர் விபத்துக்களுக்கு ஆளாகுதலை குறைப்பதன் மூலம், தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய உயர்வான உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலன்புரியுடன் கூடிய சூழலில் சேவை நிலையங்கள் உருவாக்குவதற்காக அவசியமான கல்வி அறிவினை வழங்கவும் சேவை நிலையத்தினுள் நிலைமையினை பரிசோதனைக்கு உட்படுத்தி, தொழில் சுகாதாரப் பிரிவின் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அடிப்டையான சேவைச் சூழலில் ஏதாவது பலவீனத்தின் பேரில் உடனடியாக அல்லது நீண்ட காலமாக ஊழியர்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலமை உள்ளதா என விஞ்ஞான ரீதியின் கீழ் ஆராய்ந்து பார்த்து, அதன் மூலம் ஏற்படக் கூடிய சுகாதார பிரச்சினைகளின் அளவு மற்றும் தரத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விஞ்ஞான ரீதியான செயன் முறையின் நடைமுறைகள் அந்த விபத்துகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தவிர்ந்து கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் சம்மந்தமாக அறிவூட்டுதல் செய்கைமுறையில் நடத்தப்படுகிறது.

### 4.1.2 பொறுப்புக்கள்

4.1.2.1 சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு என பரிசோதனைக்கு உட்படுத்தல்.

4.1.2.2. சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பினை பாதுகாப்பதற்குத் தேவையான கல்வியினை வழங்குதல்.

4.1.2.3. வைத்திய சபைத் தீர்மானத்தை வழங்குதல்

4.1.2.4. தொழில் சுகாதார விடயங்களின் பேரில் நட்டஈட்டினை கோருவது சம்பந்தமாக நோய் நிலைமை உருவாவது மற்றும் சேவை நிலையங்களின் நிலைமை சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சியங்கள் வழங்குதல்.

4.1.2.5. ஊழியர் சேமலாப நிதியத்தினை மீளப்பெற விண்ணப்பிக்கும் சேவை புரிய முடியாதவகையில் நோயால் பீடிக்கப்பட்ட தொழிலாளர்களின் நோய் நிலைமையினை மதிப்பிடுதல்.

### 4.1.2.1 சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு உள்ளதா என பரிசோதனைக்கு உட்படுத்தல்

சேவை நிலையங்களில் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் / விபத்துகள் முக்கிய ஐந்து வகுதிகளின் கீழ் குறிப்பிடலாம். எவ்வாறெனில் பௌதீக விபத்துகள், இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் விபத்துகள், உயிரியல் விஞ்ஞானத்தின் காரணமாக ஏற்படும் விபத்துகள், சேவை நிலையத்தின் கட்டமைப்பில் ஏதாவது வகையில் நிகழுகின்ற விபத்துகள் மற்றும் உளவியல் சமூக விபத்துகள் ஆகும். இந்த விபத்துகள் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் உள்ளனவா என பரீட்சிப்பதற்காக இந்தப் பிரிவின் மூலம் பரீட்சைப் பிரிவுகள் பல நடத்தப்படுகின்றது. எவ்வாறெனில் சுற்றாடல் நிலைமை மேற்பார்வை, உயிரியல் விஞ்ஞான மேற்பார்வை, சட்டத்தை அளக்கும் பரிசோதனை ஆகும். இந்தப் பரிசோதனைகள் நடத்துவதற்கு அவசியமான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பிரிவில் உள்ளதோடு கட்டணம் செலுத்தாமல் இந்த பரிசோதனை நடைபெறுகிறது. சில நிறுவனங்கள் கட்டணம் செலுத்தி தனியார் நிறுவனங்களிலும் இந்தப் பரிசோதனை நடத்துகின்றது.

இலங்கையில் சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு சம்பந்தமாக உடன்படக் கூடிய அளவில் முன்னேற்றம் இல்லாததோடு, ஐக்கிய அமெரிக்க குடியரசு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் பாவிக்கப்படுகின்ற உடன்பாட்டின் பேரில் இது அளவீடு செய்யப்படுகின்றது.

### 4.1.2.2 சேவை நிலையங்களில் சுகாதாரப் பாதுகாப்பினை பாதுகாப்பதற்கு அவசியமான கல்வியினை வழங்குதல்

சேவை நிலையங்களில் ஊழியர்களின் சுகாதார பாதுகாப்பு சேவை வழங்குநரின் பொறுப்பு என அனேகமான ஊழியர்களால் கவனிக்கப்டுகின்றது. மறை எண்ணமானது நிறுவனத்தினுள் சுகாதார நிலைமையினை சேதமாக்கும் நிலைமையை உருவாக்கும் இது நிருவாகத்திற்கு பெரும் தடையாகும். ஆதலால் ஒவ்வொரு நபரும் இந்த விடயத்தில் கவனத்தை ஏற்பதன் மூலம் அவர்களின் நடத்தைகளை சரி செய்து, சௌக்கிய ரீதியிலான விபத்துகளை குறைப்பதற்கு அவசியமான விடயமாகும்

ஆதலால், உயர்மட்ட முகாமையாளலிரிருந்து கீழ் மட்ட ஊழியர் வரை ஒவ்வொரு மட்டத்திற்காகவும் உசிதமான அளவில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த பிரிவு மூலம் நடத்தப்படுகின்றது.

### 4.1.2.3. வைத்திய சபை தீர்மானத்தினை வழங்குதல்

வைத்திய காரணங்களுக்காக ஊழியர் சேமலாப நிதியினை காலம் முடிவதற்கு முன் பெறுகின்ற ஊழியர்களுக்காக வைத்திய சபை நடாத்தப்பட்டு தீர்மானம் வழங்கப்படுவது இப்பிரிவினாலாகும்.

### 4.1.2.4 ஏனைய செயற்பாடுகள்

“தேசிய தொழில் சுகாதார மற்றும் சுகாதார வாரம்” நினைவுகூரல்
சகல வருடங்களிலும் ஒக்டோபர் இரண்டாம் வாரம் இதற்கென பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018ம் வருடத்தில் பல நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 150 பேரின் பங்களிப்புடன் தேசிய தொழில் சுகாதார மற்றும் சௌக்கிய மாநாடு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இங்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கொஹ் அழைக்கப்பட்டு பிரதான அதிதிக்கான விரிவுரை நிகழ்த்தினார். அவ்வாறு நிறுவன மட்டத்தில் விரிவுரை நிகழ்த்த பட்டது. அவ்வாறு நிறுவன மட்டத்தில் இவ்வார நினைவு கூரலுக்காக, பலவகையான நிறுவனங்களுக்கு தேவையான தொழில் நுட்ப உதவிகள் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவினரால் வழங்கப்பட்டன.

### 4.1.3 தொழில் சுகாதாரப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் - 2018

| தொடர் இல | வேலைத் திட்டம் / செயற்பாடுகள் | 2017 வருட விசாரணைக்கு இலக்கான நிறுவ-னங்களின் எண்ணிக்கை | 2017 வருடத்தினுள் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 2018ம் வருடத்திற்கு விசாரணைக்கு இலக்கான நிறுவனங்களின் எண்ணிக்கை | 2018ம் வருடத்தினுள் பரிசோதனை செய்த நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | சுற்றாடல் அளவீட்டு எண்ணிக்கை | 110 | 45 | 150 | 170 |
| 02 | உயிரியல் விஞ்ஞான பரீசோதனை எண்ணிக்கை | 375 | 1235 | 1000 | 1905 |
| 03 | தொழில் சுகாதார மற்றும் பாதுகாப்பு கணக்காய்வு எண்ணிக்கை | 158 | 271 | 250 | 237 |
| 04 | அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்ககை | 220 | 210 | 230 | 222 |
| 05 | ஊ. சே. நிதி (EPF) மற்றும் ஊ. ந. நிதி. (ETF) வைத்திய சபை எண்ணிக்கை | 24 | 24 | 24 | 24 |
| 06 | தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்தமான வாரம் | 01 | 01 | 01 | 01 |
| 07 | கைத்தொழிற்சாலை விசாரணைகள் எண்ணிக்கை | - | 316 | - | 407 |

அட்டவணை 4.1 செயற்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றம்

## 4.2 விபத்துக்கள் அற்ற வேலை சூழலை உறுதி செய்தல்

### 4.2.1 அறிமுகம்

கைத்தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு பௌதீக ரீதியிலாக ஏதாவது உடல் பாதிப்புக்கள் ஏற்படுதல் மின்சாரம், வெப்பம் வாயு அமுக்கம், அதிகமாக வெளிச்சம் மற்றும் சத்தத்தின் மூலம் உடல் ரீதியிலான சேதம் அல்லது மரணம் கூட ஏற்படும் விபத்துக்கள் நடைபெறுகின்றன. அதனுள் விபத்துகள் ஏற்படுவதை குறைப்பது கைத்தொழில் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பாகும். இலங்கையில் தொழிற்சாலைகளில் சேவை புரிகின்ற ஆண், பெண் ஊழியர்களின் தொழில் பாதுகாப்புத் தன்மை சௌக்கிய மற்றும் நலன்புரிக்குரிய சட்டங்கள் 1942ம் வருடம் 45ம் இலக்க தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தில் மற்றும் அதற்கு அனுகூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளும் ஆகும். பெரும் துன்பமற்ற சேவை சூழலை உருவாக்குவதன் மூலம் சேதம் சம்பந்தமான பயமின்றி பாதுகாப்பான ஊழியர் படையணியினைத் தோற்றுவிப்பதன் மூலம் சேவை நிலையங்களில் வினைத்திறமை உயர்வடைந்து அதன் மூலம் தேசிய உற்பத்தி உயர்வடைந்ததும் தேசிய பொருளாதாரத்திற்கு காட்டுகின்ற பங்களிப்பு உயர்வடைவதும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.2.2 பொறுப்பு

முழு இலங்கையையும் தழுவியதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தொழிற்சாலை பரிசோதகர் பொறியியலாளர் காரியாலயம் 10 இல் சேவையிலுள்ள பொறியியலாளர்கள் 31 பேரினால் தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு இந்த விடயம் நிறைவேற்றப்பட்டதோடு, தொழில் உத்தியோகத்தர்களால் செய்யப்படுகின்ற தொழில் விசாரணைகளின் போது இனங்காணப்படுகின்ற ஆபத்துக்குரிய நிலைமைகள் மாவட்ட கைத்தொழிற்சாலைகளின் பரிசோதகர் பொறியியலாளர் காரியாலயத்திற்கு அறிக்கை அனுப்புவதனால், அந்த தகவல்களைப் பாவித்து ஊழியர்கள் பாதுகாப்பு திட்டமிடப்படுகின்றது. ஆரம்பமாக கைத்தொழில் ரீதியான பாதுகாப்பை திட்டமிடுவதற்காக கீழ் காணும் விடயங்கள் நிறைவேற்றப்படுகின்றது.

4.2.2.1.1 கைத் தொழில்சாலைகளைப் பதிவு செய்தல்

4.2.2.1.2 கட்டிட நிலஅளவைப்படத்தினை பரிசோதனை செய்து அங்கீகரித்தல்

4.2.2.1.3 தொழிற்சாலையினை பரிசோதனை செய்தல்

4.2.2.1.4 விபத்து நுண்ணாய்வு மற்றும் ஆபத்தான நிகழ்வுகள் நுண்ணாய்வு

4.2.2.1.5 சட்டரீதியிலான நடவடிக்கை எடுத்தல்

4.2.2.1.6 மிகவும் ஆபத்தான இயந்திரங்களின் பரிசோதனையை ஒழங்கு படுத்தல்

4.2.2.1.7 முறைப்பாடுகள் நுண்ணாய்வு

4.2.2.1.8 தெளிவுபடுத்தல் செயலமர்வினை நடத்துதல்

4.2.2.1.9 தொழில் விபத்துகள் மற்றும் நோய்களுக்கு உள்ளானவர்களை தொழில் நட்டயீட்டு ஆணையாளர் மற்றும் தொழிலாளர் அதிஷட நிதியத்திற்கு அனுப்புதல்

4.2.2.1.10 பிற நிகழ்ச்சித் திட்டங்கள்

4.2.2.1.11 தொழில் திணைக்களத்தின் மற்றும் அமைச்சின் பொறியியல் ரீதியான கடமைகளை நிறைவேற்றுதல்.

#### 4.2.2.1 புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்தல்

புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் போது அல்லது பதிவதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அந்த தொழிற்சாலைகள் பாதுகாப்பற்ற தன்மையை தவிர்ப்பதற்கு குறித்த முறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என பரிசீலனை செய்து பார்த்து அவ்வாறின்றேல் அவற்றை சரி செய்து கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் குறிப்பிட்ட தரம் மற்றும் உடன்பாடு பின்பற்றப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து அவை பின்பற்றப்பட்டிருந்தால் பதிவு செய்தல்.

2018ம் வருடம் முடிவடையும் போது இந்தப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 30050 மாத்திரமே. ஒருவருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட புதிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1429 ஆகும். இந்த தொழிற்சாலைகளில் ஆண் பெண் தொழிலாளிகளின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி ஆகியவற்றை மேம்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் மூலம் புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்தல் பிரிவின் மூலம் தொடர்ச்சியாக நடைபெறும்.

#### 4.2.2.2 கட்டிடங்களின் நில அளவைப்படத்தினை பரிசீலனை செய்தலும் அங்கீகரித்தலும்

கைத்தொழிற்சாலைகளுக்காக கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது, கைத்தொழிற்சாலை கட்டளைச் சட்டத்திற்கு அறைவ

ஏற்டபுடையதா என்பதை பரிசீலனை செய்வதும் மற்றும் அத்தாட்சிப்படுத்தலும் நடைபெறும். 2018ம் வருடத்தினுள் கட்டிடங்களின் நில அளவைப் படங்கள் 123 அத்தாட்சிப் படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

### 4.2.2.3 தொழிற்சாலைகளைப் பரிசோதனை செய்தல்

தமது காரியாலயங்களின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட தொழிற்சாலைகளைப் பரிசோதித்து விபத்துகள் ஏற்படும் நிலைமைகள் நிலவுகின்றனவா என்பதை பரிசோதித்து அவற்றை சரி செய்வற்கு அவசியமான ஆலோசனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வருடத்திலும் தொழிற்சாலைகள் பரிசோதனை இலக்கின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு அந்த இலக்கினை நிறைவேற்றுவதற்காக சகல உத்தியோகத்தர்களும் நடவடிக்கையை மேற்கொள்வர். 2018ம் வருடத்தினுள் 4,424 அளவிலான தொழிற்சாலைகள் பரிசோதனை செய்யப்பட்டன.

### 4.2.2.4 விபத்து நுண்ணாய்வு மற்றும் ஆபத்தான நிகழ்வுகளின் நுண்ணாய்வு

2018ம் வருடத்தினுள் மரண விபத்துகள் 103 மற்றும் மரணமற்ற விபத்துகள் 1,492 அளவில் இப்பிரிவிற்கு அறிவிக்கப்பட்டன. இந்த மரண விபத்துகள் முழுவதும் மரணமற்ற பாரதூரமான விபத்துகளை நுண்ணாய்வு செய்து அதன் பின்னர் காரணங்களைத் தேடுவதன் மூலம் அவ்வாறான விபத்துகள் மீண்டும் நிகழாதவாறு நடவடிக்கையினை மேற் கொள்வதற்கு நிறுவனத்தினை தெளிவுபடுத்தியும், தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தினை மீறிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் விபத்துகள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அந் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


| தொடர் இலக்கம் | விபத்து விதம் | புலனாய்வு செய்த எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மரணம் | 103 |
| 02 | மரணமற்ற | 106 |

அட்டவணை 4.2 விபத்து நுண்ணாய்வு செய்தல் 2018

### 4.2.2.5 சட்ட நடவடிக்கை எடுத்தல்

தொழிற்சாலைகள் பரிசோதனைகள் மற்றும் விபத்து நுண்ணாய்வுகளில் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தினை மீறியுள்ளதாக நிரூபிக்கப்படும் இடத்து அந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். 2018ம் வருடத்தினுள் சட்டத்தினை மீறியதற்காக குறித்த தொழிற்சாலைக்கு எதிராக 35 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள்




வரைபடம் 4.1 கைத்தொழில் கட்டளைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நீதிமன்ற செயற்பாடுகள் - 2018

### 4.2.2.6 மிகவும் ஆபத்தான இயந்திர பரிசோதனையை ஒழுங்கு படுத்தல்

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பரிசோதனை அறிக்கையினை பெறவேண்டிய தொழிற்சாலைகளில் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற இயந்திரங்களை பரிசோதனை செய்விப்பதற்கு நடவடிக்கையினை மேற் கொள்வது இந்தப் பிரிவினால் ஆகும். அவ்வாறு 2018ம் வருடத்தினுள் பரிசோதனைக்கு உட்பட்ட இயந்திர உபகரணங்களின் எண்ணிக்கை 8,407 ஆகும். இந்த பரிசோதனைகளின் அறிக்கையின் படி அந்த இயந்திரங்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதா என தேடிப்பார்த்து பாதுகாப்பான சேவை நிலையத்தினை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பது இந்தப் பிரிவின் கீழ் நடைபெறும்.

### 4.2.2.7. முறைப்பாடுகள் நுண்ணாய்வு

தொழிற்சாலைகளில் ஆண் பெண் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்தமான முறைப்பாடுகளை நுண்ணாய்வு செய்வதும் மற்றும் நிலவுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதும் இந்த பிரிவின் பொறுப்பாகும் 2018ம் வருடத்தினுள் 135 முறைப்பாடுகள் நுண்ணாய்வு செய்யப்பட்டன.

### 4.2.2.8 அறிவூட்டும் செயலமர்வை நடத்துதல்

தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேற்பாட்டு நடவடிக்கைகளின் போது சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைப் போல ஊழியர்கள் சேவை வழங்குனர்கள் ஆகிய இரு சாராரினதும் அறிவினை வளர்ப்பதும் மிக முக்கியமாகும். ஆதலால் இந்தப்பிரிவின் மூலம் ஊழியர்கள் தொழில் வழங்குனர்கள் ஆகிய இருசாராருக்குமாக அறிவூட்டும் செயலமர்வு நடத்தப்படுவதோடு இதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப கல்லூரிகளில் கல்வி பயிலுகின்ற மாணவ மாணவிகளுக்காகவும் அறிவூட்டும் செலயமர்வு நடைபெறும். 2018ம் வருடத்தினுள் 173 செயலமர்வுகள் நடத்தப்பட்டதோடு அந்த செயலமர்வுக்காக 14,132 நபர்கள் பங்குபற்றினார்கள். இதற்கு மேலதிகமாக கையேடுகள் விநியோகிக்கப்பட்டதன் மூலம் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு அறிவூட்டுதலும் நடைபெற்றது. 2018ம் வருடத்தினுள் கையேடுகள் 12,000 மட்டில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன.



படம் 4.1 2018.11.16ம் திகதி தேயிலை தொழிற்சாலை ஊழியர்களுக்காக நுவரேலிய மாவட்ட செயலக காரியாலயத்தில் நடைபெற்ற செயலமர்வு.



படம் 4.2 2018.05 24ம் திகதி குருநாகல் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வு.

| தொடர் இல | குறிப்பிட்ட பிரிவு | நடைபெற்ற செயற் திட்ட எண்ணிக்கை | பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட பணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | நிர்மாணம் | 78 | 4690 | 470,000.00 |
| 02 | ஆடைக் கைத்தொழில் | 30 | 2690 | 300,000.00 |
| 03 | வேறு உற்பத்தி | 37 | 2820 | 250,000.00 |
| 04 | வேறு | 9 | 1200 | 180,000.00 |
| 05 | மொத்தம் | 154 | 11400 | 1,200,000.00 |

அட்டவணை 4.3 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் - உற்பத்தி துறையின் படி

| நடைபெற்ற தினம் | பயிற்சி செயற் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 2018.03.13 - 2018.11.29 | 19 | 2732 | 1,212,014 |

அட்டவணை 4.4 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் - வேறு

| வருடம் | பயிற்சி செயற்திட்டம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 2018 | 02 | 75 | 59,700.00 |

அட்டவணை 4.5 உத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

### 4.2.2.9 தொழில் ரீதியிலான விபத்து மற்றும் நோய்களுக்கு உட்பட்டவர்கள் தொழில் நட்டயீட்டு ஆணையாளர் மற்றும் தொழில் அதிஷ்ட நிதியத்திற்கு அனுப்பி வைத்தல்

2018ம் வருடத்தினுள் அறிக்கையிடப்பட்டுள்ள மரண விபத்துகள் 103 நிரந்தரமாக பலவீனத்திற்கு உட்பட்ட விபத்துகள் 102 மற்றும் தொழில் ரீதியிலான நோய்கள் 11 தொழில் நட்டயீட்டு ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டயீட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் கல்வியைப் பெறுகின்ற பிள்ளைகளுக்காக புலமைப் பரிசில் பெற்றுக்கொடுப்பதற்கும் குறித்த தகவல்கள் தொழில் அதிஷ்ட நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.2.2.10 பிற நிகழ்ச்சித்திட்டங்கள்

#### உலக பாதுகாப்பு தினத்தினை நினைவுகூரல்

2018.04.27ம் திகதி உலக பாதுகாப்பு தினத்திற்காக தொழில் திணைக்களத்தில் கைத்தொழில் ரீதியான பாதுகாப்பு தினத்திற்காக, தேசிய கலந்துரையாடலொன்று கௌரவ அமைச்சரின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டது. அது தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் 10வது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் தொழில் வழங்குனர்கள், தொழிலாளர்கள் 250 பங்குபற்றுதலோடு நடத்தப்பட்டது

#### தேசிய தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் சௌக்கிய வார நினைவுகூரல்

தேசிய தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் சௌக்கிய வாரம் சம்பந்தமாக நடைபெற்ற தேசிய கலந்துரையாடல் 2018.10.11 ம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையின் கீழ் கொழும்பு 7 சௌசிறிபாய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தொழில் வழங்குனர்கள் 250 தொழிலாளர்களுக்காக தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் சௌக்கியம் சம்பந்தமான விரிவுரை மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

### 4.2.2.11 தொழில் திணைக்களத்தின் மற்றும் அமைச்சின் பொறிபொறிகள் ரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

திணைக்களத்தில் மற்றும் அமைச்சில் சில பொறியிலாளருக்கான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதும் இந்தப் பிரிவின் மூலம் நிறைவு செய்யப்படுகிறது. இதன் கீழ் திணைக்களத்தில் மற்றும் அமைச்சில் வாகன பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதும் பெறுகைக் குழுக்காக தொழிநுட்ப மதிப்பீட்டறிக்கை வழங்கப்படுவதும் நடைபெறுகிறது.

| செயற்பாடு | நிறைவேற்றப்பட்ட எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2016ம் வருடம் | 2017ம் வருடம் | 2018ம் வருடம் |
| 4.3.1 புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்தல் | 1372 | 1464 | 1,429 |
| 4.3.2 கட்டிட நில அளவைப்படம் பதிவு செய்தலும் அத்தாட்சிப்படுத்தலும் | 149 | 151 | 123 |
| 4.3.3 கைத் தொழில்சாலைகளை விசாரணை செய்தல் | 4975 | 4943 | 4,424 |
| 4.3.4 விபத்து விசாரணை மற்றும் ஆபத்தான விபத்துகளின் ஆய்வு | 151 | 165 | 209 |
| 4.3.5 சட்டரீதியிலான நடவடிக்கைகளை மேற் கொள்ளல் | 13 | 15 | 35 |

| | | | |
|---|---|---|---|
| 4.3.6 அதிக ஆபத்தான இயந்திர பரிசோதனைகளை ஒழுங்குபடுத்தல் | 9007 | 7530 | 8,407 |
| 4.3.7 முறைப்பாடு விசாரணை | 103 | 98 | 135 |
| 4.3.8 அறிவூட்டும் செயலமர்வினை நடத்துதல் | 177 | 189 | 199 |
| 4.3.9 தொழில் ரீதியான விபத்துக்கள் மற்றும் நோய்களுக்கு ஆளாகுகின்றவர்களை தொழில் நட்டஈட்டு ஆணையாளருக்கு தொழில் அதிஷ்ட சகாய நிதியத்திக்கு அனுப்பி வைத்தல் | 140 | 151 | 216 |

அட்டவணை 4.6 கைத்தொழில் பாதுகாப்பு பிரிவின் பொறுப்புக்களை நிறைவேற்றும் முன்னேற்றம் - 2018

# 5. பெண்கள், இளம் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை ஒழித்தலும்

## 5.1 அறிமுகம்

இலங்கையின் தொழில் படையணியினுள் பெண்களின் பங்களிப்பு 35.0□ சதவீதமாவதோடு ஏனைய அபிவிருத்தி சுட்டிகளை பார்க்கின்ற போது இந்த பெறுமதி வரவேற்கத்தக்க மட்டத்திலும் மேலுயர்ந்தும் சிறுவர்களின் தொழில் முழுவதுமாக நீக்கப்படுவது இலங்கை அரசின் அத்தியவசியமான பொறுப்பாக இருக்கிறது. ஆகையால் இந்த பொறுப்பினை பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவின் விடயங்களில் இருவகை முக்கிய பொறுப்பாக இருக்கிறது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முதல் தொழில் படையணிக்குள் பெண்கள் பங்களிப்பு பெறுமதி, அடிக்கடி சிறிது உயர்வடைந்து சென்றதோடு 39.05 வீதம் அண்மித்த பெறுமதியைக் கொண்டது. குடும்பங்களின் அலகினுள் மற்றும் சமூக ரீதியாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு, சம்பந்தமான கவனத்துடன் பெண் தொழிலாளிகளுக்கு தமது சேவைபுரியும் இடத்தில் உரிமைகளை உறுதி செய்வது இந்த பெறுமானத்தை உயர்த்தும் சவால்களை வெற்றிகொள்ளும் அத்தியவசியமான அங்கமாகியுள்ளது. ஆகையால் வேலைத்தளத்தில் பெண்களை உள்ளடக்கிய தொழில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது அந்த சட்டம் காலத்திற்கு ஏற்ப மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை சிபாரிசு செய்வதன் மூலம் விளைதிறன் கொண்ட பெண்கள் தொழில் பங்களிப்பினை நாட்டுக்கு வழங்குவது இந்த பிரிவின் ஒரு முக்கிய பொறுப்பாகும்.

சிறுவர்களை தொழிலிருந்து நீக்குவது இலங்கை பெற்றுக்கொண்ட முன்னேற்றம் விசேடமாக நன்கு புலப்படும் ஒன்றாகும். 1999 ம் வருடத்தில் 21.35மூ வீதம் இருந்த பொருளாதார பெறுமதியுடன் கூடிய விடயங்களில் ஈடுபடுத்தப்பட்ட சிறுவர் தொழிலாளர் விகிதம் 2016 ஆகும் போது 2.3மூ வீதம் வரை குறைந்திருந்தது. 05-17 வயதிற்கிடையே சிறுவர் குடிசனமதிப்பில், சிறுவர் தொழில் அல்லது ஆபத்தான சிறுவர் தொழில் நிலவுவதாக இனங்காணப்பட்டு உள்ள அளவு அந்த குழந்தைகளின் குடிசனமதிப்பின் 1மூ வீதமாகும். 2020 ம் ஆண்டின் சிறுவர் தொழிலாளர் முழுமையாக நீக்கப்படுதலை இலக்காக கொண்டிருப்பதால் சகல சாராரினதும் பங்களிப்புடன் சிறுவர் தொழிலாளர்களை நீக்குவது 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கான தொழில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தற்போதய சட்டத்தினை திருத்தி தற்போதய சமூக பிரச்சினைகளுக்கு உரிய வகையில் நிலவுகின்ற சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்களை சிபாரிசு செய்வது இந்த பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

## 5.2 பொறுப்புகள்

5.2.1 தொழில்புரிகின்ற பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்குரிய சட்டங்களின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அதற்காக வலயங்கள் மற்றும் மாவட்ட தொழில் காரியாலயங்களை நடைமுறைப்படுத்தலும்.

5.2.2 பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்காக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் வியாபித்து நடைமுறைப்படுத்தல்.

5.2.3 தொழில் புரிகின்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குரிய சட்டத்தினை நன்கு கற்று அதிலுள்ள பலவீனங்களையும் குறைகளையும் இனங்கண்டு சட்டத்தினை சக்திபெறச் செய்வதற்காக சிபார்சுகளை முன்வைத்தல்.

5.2.4 தேசிய மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச ஆகிய மட்டத்தில் நடத்தப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி குழுக்களில் வெற்றிகரமான பங்களிப்பை வழங்குதல்.

5.2.5 தொழில் புரிகின்ற பெண்களுக்காக சுதந்திர வர்த்தக வலயங்களில் நிறுவியுள்ள தொழில் திணைக்களத்திற்குரிய பெண்கள் விடுதிகள் பராமரிப்பு.

5.2.6 பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் பணிக்குழு அபிவிருத்தி விடயங்கள்

## 5.3 நடைமுறைப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள்

### 5.3.1 பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவைக்கு அமர்த்தும் சட்டம் (1956ம் ஆண்டின் 47ம் இலக்கம்)

சேவையிலுள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமாக 1954 ஆண்டின் 19 ம் இலக்க கடை மற்றும் காரியாலய சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படாத விடயங்கள் இந்த சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் பிரதான விடயமாக, சேவையில் ஈடுபடுத்தக்கூடிய ஆக குறைந்த வயது, சேவையில் ஈடுபடுத்தக் கூடிய பொதுவான நிபந்தனைகள், பெண்களை இரவு சேவைகளில் ஈடுபடுத்துவது சம்பந்தமான நிபந்தனைகள் இளைஞர்கள் ஆபத்தான தொழில் ஈடுபடுத்துவது சம்பந்தமான நிபந்தனைகள் மற்றும் பிரதான விதிவிலக்குகள் உள்ளடக்கப்படும்.

## 5.3.2 மகப்பேற்று சட்டம்

கர்ப்பகாலத்தில் மற்றும் பாலூட்டும் கால எல்லையினுள் தொழில் சம்பந்தமாக நிலவும் நிபந்தனைகள் உள்ளடக்கப்படும். உயிருடன் பிறக்கும் சகல பிள்ளைகளுக்கும் 84 நாட்கள் சம்பளத்தோடு கூடிய மகப்பேற்று விடுமுறைக்கான உரிமையும் பிள்ளைக்கு ஒருவருடம் ஆகும் வரை பாலூட்டுவதற்காக சேவைக்காலத்தினுள்கூடிய காலம் வழங்குதல். இறந்து பிறக்கும் குழந்தைகளின் பிறப்பின்போது சம்பளத்தோடு கூடிய விடுமுறை பெறும் உரிமையும் தொழில் பாதுகாப்பு வழங்குவதும் இந்த சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய இரு சட்டங்களுக்கும் மேலதிமாக சுரங்கங்களில் சேவை புரிகின்ற பெண்கள் சம்பந்தமான சட்டம் ( 1973 ஆண்டின் 13 ம் இலக்க சட்டம்) மற்றும் தொழிற்சாலை கட்டளைச்சட்டம் (1942 ஆண்டின் 45 ம் இலக்கம்) சட்டத்தில் சேவையிலுள்ள பெண்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமான நிபந்தனைகளும் எல்லையும் காட்டப்பட்டுள்ளது.

## 5.4 விடயங்களை நிறைவேற்றுதல் - 2018

தொழில் புரிகின்ற பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் தொழில் ரீதியான பாதுகாப்பினை முன்னிட்டு நிறைவேற்றப்படுகின்ற விடயங்களில் பிரதான விடயங்கள் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது.

5.4.1 **தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமாக நிலவுகின்ற சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.**

5.4.2 **தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் தொழில் ரீதியான பாதுகாப்பிற்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிலையினை தொடர்ந்து நடத்துதல். அபிவிருத்தி மற்றும் சட்டத்தின் மீறுதலை தவிர்ப்பதற்காக கல்வி, மற்றும் தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.**

5.4.3 **நடைபெறுகின்ற சட்ட அமைப்பினை மீளாய்வு செய்து அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.**

5.4.1 **தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமாக நடைமுறையிலுள்ள சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.**

### 5.4.1.1 காலத்திற்கு ஏற்ப பரிசோதனைகள்

வேலைத்தளத்தில் சேவைபுரிகின்ற பெண்களுக்கு தொழில் சட்டத்தின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் நிலைமைகளை அதே அமைப்பில் அனுபவிப்பதற்கு வேண்டிய வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என பரிசீலித்தல் இந்த பரிசோதனையின் மூலம் நடைபெறும். பெண்களுக்கு முறையான மகப்பேற்று விடுமுறை மற்றும் மகப்பேற்று உதவி செலுத்தப்பட்டதா என்பதையும், கர்ப்ப நிலையில் இருக்கின்ற பெண்களுக்கு குறித்த வசதிகள் வழங்கப்பட்டுள்ளதா? என்பதையும் இளைஞர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதை தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதையும் இளம் சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா என்பதையும் விசாரணை மூலம் போதிய திருத்தங்களுக்காக ஆலோசனை வழங்குவதைப் போலவே,தெரியப்படுத்தப்படுகின்ற மீறுதல்கள் சம்பந்தமாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள சிபாரிசு செய்வதும் இந்த விசாரணைகள் மூலம் நடைபெறும்.

### 5.4.1.2 விசாரணை நடத்துதல்

தொழில் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற சிறுவர் தொழிலாளர்கள் மற்றும் அபாயகரமான சிறுவர் தொழில் சம்பந்தமாக முறைப்பாடுகள் மற்றும் பெண்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது சம்பந்தமான முறைப்பாடுகள் அவசியமான வகையில் நுண்ணாய்வு செய்வதும் ஜனாதிபதி செயலகம் , தேசிய சிறுவர் காப்புறுதி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அறிக்கை அனுப்புதலும் நிகழும். இதற்கு மேலதிகமாக விசேட திடீர் பரிசோதனைகளும் சட்டத்தினை மீறுதல் சம்பந்தமான நிகழ்வுகள் சம்பந்தமாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மூலம் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் நடைபெறும்.

| தொடர் இலக்கம் | தொகுதி | எண்ணிக்கை | அவதானிப்பு |
|---|---|---|---|
| 01 | நாளாந்த விசாரணை | 824 | பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவின் மூலம் நடைபெற்ற இந்த விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட குறைகளை திருத்துவதற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டதோடு உரிய அறிவுரைகளை பின்பற்றாத சந்தர்ப்பங்களில் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது |
| 02 | சிறுவர்கள் சம்பந்தமான விசாரணை | 127 | 2016ம் வருடத்தில் கிடைத்த முறைப்பாடுகள் 13. 2017 ம் வருடத்தில் கிடைத்த முறைப்பாடுகள் 40 மற்றும் 2018ம் வருடத்தில் கிடைத்த முறைப்பாடுகள் 76 ம் சம்பந்தமாக விசாரணை நிறைவு செய்யப்பட்டது. சிறுவர் தொழிலை உறுதி செய்த சந்தர்ப்பங்கள் 3 சம்பந்தமாக நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை 01 |
| 03 | பெண்களின் சேவை நிபந்தனைகள் சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகள் விசாரணை | 25 | மகப்பேறு சம்பந்தமான விசாரணைகள் 09, வேறு முறை-ப்பாடுகள் 16ம் சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்தது |
| 04 | பெண்கள் இரவு சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்குதல் | 579 | இந்த அனுமதியின் மூலம் பெண்களை இரவு சேவையில் ஈடுபடுத்தும் போது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்த வசதிகள் உறுதி செய்யப்படுகின்றன. |
| 05 | ஆபத்தான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் சம்பந்தமான விசேட குழுவினர் விசாரணை | 100 | நிறுவனங்கள் 472 விசாரணை செய்யப்பட்டன. இந்த நிறுவன-ங்களில் ஆபத்தான தொழில்களில் இளைஞர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என தெளிவாகியது |
| 06 | பெண் தொழிலாளர் சம்பந்தமாக விசேட குழுவினர் விசாரணை | 71 | உள்ளடக்கப்பட்ட பெண் தொழிலாளர் 5943. சட்டத்தை மீறிய சந்தர்ப்பம் 57.(இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது) |

அட்டவணை 5.1 வேலை செய்யும் பெண்களஅட்டவணை 5.1. இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களை அமுல்படுத்தல். - 2018

| தொடர் இல | மீறப்பட்ட சட்டம் | அறிக்கையிடப்பட்ட மீறிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | நீதிமன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட எண்ணிக்கை | தற்போது நீதிமன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படும் எண்ணிக்கை | முடித்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | பெண்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர் வேலைகளை ஒழுங்கு படுத்தும் சட்டம் | 10 | 05 | 03 | 02 |
| 02 | மகப்பேற்றுச் சட்டம | 00 | 00 | 00 | 00 |

அட்டவணை5.2 நீதிமன்ற செயற்பாடுகள் எடுத்தல்

5.4.2 சேவையிலுள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் தொழில் ரீதியான பாதுகாப்பிற்காக உள்ள சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற நிலையில் நடைமுறைப்படுத்துவது அபிவிருத்தி மற்றும் சட்டத்தினை மீறுதலை தவிர்ப்பது மற்றும் கல்வி மற்றும் தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

### 5.4.1.1 கல்வி மற்றும் தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துதல்

5.4.1.1.1 ஊழியர்கள் சேவை வழங்குனர்கள் மற்றும் பிற குறித்த தரப்பினர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

5.4.1.1.2 குறித்த பிரதான நினைவுகூரும் தினங்களில் நடத்தப்படுவதன் மூலம் தெளிவூட்டுதல்.

- **சர்வதேச மகளிர் தினம்.**

தோட்டத்துறையிலுள்ள பெண் தொழிலாளர்களால் வழங்கப்பட்ட தொழில் பங்களிப்பினை மதிப்பீடு செய்து அந்த பிரிவின் பெண்தொழிலாளர்கள் 105 பேருக்கு "திரிய ரன் லிய" (முயற்சியுள்ள தங்க பெண்கள்) விருது 2018 பெண்கள் தின நினைவுகூரல் விழாவில் வழங்கப்பட்டது.

- **சர்வதேச தொழிலாளர் தினம்**

இனங்காணப்பட்ட பலவீனமான குழுக்களை தெளிவூட்டுவதற்காக 5 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. கல்வியினை தொடர்ந்து பெறுவதன் முக்கியத்துவம் மற்றும் தொழிலில் ஈடுபடும் போது சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற கடமை எல்லை என்பன இங்கு தெளிவுறுத்தப்பட்டது.

“பெண் தொழிலாளர்கள் மற்றும் இரவு சேவை” சம்பந்தமாக ஐக்கிய இராச்சியத்தின் பேர்பிக் பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்ட நேரான ஆராய்ச்சியினை திணைக்களத்திற்கு முன்வைத்ததோடு அந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புக்கள் தேசிய தொழிலாளர் ஆலோசனைக்குழுவுக்கு முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

- **சிறுவர் தொழிலுக்கு எதிராக சர்வதேச தினம்**

சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் சரியான நடவடிக்கைகள் மற்றும் புவி அபிவிருத்திக்காக 2030 திட்டம் நிகழ்ச்சித்திட்டத்தில் 8.7 ம் இலக்கத்தின் கீழ் இருப்பதோடு சிறுவர் தொழிலை அகற்றுவது சம்பந்தமாக முன்னோடி நாடாக வரவேற்பினை பெறுவதற்கு கிடைத்தது இலங்கைக்கு கிடைத்த மிகவும் பாரிய வெற்றியாகும். இது சிறுவர் தொழிலை நீக்குவது சம்பந்தமாக இலங்கை எடுத்த உச்சபயன் தரக்கூடிய சாதனை நடவடிக்கைக்காக கிடைத்தமிகப்பாரிய வரவேற்பாகும். தென் ஆபிரிக்காவில் தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் உட்பட தூதுக்குழுவினர் 2018 ஒக்டோபர் மாதத்தில் சிறுவர்களை தொழிலிருந்து அகற்றுதல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தில் குறித்த உத்தியோகத்தர்களை சந்தித்ததும் மற்றும் உல்லாச பயணத்தில் இந்த வரவேற்பின் பிரதிபலனாகும்.



படம் 5.1. தென்னாபிரிக்காவின் பிரதி தொழில் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் சந்திப்பு.

சிறுவர் தொழிலை அகற்றுவது சம்பந்தமாக சர்வதேச தினத்திற்காக அது சம்பந்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டது.

- **சர்வதேச சிறுவர் தினம்**

இந்த நினைவுகூரலில் அபிவிருத்தி மற்றும் தவிர்க்கும் விடயங்களை முக்கிய நோக்கமாக கவனித்து நடைமுறைப்படுத்தப்படும்.

5.4.1.2 தொல்லைகளுக்கு உட்படக்கூடிய நபர்கள் மற்றும் இந்த விடயத்தில் ஈடுபடுபவர்களுக்காக தெளிவூட்டும் மற்றும் கல்வி அறிவினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

5.4.1.3 பாலியல் அடிப்படையாக கொண்ட சேவை நிலையத்தினுள் தொல்லைகள் நிகழ்வது சம்பந்தமாக இதுவரை தகவல்களை அறிந்து கொள்வதற்கு மற்றும் தற்போதய நிலைமை சம்பந்தமாக மதிப்படு செய்வதற்குமாக செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

5.4.1.4 தற்போதய சட்ட அமைப்பினை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொளஞ்தல் (2018 விசேட செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது)

### 5.4.1.5 நிவாரண சேவைகள்

கட்டுநாயக்க மற்றும் கொக்கலவில் அமைந்துள்ள ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படுகின்ற வலயங்களில் பெண்கள் விடுதிகளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதோடு சகாய விலையின் கீழ் பெண் தொழிலாளர்கள் அவற்றின் வசதிகளை பெறுகிறார்கள்.

5.4.1.6 வேறு திணைக்களங்களின் மூலம் பெண்கள், இளைஞர்கள், சிறுவர்களின் தொழில் பாதுகாப்பிற்காக நடைபெறுகின்ற விடயங்களிலும் உதவி செய்தல்.

5.4.1.6.1. பாலியல் மற்றும் பாலியல் சேட்டைகளை அடிப்படையாக கொண்டு நடைபெறுகின்ற தொல்லைகளை தவிர்ப்பதற்கான தேசிய செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பங்குபற்றுதல்.

5.4.1.6.2 தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டம் நடைமுறைப்படுத்தும் போது பங்கு பெறுதல்.

5.4.1.6.3 சிறுவர்களுக்காக தேசிய செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பங்குபெறுதல்.

5.4.1.6.4 மனித வியாபாரத்திற்கு எதிராக தேசிய செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பங்கு பெறுதல்.

### 5.4.3 தற்போதய சட்ட அமைப்பில் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

- விசேட செயற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 5.5 செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் - 2018

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்டம் / செயற்பாடு | 2018 வருடத்திற்கான இலக்கு | | 2018.01.01 திகதியிலிருந்து 2018.12.31. வரை முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி | பௌதீக | நிதி |
| 1 | சர்வதேச பெண்கள் தினம் | 1 | 500,000 | 1 | 216,992 |
| 2 | உலக சிறுவர் தினம் | 1 | 400,000 | 1 | 511,488 |
| 3 | தோட்டத்துறைப் பிரிவில் பெண் ஊழியர்களுக்கு அறிவூட்டுவதற்காக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் | 3 | 114,150 | 3 | 86,445 |
| 4 | பெண் ஊழியர்களுக்கு அறிவூட்டுவதற்காக வதிவிட நிகழ்ச்சித் திட்டங்கள் | 5 | 35,000 | 5 | 18,820 |
| 5 | உளவியல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத் துதல் | 4 | 101,800 | 4 | 77,200 |
| 6 | போதைப் பொருட்களைத் தடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல் | 4 | 24,000 | 4 | 14,850 |
| 7 | இரவு நேர விசாரணைகள் நடத்துதல் | 64 | 270,400 | 71 | 246,500 |
| 8 | *கொக்கல பெண்கள் விடுதியில் நடத்தப்பட்ட உளவியல் ஆலோசனை செயலமர்வு | 1 | 42,600 | 1 | 42,600 |
| 9 | *வெள்ளவத்தை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றினை தவிர்ப்பது சம்பந்தமாக பெற்றோருக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 1 | 96,600 | 1 | 93,600 |

அட்டவணை 5.3 செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் முன்னேற்றம் - 2018

சர்வதேச பெண்கள் தினம் மற்றும் உலக சிறுவர் தினத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளில் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளில் 42,600/- ரூபாவை ஒதுக்கீட்டினை ஈடுபடுத்தி கொக்கல பெண்கள் விடுதியில் உளவியல் விஞ்ஞான விரிவுரை செயலமர்வு ஒன்றும் 93,600/- ரூபாவுக்கு ஒதுக்கீடு செய்து வெள்ளவத்தை பிரதேசத்தில் பாடசாலை பிள்ளைகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றினை தவிர்ப்பது சம்பந்தமாக பெற்றோர்களை தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டது.

## 5.6 சரியான நடைமுறை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தல்

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சி | 2018 வருடத்திற்கான இலக்கு | | 2018. வருடத்தினுள் முன்னேற்றம | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி | பௌதீக | நிதி |
| 1 | உலக சிறுவர் தொழில் எதிர்ப்பு தினம் | 1 | 675,000 | 1 | 532,323 |
| 2 | தென்னாபிரிக்க குடியரசின் பிரதி தொழில் அமைச்சர் மற்றும் தூது குழுவினர் இலங்கையில் சுற்றுலா | 1 | 223,800 | 1 | 206,950 |
| 3 | சேவை நிலையங்களில் நிகழுகின்ற பெண்கள் ஆண்கள் பாலினத்தை அடிப்படையாகப் கொண்ட பெண்கள் துன்புறுத்தல், நடைபெறுகின்ற நிலைமைகளை மீளாய்வு செய்கின்ற செயலமர்வு | 1 | உலக சிறுவர் தொழில் எதிர்ப்பு தினம் மற்றும் தென்னாபிரிக்க குடியரசின் பிரதி தொழில் அமைச்சர் மற்றும் தூ துக்குழுவினரின் இலங்கை சுற்றுலாவுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் எஞ்சியிருந்த ஒதுக்கீட்டினை செலவளித்து இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. | 1 | 31,200 |
| 4 | பெண்கள் மற்றும் இளைஞர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்மந்தமான சட்டங்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதற்கான பிரசார நடவடிக்கைகள் நடத்துதல் | 1 | | 1 | 208,995 |

அட்டவணை 5.4 சிறந்த நடைமுறை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றம்.

* பெண்கள் மற்றும் இளைஞர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமான சட்டங்கள் சம்பந்தமாக மக்களுக்கு தெளிவூட்டும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக எஞ்சிய ஒதுக்கீடு மேற்கூறிய செலவு தலைப்பில் நிரப்பப்பட்டது.

# 6. தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு.

## 6.1 அறிமுகம்

இலங்கையில் தனியார் பிரிவில் மற்றும் அரச பகுதியளவு பிரிவிலுள்ள தொழிலாளர்களுக்கு, சிறந்த பொருளாதார நிலைமையுடன் கூடிய ஓய்வு வாழ்க்கையினை உரிமையாக்கி கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முன்வைத்து, 1958ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் மூலம்,ஊழியர் சேமலாப நிதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிதியத்தின் நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, அதன் நிதிப் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையினால் செயல்படுத்தப்படுகிறது. நிதியத்தின் முழுப்பெறுமதியும் 2,294 பில்லியன் ஆவதோடு, நிதியத்தில் செயல்படுகின்ற மற்றும் செயல்படாத கணக்குகளின் எண்ணிக்கை 18.5 மில்லியன் ரூபாவாகும். அடிக்கடி திருத்தப்பட்ட இந்த சட்டத்தின் கீழ் இதுவரை நிறைவேற்றப்பட்ட பொறுப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. இந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவது திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் பொறுப்பாகும்.

## 6.2 பொறுப்புக்கள்

6.2.1 ஊழியர் சேமலாப நிதிக்காகசேவை நிறுவனங்களை பதிவு செய்தல்.
6.2.2 ஊழியர் சேமலாப நிதிக்காக உறுப்பினர்களை பதிவு செய்தல்.
6.2.3 சந்தாப்பணம் செலுத்தாத சேவையிலுள்ள சந்தாதாரிகளிடமிருந்து சந்தாப்பணத்தினை அறவிடுதல்.
6.2.4 உறுப்பினர்களுக்குரிய சேமலாப நிதியின் கொடுப்பனவினை செய்வதற்காக கொடுப்பனவு கட்டளை வழங்குதல்.
6.2.5 அங்கீகரிக்கப்பட்ட சேமலாபநிதியின் மேற்பார்வை.

### 6.2.1 ஊழியர் சேமலாப நிதிக்காக சேவை நிறுவனங்கள் பதிவுசெய்தல்.

ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் கீழ் அடங்குகின்ற சகல பகுதியளவு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதியங்களும் பதிவு செய்யப்படவேண்டும். சேவை வழங்குனருக்கு நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்திலுள்ள தொழில் காரியாலயத்திற்கு சமூகமளித்து பதிவு செய்துகொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வருடாந்தம் ஒவ்வொரு காரியாலயத்திற்கும் நிறுவனம் பதிவு செய்யும் இலக்குகளை வழங்குவதோடு தொழில் உத்தியோகத்தர்களால் தமது அதிகார பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற நிறுவனங்கள் இதன்கீழ் பதிவு செய்யப்படும்.அதன்படி 2018 இனுள் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 9267 ஆகும். 2018 ம் வருடத்தினுள் நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 78,977 ஆகும்.

### 6.2.2 ஊழியர் சேமலாப நிதிக்காக உறுப்பினர்களை பதிவு செய்தல்.

ஊழியர் சேமலாப நிதி மூலம் கீழ்காணும் ஊழியர்கள் உள்ளடக்கப்படுவர்.

- நிரந்தர, பயிலுனர், தற்காலிக அல்லது அமய ஊழியர்கள்
- மாதாந்த, அரைமாத, நாட்சம்பள ஊழியர்கள்
- இந்நாட்டில் தொழில்புரியும் வெளிநாட்டவர்கள்
- 10 ஊழியர்களை விட கூடுதலாக இருக்கின்ற புண்ணிய நிறுவனம் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளுக்காக நடத்தப்படுகின்ற நிறுவன ஊழியர்கள்
- தொழிலாளர் தரத்திலிருந்து முகாமைத்துவ தரம் வரையிலுள்ள சகல தரங்களிலும் சேவை புரிகின்ற ஊழியர்களும் உள்ளடங்குவர்.

ஒரு நிறுவனத்தில் ஊழியர் சேமலாப நிதி பதிவு இலக்கத்தின் கீழ் அங்குள்ள ஊழியர்களுக்கு வரிசை முறைப்படி இலக்கங்கள் வழங்கப்பட்டு பதியப்படுவதன்மூலம் அவர்களுக்கு நிதியத்தின் உறுப்புரிமை கிடைக்கிறது. பதிவு செய்யப்படுதல் தொழில் திணைக்களத்தின் கீழ் நடைபெறுவதோடு அவர்களுக்காக பங்களிப்புப்பணம், வைப்பிலடப்படுவதன் மூலம் கணக்கினை நடைமுறைப்படுத்திக்கொண்டு போவது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும். அதன்படி இந்த நிறுவனங்கள் இரண்டிற்கும் சரியான தகவல்களை வழங்குவதன் மூலம் உறுப்பினர் பதிவு மற்றும் கணக்குகள் சரியாக நடைமுறைப்படுத்தமுடியும். 2018 ம் வருடத்தினுள் திணைக்களத்தில் பதியப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 648,054 ஆவதோடு இதுவரையில் செயல்படுகின்ற உறுப்பினர்களின் கணக்கு 2.55 மில்லியன் மத்திய வங்கியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

| | 2016 வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2017 வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2018 வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | பதிவு செய்தல் அதிகரித்த வீதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2016 - 17 | 2017 - 18 |
| சேவை நிறுவனங்களைப் பதிவு செய்தல் | 6507 | 7,718 | 9267 | 1.1% | 1.2% |
| உறுப்பினர்களைப் பதிவு செய்தல் | 620,806 | 454,971 | 648,054 | -0.73 % | 1.4% |

அட்டவணை 6.1 பங்களிப்புப்பணத்தினை அறவிடுவதற்காக பதிவு செய்தல் - 2018

## 6.2 பங்களிப்புப்பணம் செலுத்தப்படாகல் சேவை ஊழியர்களின் பங்களிப்புப்பணத்தினை அறவீடு செய்தல்.

நிதியத்தில் கடந்த வருடத்தினுள் வருடாந்த வட்டிவீதம் 10 வீதத்தை விட கூடிய தொகையினை வைத்திருப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு முடிந்தோடு 2018 ம் வருடத்திற்காக அது 9.5 வீதமாகியது. அதேபோன்று இந்த வட்டி தொடர் வட்டியாக தொடர்ந்து உறுப்பினரின் கணக்கில் சேர்க்கப்படும். ஊழியரின் முழு உழைப்பில் குறைந்தது 12 வீதம் தொழில் வழங்குனராலும் 8 ஊழியராலும் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புப்பணம் செலுத்துவதால் ஒவ்வொரு மாதமும் ஊழியரின் முழு உழைப்பில் 5 இல் ஒரு பங்கு ஆகிய பாரிய பெறுமதி உறுப்பினரின் ஓய்வுகால வாழ்க்கையை பாதுகாப்பதற்காக ஈடுபடுத்தப்படுகிறது.

சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல ஊழியர்களுக்காகவும் ஏதாவது ஒரு மாதத்தில் பங்களிப்புப்பணம் குறித்த சேவை வழங்குனரால் அடுத்த மாத கடைசி தினத்திற்கோ அல்லது அதற்கு முதலோ இலங்கை மத்திய வங்கியில் வைப்பிலிடவேண்டும்.

அதன்படி 2018 ம் வருடத்தினுள் நிதியத்திற்கு பற்றுவைக்கப்பட்ட பங்களிப்புப்பணம் ரூபா 1.45111 மில்லியன் ஆவதோடு அதற்காக 9.5 வீதம் வருடாந்த வட்டி வீதத்தின் பேரில் தொடர்வட்டியாக கணக்கிட்டு உறுப்பினரின் கணக்கில் நிலுவைக்கு சேர்க்கப்படும்.

பங்களிப்புப்பணம் நிதியத்திற்கு பற்றுவைக்கும் போது காசோலைகள் மற்றும் பதிவேடுகள் மூலமும் கொண்டுவந்து பாரமளிப்பது மூலமும் தபாலில் அனுப்புவது மூலமும் அரச மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் அதேபோல் மின்னியியல் கொடுப்பனவு முறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சேவைகள் மூலம் சேவை வழங்குனர்களுக்கு மிகவும் இலகுவானதும் பாதுகாப்பாதுமான முறையில் தெரிவு செய்து சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம்.


பங்களிப்பு பணத்தினை சரியான முறையில் செலுத்தாத சேவை வழங்குனருக்காக முதலாம் அறிவித்தல் மற்றும் சிவப்பு அறிவித்தல் வழங்குவதோடு அதற்கு பதிலளிக்கா விட்டால், சட்டமூலம் நடவடிக்கை எடுத்து பங்களிப்புப்பணம் மற்றும் மிகைவிதிப்பு அறவிட்டு கணக்குக்கு எடுக்கப்படும். 2018 ம் வருடத்தில் அறிவித்தல் வழங்கப்பட்ட மற்றும் நீதிமன்ற செயல்பாடுகளின் மூலம் அறவிடப்பட்ட பணம்,6.2 அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | | அறிவித்தல் எண்ணிக்கை | அறவிடப்பட்ட பணம் (ரூபா மில்) |
|---|---|---|---|
| 01 | முதலாவது அறிவித்தல | 14,903 | 4,999 |
| 02 | சிவப்பு அறிவித்தல் | 8,924 | 3,794 |
| 03 | நீதிமன்ற செயற்பாடுகள் | 2831(வழக்குகள் எண்ணிக்கை) | 1,709 |

அட்டவணை 6.2 பங்களிப்புப்பணத்தினை சரியான முறையில் செலுத்தாத தொழில் வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்ட அறிவித்தல்கள் -2018

நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் அறவிடப்பட்ட பங்களிப்புப்பணம் தொழில் ஆணையாளரின் கணக்கில் வைப்பிலிடப்பட்டு சரியான தகவல்கள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் உறுப்பினரின் கணக்கிற்கு வைப்பிலிடப்படும். வருடத்தினுள் தொழில் ஆணையாளரின் கணக்கிற்கு ரூபா 8.436 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதோடு தீர்க்கப்பட்டளவு 8.910 மில்லியன் ரூபாவாகும்.

பங்களிப்புப்பணம் செலுத்துவதற்கு சேவை வழங்குனர்களின் அபிப்பிராயத்தினை ஏற்றுக்கொண்டதன் பெயரில் பங்களிப்புப்பணத்தினை செலுத்துவதற்கு முடியாமை சம்பந்தமாக நியாயமான காரணங்களை காட்டுகின்ற சேவை வழங்குனர்களுக்காக 36 தவணைகளாக பங்களிப்பு பணம் செலுத்துவதற்கு உத்தேசத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வருடத்தினுள் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பங்களிப்புஉத்தேசத் திட்டத்தின் அளவு 3604 ஆனதோடு அதில் 778 மில்லியன் ரூபா நிதியத்திற்கு பற்று வைக்கப்பட்டது. பங்களிப்பு உத்தேச திட்டத்தின் கீழ் மற்றும் நீதிமன்ற செயல்திட்டத்தின் கீழ் பற்றுவைக்கப்படும் பங்களிப்புப்பணம் சமமான விகிதத்தில் உறுப்பினர் கணக்குகளில் பற்றுவைக்கப்படும்.




வரைபு 6.1 ஊ.சே.நி. பங்களிப்பின் முன்னேற்றம்

6.2.4 உறுப்பினர்களுக்கு திரட்டுப்பணத்தினை செலுத்துவதற்காக கொடுப்பனவு கட்டளையினை வழங்குதல். உறுப்பினர்களுக்கு திரட்டுப்பணம் கொடுப்பனவு சந்தர்ப்பங்கள் 3 சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்கு ஏற்ப,அடிக்கடி வழங்கப்படுகின்ற நிபந்தனைகள் மூலம் அதனை நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

6.2.4.1 மரணித்த உறுப்பினருக்காக பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு / உரிமை கோருபவருக்கு பிரதிபயன் கொடுப்பனவு
6.2.4.2 ஊழியர் சேமலாப நிதியின் செயற்பாட்டு உறுப்பினருக்காக 30 வீதம் முன்கூட்டிய பிரதிபயன்கொடுப்பனவு
6.2.4.3 ஊழியர் சேமலாப நிதியில் உறுப்புரிமை முடிவடைவதன் பெயரில் முழு பிரதிபயன் வழங்குதல்.

**6.2.4.1 மரணித்த உறுப்பினர்களுக்காக பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு அல்லது உரிமைகோரியவருக்கு பிரதிபயன் வழங்குதல்.**

சேவையிலுள்ள போது அல்லது இந்நிதியினை பெறுவதற்கு முதல், உறுப்பினர் மரணித்த சந்தர்ப்பத்தில் அவரால் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு / அவர்களுக்கு இந்த நிதியினை விடுவிக்கப்படும். ஏதாவது காரணத்தினால் செல்லுபடியான பெயர் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் உறுப்பினருக்காக உரிமை கோருபவரை இனம்கண்டால் இந்நிதியினை விடுவிக்கலாம். தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயங்கள் மற்றும் வலய தொழில் காரியாலயம் 10 யில் இந்த சேவையினை பெறும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வருடத்தினுள் மரணித்த உத்தியோகத்தர்களுக்காக விடுவிக்கப்பட்ட இந்நிதியின் அளவு 6.3 அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

**6.2.4.2 ஊழியர் சேமலாப நிதியின் செயற்பாட்டு உறுப்பினர்களுக்காக 30% சதவீத முன்கூட்டிய சேமலாப நிதி பிரதிபயன் கொடுப்பனவு.**

- 10 வருடத்திற்கு குறையாத காலத்திற்காக சேமலாப நிதிக்கு சந்தாப்பணம் செலுத்தியிருத்தல்.
- தற்போது சேவையில் ஈடுபட்டிருத்தல்.
- உறுப்பினரின் பிரத்தியேக கணக்கில் அவருடைய வைப்பு ரூபா 3 இலட்சத்துக்கு குறையாமல் இருத்தல். அப்படியான தேவைகளை பூர்த்தி செய்கின்ற உறுப்பினர்களுக்கு வீடமைப்பு மற்றும் சௌக்கிய காரணங்களின் பெயரில் இந்த சேமலாப நிதியினை பெற்றுக்கொள்ள முடியும். வருடத்தினுள் விடுவிக்கப்பட்ட சேமலாப நிதியின் பிரதிபயன்தொகை 6.3 அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது. தொழில் திணைக்கள காரியாலயங்களில் மற்றும் வலய தொழில் காரியாலயங்கள் 10 இல் இந்த சேவையினை பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**6.2.4.3 ஊழியர் சேமலாப நிதி உறுப்புரிமை முடிவடைந்ததன் பெயரில் முழு சேமலாப நிதியினையும் வழங்குதல்.**

ஊழியர் ஒருவருக்கு கீழ் காணும் காரணங்களின் பெயரில் ஊழியர் சேமலாப நிதியின் உறுப்புரிமை முடிவடைந்த பின்னர் தனது பணத்திற்கு வைப்பிலிட்ட பிரதிபயனை பெற்றுக்கொள்ளும் உரிமை கிடைக்கிறது.

- வயது பூரணமான பின்னர் சேவையிலிருந்து நீங்குதல்
- விவாகமான காரணத்தின் பெயரில் சேவையிலிருந்து நீங்குதல் (பெண்ணாயின் மாத்திரம்)
- ஒருபோதும் வேலை செய்ய முடியாத நிலைமையின் பெயரில் சேவையிலிருந்து நீங்குதல்.
- இலங்கையில் இருந்து வெளிநாட்டிற்கு நிரந்தரமாக வசிப்பதற்கு செல்லுதலின் பெயரில் சேவையிலிருந்து நீங்குதல்,


- நிரந்தர மற்றும் ஓய்வூதியத்தோடு கூடிய சேவைக்கு சேர்வதன் பெயரில் சேவையிலிருந்து நீங்குதல்.
- வியாபார நிறுவனத்தின் அரச கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு சேர்ந்த வியாபார நிறுவனங்கள் பொது சங்கங்கள் அல்லது ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்தல், ஏதாவது அரசாங்க கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் பின்னர் அரச கூட்டுத்தாபனம் வியாபார நிறுவனத்தினை மூடியதன் பெயரில் சேவையிலிருந்து நீங்குதல்.

தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலங்கள் மற்றும் நாடெங்கும் அமைந்துள்ள மாவட்ட தொழில் காரியாலயங்கள் 35 யிலும் மற்றும் உப காரியாலயங்கள் 12 யிலும் இந்த சேவைகளை பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## பிரதிபயன் கொடுப்பனவு

| | கொடுப்பனவு | பயனாளிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2016 வருடம் | 2017 வருடம் | 2018 வருடம |
| 6.2.4.1 | மரணித்த உறுப்பினர்களின் பிரதிபயன் கொடுப்பனவு | 4496 | 4738 | 4944 |
| 6.2.4.2 | 30□ ஓய்வுக்கு முன் பிரதிபயன் கொடுப்பனவு | 69482 | 69482 | 29876 |
| 6.2.4.3 | ஓய்வு பெறும் வயது வந்த பின்னர் சேவையிலிருந்து நீங்கிய பின் ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு | 87541 | 87268 | 88690 |
| | திருமணம் காரணமாக சேவையிலிருந்து நீங்கிய பெண் உறுப்பினர்களுக்கு பிரதிபயன் கொடுப்பனவு | 22708 | 22426 | 22522 |
| | நிரந்தர அங்கவீனமடைந்த காரணத்தினால் சேவையியிலருந்து நீங்கிய காரணத்தினால் பிரதிபயன் கொடுப்பனவு செய்தல் | 978 | 1048 | 1038 |
| | வெளிநாட்டில் நிரந்தரமாக வசிக்க செல்வதற்காக பிரதிபயன் கொடுப்பனவு செய்தல் | 1755 | 1959 | 2067 |
| | அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய நியமனம் கிடைத்த காரணத்தினால் சேவையிலிருந்து நீங்கிய காரணத்தினால் பிரதிபயன் கொடுப்பனவு செய்தல் | 10133 | 13488 | 7215 |
| | அரச கூட்டுத்தாபனம் சபையினை மூடுதல் செலவினைக் குறைப்பதற்காக ஊழியர்களை நீக்குதல் அல்லது சங்கமாக மாற்றும் காரணத்தினால் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு பிரதிபயன் கொடுப்பனவு செய்தல் | 108 | 2785 | 662 |
| | முழுப் பிரதிபயன் எண்ணிக்கை | 197,201 | 203,194 | 157,014 |
| | விடுவிக்கப்பட்ட பிரதிபயன் (ரூபா மில்) அளவு | 108,393 | 117,477 | 106,399 |

அட்டவணை 6.3 ஊழியர் சேமலாப நிதியின் பிரதிபயன்கொடுப்பனவு கிடைத்த பயனாளிகளின் எண்ணிக்கை- 2016 இலிருந்து 2018 வரை




வரைபடம் 6.2 கொடுப்பனவு விண்ணப்பங்கள் கிடைத்தல் மற்றும் தீர்மானக் கடிதங்களை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் -2018

### 6.2.5 அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியினை மேற்பார்வை.

ஊழியர் சேமலாப நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியில் இருக்கும் நிறுவனங்கள் 123 பதிவு செய்யப்பட்டுள்ளதோடு முழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 134456 ஆகும். அந்த நிதியத்திற்கு சந்தாப்பணம் வைப்பிலிடுதல் சேமலாப நிதி கொடுப்பனவு உட்பட செயற்பாடுகளை மேற்பார்வை செய்து சரியான முறையில் நடைமுறைப்படுத்தாத நிதியம் நீதிமன்ற செயற்பாட்டினுள் ஊழியர் சேமலாப நிதியின் கீழ் மாற்றி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 70 |
| தீர்க்கப்பட்ட கோவைகளில் நிறைவு செய்யப்பட்ட முறைபாட்டு எண்ணிக்கை | 31 |
| வெளிக்கள உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்பட்ட த.செ.நி. சம்மந்தமான அறிக்கைகளின் எண்ணிக்கை | 170 |
| மேற்பார்வை செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 84 |

அட்டவணை 6.4 அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதி மேற்பார்வை முன்னேற்ற அறிக்கை

## 6.3 சேமலாப நிதி அபிவிருத்தி

சேமலாப நிதியின் நிர்வாகம் மிகவும் வெற்றியளித்துக் கொண்டிருப்பதோடு உறுப்பினர்களின் வாழ்க்கை நிலைமையும் உயர்வடைந்துள்ளதால் கீழக் காணும் விடயங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

6.3.1 ஊழியர் சேமலாப நிதியின் கணக்கு நிலுவையினை அடிப்படையாக கொண்ட வீட்டுக் கடன் வழங்குதல்.

6.3.2 ஊழியர் சேமலாப நிதியின் அபிவிருத்திக்காக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

6.3.3 நேரான சேவையினை வழங்வதற்காக பணிக்குழுவிற்கு பயிற்சி செயலமர்வு ஏற்பாடு செய்தல் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்படும்.

**6.3.1 ஊழியர் சேமலாபநிதியின் கணக்கு நிலுவையினை அடிப்படையாக கொண்ட வீட்டுக்கடன் வழங்குதல்.**

உறுப்பினர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்வடையச் செய்யும் நோக்கத்தில் ஊழியர் சேமலாபநிதி கணக்கில் நிலுவையினை பிணையாக வைத்து 75 வீதம் அதிக பட்சம் வரையிலான வீட்டுக் கடனை பெற்றுக்கொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி வருடத்தினுள் வீட்டுக்கடன் விண்ணப்பக்கள் 9827 க்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அனுமதி வழங்கப்பட்டுள்ள பணம் ரூபா 4.68 பில்லியனாகும்.

### 6.3.2 ஊழியர் சேமலாப நிதியின் அபிவிருத்திக்காக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

சேவை வழங்குனர், ஊழியர் இருசாரரும் ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமாகவுள்ள அறிவினை விருத்தி செய்தல் மற்றும் பதிவு செய்தலை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தில் பல வகையான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன்படி 2018 ம் வருடத்தினுள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவித்தல் பிரசாரம் செய்யப்பட்டது. மேலும் நாடு முழுதும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கத்தக்கவாறு நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டதோடு அது சம்பந்தமான விபரங்கள் 6.5 ம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. கண்டி மாத்தளை மாவட்டங்களில் இனங்காணப்பட்ட தோட்டங்களுக்கு அண்மையில் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டதன் மூலம் அந்த சேவை வழங்குனர் ஊழியர்கள் ஆகிய இரு சாராருக்கும் சேவை வழங்கப்பட்டது.

### 6.3.3 சிறந்த சேவையினை வழங்குவதற்காக பணிக்குழுவிற்கு பயிற்சி செயலமர்வு ஏற்பாடு செய்தல்

| நடை பெற்ற கால எல்லை | நிகழ்ச்சித் திட்டங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018.03.04 - 2018.12.08 | நடமாடும் சேவை 18 நிகழ்ச்சித் திட்டங்கள் | 1640 |
| 2018.03.08 - 2018.08.18 | பயிற்சி செயற் திட்டங்கள் 16 | 1945 |

அட்டவணை 6.5 ஊழியர் சேமலாப நித சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெளிவூட்டுவதற்காக நடைபெற்ற நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டுவதற்காக நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மூலமும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களத்தோடு ஒன்றிணைந்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## 6.4. வேறு

6.4.1 உறுப்பினர் விபரங்களிலுள்ள பிழைகளை சரிசெய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சேவையினை பன்முகப்படுத்துவதன் மூலம் காலம், வேலை மற்றும் பணம் என்பவற்றை சேமித்து தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதிகளை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

6.4.2 மேற்பார்வை தரவுகள் மற்றும் கொடுப்பனவு தரவுகளுக்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களை விருத்தி செய்வதும் இணையத்தளத்தின் தொடர்பினை விருத்தி செய்வதன் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் பிரதான காரியாலயத்திற்கு வருகை தருகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கும் முடியாமாக இருந்தது.

# 7. தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டரீதியான பாதுகாப்பு.

## 7.1 அறிமுகம்

ஊழியர்களின் தொழில் உரிமைகளை பாதுகாத்து கொடுப்பதற்காக திணைக்களத்தினால் பல்வகையான சட்டங்கள் அதிகமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஊழியர்கள் சேவையில் ஈடுபடும் போது சேவை வழங்குனர்கள் குறிப்பிட்ட படி தொழில் சட்டத்தினை பின்பற்றப்படாத காரணத்தினால் ஊழியர்களின் உரிமைகள் மீறப்படுதல் நடைபெறுகின்றது. இங்கு நியதிச்சட்ட உரிமைகள் ஊழியர்களுக்கு வழங்குவதற்காக தேவையான அடிப்படை சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்களில் உரிமைகளை மீறுதலை தவிர்ப்பதற்கும் உரிமைகளை செயற்படுத்துவதற்கும் நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைப்பதன் மூலம் ஊழியர்களின் நியாயத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நீதிமன்ற நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக சகல பொறுப்புகளும் திணைக்களத்தின் சட்ட செயற்பாட்டு பிரிவின் மூலம் செய்யப்படுவதோடு ஊழியர் சேமலாப நிதி சட்டம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்ட உதவி ஆணையாளர்களுக்கும், பணிக்கொடை சட்டம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வலய பிரதி ஆணையாளர்களுக்கும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையினை சகல வலய காரியாலயங்களிலும் சேவை புரிகின்ற சட்ட உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படும். (2018 வருடத்தில் சட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது. ஐந்து வலயங்களில் மாத்திரமே.)

## 7.2 பொறுப்பு

7.2.1 நியதிச்சட்ட தொழில் நீதியினை மீறப்படும் போது அதற்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு குறித்த விடயங்களை நிறைவேற்றுவது மற்றும் அந்த வழக்குகளை நடைமுறைப்படுத்தல்.


7.2.2 வணிக உயர் நீதிமன்றத்தில், மாகாண உயர் நீதிமன்றத்தில், உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீடு நீதிமன்றத்தில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் தொழில் திணைக்களத்திற்கு எதிராக அல்லது திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தேவையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

7.2.3 வலய காரியாலயங்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலயங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நீதிமன்ற செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அந்த நீதிமன்ற செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை பரிசோதனை செய்தல்.

கடந்த பல வருடங்களாக செயலிழந்த வழக்குகள் அதிக எண்ணிக்கையில் மாவட்ட காரியாலயங்களுக்குள் ஒன்று திரட்டப்பட்டு இருப்பதன் காரணத்தினால் ஊழியர்கள் சரியான முறையில் நிறைவேற்ற முடியாதிருந்த நிலைமை 2018 ம் வருடத்தில் அவதானிக்கப்பட்டதன் காரணமாக அந்த நடைமுறையினை தீர்த்து வைப்பதற்காக சட்ட செயற்பாட்டு பிரிவின் மூலம் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டது.

அந்த நிலைமையில் மாவட்ட காரியாலயங்களினால் எடுக்க கூடிய சகல நடவடிக்கைகள் எடுத்த பின்னரும். தீவிரப்படுத்தப்பட முடியாத வழக்குகளை சட்ட செயற்பாட்டு பிரிவு பெற்றுக்கொண்டு குழுவின் மூலம் ஒவ்வொரு கோவையிலுமுள்ள விடயங்களை நன்கு பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் 2018 ம் வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

7.2.4 வலயத்தினுள் நடைபெறுகின்ற மாவட்ட / உப தொழில் காரியாலயங்கள் மற்றம் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அனுப்ப கூடிய சந்தர்ப்பங்களிலும் மற்றும் சுறுசுறுப்பான செயலிழந்த வழக்குகளை தீவிரமாக செயற்படுத்துவதற்கு அவசிய ஆலோசனைகளை வழங்குல் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் திணைக்களத்திற்கான வழக்கு நடைமுறைப்படுத்தல், வலய காரியாலயங்களில் சேவை புரிகின்ற சட்ட உத்தியோகத்தரால் நிறைவேற்றப்படுகின்றது.




வரைபடம் 7.1 சகல மாவட்ட காரியாலயங்களின் மூலமும் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் - 2018

| நீதி மன்றம் | 2018ம் வருடத்தில் முன் கொணரப்பட்ட நிலுவை | 2018ம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் | 2018ம் வருடத்தில் முடிவடைந்த வழக்குள |
|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 181 | 24 | 0 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 336 | 47 | 0 |
| மேல் நீதிமன்றம் | 173 | 50 | 49 |
| மாவட்ட மற்றும் வர்த்தக மேல் நீதிமன்றம் | 210 | 17 | 11 |

அட்டவணை 7.1 நீதிமன்றங்களின் படி வழக்குகளின் செயற்திறன் -2018

| 2018.01.01 ஆண்டில் கொணரப்பட்ட நிலுவை | விசாரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | எழுத்து மூல விளக்கவுரை தயாரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | நீதிவான் நீதிமன்ற ஆலோசனைகள் |
|---|---|---|---|
| 54 | 160 | 92 | 179 |

அட்டவணை 7.2 நீதிவான் நீதிமன்ற வழக்குகள் - 2018

# 8. நிர்வாகம்

## 8.1 அறிமுகம்.

சகல நிறுவனங்களிலும் நிர்வாக பிரிவு என்பது. அந்த நிறுவனத்தின் உள்ளக சேவை பெறுநர்களுக்கு சேவையை வழங்குகின்ற பிரதான பிரிவாகும். ஏதாவது நிறுவனம் ஸ்தாபிக்கப்படுவது வெளியக சேவை பெறுநர்களுக்கு சேவையினை வழங்குவதாக இருப்பினும் அந்த விடயம் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றப்படுவது உள்ளக சேவை பெறுநர்களின் சேவை திருப்தியிலாகும். ஆதலால் நிர்வாக பிரிவின் இலக்கு திணைக்களத்தின் வினைத்திறமைக்கு நேரடியாக செல்வாக்கு செலுத்துகிறது.

பிரதானமாக திணைக்களத்தின் மனித வள தேவைகளை பூர்த்தி செய்தல், ஊழியர்களை சேவைகளை நிரந்தரமாக்குதல், செயற்திறன் மதிப்பீடு. சம்பள அதிகரிப்பு வழங்குதல் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை குறித்த காலத்தினுள் நடத்துதல் இடமாற்ற சட்ட திட்டங்களை ஏற்படுத்தல் ஓய்வூதியத்தினை தாமதமின்றி தயாரித்து கொடுத்தல் போன்ற நிறுவனத்தின் நடவடிக்கைளும் விடுமுறைகளை அங்கீகரித்தல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல், திணைக்களத்தின், போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற நாளாந்த நிர்வாக செயற்பாடுகள் மற்றும் திணைக்களத்தின் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஏற்பாடுகள், வேறு அமைப்புக்கள் மற்றும் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்புபடுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் நிர்வாக குழுவினரால் நிறைவேற்றப்படுகிறது.

இது தவிர திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கான நூலகமும் நிர்வாக பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## 8.2 பொறுப்பு

### 8.2.1 நிர்வாக ஏற்பாடுகள்

பணிக்குழு மிகச்சிறந்த மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காரணத்தால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் வினைத்திறனுடனும் உச்சபயனுடையதாகவும் நிறைவேற்றுவதற்கு இலகுவாக இருக்கும். அதற்காக நிறைவேற்றப்பட்ட விடயங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

- காரியாலய உதவியாளர்கள் 44 பேர் ஆட்சேர்க்கப்படல்.
- பதவிநிலை தர உத்தியோகத்தர்கள் 588 பேரின் நேர்திறன் அறிக்கைகளை அழைப்பித்தல் (1A ,1 B, 2,3,17)
- சீருடை கொடுப்பனவு 100 வீதம் வழங்குதல் ( காவலாளி சேவை, காரியாலய சாரதிகள், காரியாலய ஊழியர்களுக்குரிய குறித்த ஊழியர்களுக்கு)
- வருடாந்த சம்பள ஏற்றம் 1557 வழங்குதல்.
- ஓய்வூதிய சம்பள கோவை 52ம் மாணவ சக்தி பிரிவு கலைக்கப்பட்டதால் ஓய்வூதியம் பெறக்கூடிய உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் தயாரித்தல்.
- சொத்துக்கள், பிரகடனம், 551 அழைப்பித்தல்
- மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்க கணக்குகள் அரசாங்க பொது முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அறிக்கை அனுப்புதல்.
- உதவி தொழில் ஆணையார்கள், பொறியியலாளர், சட்ட உத்தியோகத்தர் தொழில் உத்தியோகத்தர், மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர். ஆராய்ச்சி உத்தியோகத்தர், மின்சார தொழிநுட்ப உத்தியோகத்தர், தட்டெழுத்தாளர் சாரதிகள் மற்றும் காரியாலய உதவியாளர்களுக்காக வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் நடத்துதல்.
- பொது நிருவாக சுற்றறிக்கை 03 / 2016 படி உத்தியோகத்தர்கள் 20669 பேருக்கு சம்பள மாற்றம் செய்தல்
- வருட மத்தியில் செயற்திறன் (வருடாந்த 281 அழைப்பித்தல்)
- சகல காரியாலயங்களினதும் லீவு விபரங்களை அழைப்பித்தல்
- திணைக்களத்தினை மீள் கட்டமைப்பு அறிக்கையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்ததுவதற்கு உரிய மீள் கட்டமைப்புக்கு ஏதுவான புதிய பதவிகளை அங்கிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பிய பின்னர் தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவுக்கு முன்வைத்தல்
- வருடாந்த உள்ளக இடமாற்றங்கள் 186 ஐ நடைமுறைப்படுத்தல்
- உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாட்டுக்குரிய நடவடிக்கைகள்
- தகுதிகாண் காலம் முடிவடைந்த உத்தியோகத்தர்கள் 50 பேருக்கு நிரந்தர மாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வெளிநாட்டு விடுமுறை, மகப்பேற்று விடுமுறை மற்றும் ஏனைய விேட விடுமுறைகளை அங்கிரிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும்.

### 8.2.2 நிர்மாணப் பணிகள்

நாடெங்கும் பரந்துள்ள தொழிலாளர் மக்களுக்கு சிறந்த வினைத்திறன் உள்ள சேவையினை வழங்குவதனை இலக்காகக் கொண்டு நாட்டின் சகல மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் காரியாலயங்கள் ஸ்தாபிக்கப்பபட்டுள்ளன. அந்தக் காரியாலயங்களில் மிகச் சிறந்த நவீன வசதிகளையுடைய நிர்மாணங்களின் மூலம் மிகச் சிறந்த சேவையினை சேவை பெறுனர்களுக்கு வழங்குவதற்கு

முடியுமான வகையில் வசதிகள் அடங்கிய வேலை சூழலை நிர்மாணிப்பதன் மூலம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் கொண்ட சேவையினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

அதன்படி, 2018ம் வருடத்தில் புதிய மாவட்ட தொழில் காரியாலயங்கள் இரண்டு நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. அவை பொலந்நறுவை, கதுறுவெல ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட பொலந்நறுவை மாவட்ட தொழில் காரியாலயம் இது 2018 மார்ச் 30 ம் திகதி திறந்த வைக்கப்பட்டதோடு சேவை மாவத்தை, குருநாகல் வீதி, புத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட புத்தளம் மாவட்ட தொழிற் காரியாலயம் 2018 செப்டம்பர் 06ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அதிகமான தோட்டத் தொழிலாளர் வசிக்கின்ற ஹட்டன் பிரதேசத்தில் தற்போது இருக்கும் மாவட்ட தொழில் காரியாலய கட்டிடம் தொழில் திணைக்களம் ஆரம்பித்ததோடு நிர்மாணிக்கப்பட்ட மிகவும் பழைமையான கட்டிடத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதால் சேவை பெறுநர்களுக்கு மிகச் சிறந்த சேவையினை வழங்கும் நோக்கில் புதிய மாவட்ட தொழில் காரியாலய கட்டிடத்திற்காக 2018 செப்டம்பர் 30ம் திகதி அடிக்கல் நடப்பட்டது. அதே போன்று நாஉல மாவட்ட தொழில் காரியாலயத்தில் இடவசதி போதாமையினால் வாடகைக் கட்டிடத்தில் நடத்திற் கொண்டு வருவதனால், மக்களுக்கு மிக வசதியாக வருகை தருவதற்காக ஏற்றவகையில் தம்புள்ள புதிய தொழில் காரியாலய கட்டிடம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.




படம் 8.1 பொலந்நறுவை மாவட்ட தொழில் காரியாலய கட்டிடம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் 2018.03.30ம் திகதி திறந்து வைக்கப்பட்டபோது.

### 8.2.3 விஷேட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல

#### 8.2.3.1 V2025 Enterpise Sri Lanka கண்காட்சி

நிதி அமைச்சின் எண்ணக்கருவின் படி 2018 ஆகஸ்ட் 17, 18 மற்றும் 19 ஆகிய மூன்று தினங்களிலும் மொனராகலையில் நடத்தப்பட்ட V2025 Enterpise Sri Lanka கண்காட்சியின் போது தொழில் திணைக்களத்தின் பொறுப்புக்கள் கண்காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்தக் கண்காட்சி சிற்றறைகளில் ஊழியர் சேமலாப நிதி நிலுவை காசோலைகளுக்காக சேவை பெறுநர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதோடு தொழில் பிணக்குகளுக்கு தீர்வு வழங்குவதற்காக தொழில் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அதே போன்று கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற சிறு கைத் தொழிலாளர்கள் மற்றும் தற்போது கைத்தொழிலை ஆரம்பித்துள்ள சிறு கைத் தொழிலாளர்களுக்கு கைத்தொழில் ரீதியான பாதுகாப்பு சம்மந்தமான ஆலோசனை வழங்கப்பட்டது.




நிழற்படம் 8.2 தொழில் திணைக்களத்தினால் காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சி சிற்றறைகளின் நிழல் படங்கள் சில

### 8.2.3.2 நடமாடும் நிகழ்ச்சித் திட்டம் - பதுளை

தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பதுளை மாவட்டத்தில் தொழிலாளர்களுக்கு அரச நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் சகலதும் ஒரே இடத்தில் வழங்கவதற்கு இடமளிப்பதற்காக தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் தலைமையில் 2018 செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய இரு தினங்கள் பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது அங்கு தொழில் திணைக்களத்தினால்

- ஊழியர் சேமலாப நிதிக்குரிய உறுப்பினர் இலக்கம் உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் தேசிய ஆளடையாள அட்டை இலக்கங்களுக்குரிய பிரச்சினைகளைத் தீர்த்தல்
- நிறுவனங்கள் மற்றும் சேவை ஊழியர்களை புதிதாக பதிதல்.
- ஊழியர் சேமலாப நிதிக்காக பதிவு செய்தல் மற்றும் ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமான ஏனைய விடயங்களுக்காக ஆலோசனை வழங்குதல்
- ஊழியர் சேமலாப நிதி நிலுவையினைப் பரிசீலனை செய்தல்
- ஊழியர் சேமலாப நிதியின் விரல் அடையாளத்திற்காக பதிவு செய்தல்
- கைத்தொழில் பிணக்குகள் சம்பந்தமாக தொழில் சங்கங்களுக்குரிய கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக முன் வைக்கப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தல் உரிய ஆலோசனை வழங்குதல்
- பெண்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமாக முறைப்பாடுகளை பாரமேற்றலும் மற்றும் முறைப்பாடுகளை விசாரித்தல்
- புதிய கைத்தொழில்களைப் பதிவு செய்தல்
- கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில் சுகாதாரம் சம்பந்தமாக தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல் ஆலோசனை வழங்குதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகிய அனேக நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.





நிழல்படம் 8.3 சேவை பெறுநர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளல்

## 8.2.4 நூலகம் மற்றும் தகவல் சேவை

வழங்குனர் மற்றும் ஊழியர் சமூகத்தனரின் முன்னேற்றத்திற்குரியவற்றை இனங்கண்டு தேவைகளையும் மற்றும் பொருத்தமான வகையில் விடயங்களுக்குரிய தகவல்களைத் சேகர்க்கவும் தேவைகளின் படி அந்த அறிவினை விபரிப்பதற்கு வழிகாட்டலும் திணைக்களத்தின் ஊழியர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தொழில் சம்பந்தமான அறிவினை விருத்தி செய்வதற்கும் தொழில் திணைக்களத்தினால் நூலகம் ஒன்று நடத்தப்படுகின்றது. அதன் படி, வாசகர்களின் அறிவு புரிந்துணர்வு மற்றும் இரசனைகளை உன்னித்து நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் சுமார் 173 வருடத்தினுள் புதிதாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 8.2.5 தொழில் அருங்காட்சியகம்

அவ்வாறு தொழில் திணைக்களத்தினால் தொழில் அருங்காட்சியகம் நடாத்தப்படுகின்ற தோடு அதில் இலங்கையின் ஆரம்பத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட வகையில் காட்சிப்படுத்துவதும் தொழில் மற்றும் அதற்குக் கட்டுப்பட்டுள்ள பழைய கட்டளைச் சட்டம் தொழில் மற்றும் அதனோடு இணைந்த ஆவணங்களும் பாதுகாக்கப்படுவதும் நடைபெறுகிறது.



நிழல்படம் 8.4 தொழில் அருங்காட்சியகம்

# 9. நிதி முகாமைத்துவம்

## 9.1 அறிமுகம்

தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகள் திருப்திகரமாக செயற்படுவதற்காகவும் எதிர்பார்க்கின்ற முடிவுகளை அடைவதற்காகவும் பௌதீக வளத்தினைப் போன்று நிதி வளமும் மிக அவசியமான சாதனமாகும். அதன்படி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வளம் அரச கொள்கைகளுக்கு ஏற்ப வினைத்திறமையுடனும் உச்சப்பயன் உள்ளதாகவும் மற்றும் திறமையானதாகவும் நிருவகிப்பது நிதிப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## 9.2 பொறுப்புகள்

திணைக்களத்தின் நிதி நிருவாகம் வினைத்திறனுடனும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதற்கு நிதிப்பிரிவு கீழ்க் காணும் வகையில் செயல்படுகிறது.

- திணைக்களைத்தின் பெறுகைத் திட்டம் தயாரித்தல் அதனை நடைமுறைப்படுத்தல்
- பெறுகை செயற்பாட்டின் மூலம் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் சரியான வகையில் பங்கிடப்படல்
- உப காரியாலயங்களுக்காக முற்பணம் வழங்குதல் மற்றும் அந்த காரியாலயங்களில் நிதி மேற்பார்வை
- மாதாந்த அரைவருட மற்றும் வருடாந்த கணக்கறிக்கைகள் தயாரித்தல் மற்றும் குறித்த தரப்பினருக்கு குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல்
- வெளித்தரப்பினரிடமிருந்து கிடைக்கின்ற சகல வரவு மற்றும் கொடுப்பனவுகளை சட்டப்படி நடைமுறைப்படுத்தல்
- திணைக்களத்திற்குரிய மூலதன சொத்துக்களை ஆய்வு செய்தலும் மற்றும் நீக்குதலும்.
- திணைக்களத்தின் உத்தியோகத்தரின் சம்பளம் கடன் முற்பணம் மற்றும் கொடுப்பனவு செலுத்துதல்

2018ம் வருடத்தில் திணைக்களத்திற்கு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீட்டில் 99.78□ வீதமும் மூலதன ஒதுக்கீடுகளில் 82.03□ மும் திணைக்களத்தினால் தம் செயற்பாடுகளுக்காக வினைத்திறனுடன் செலவளிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| மீண்டுவரும் செலவு | ஒதுக்கீடு (ரூபா) | 1,619,100,000 |
| | செலவு (ரூபா) | 1,614,473,945 |
| மூலதனச் செலவு | ஒதுக்கீடு (ரூபா) | 2,211,000,000 |
| | செலவு (ரூபா) | 1,813,415,443 |

அட்டவனை 9.1 2018ம் வருடத்தில் திணைக்களத்தின் முழு நிதி முன்னேற்றம்

| செலவு வகைகள் | 2018 வரவு செலவு ஒதுக்கீடு | 2018 உண்மையான செலவு | உண்மையான செலவு ஒதுக்கீடுகளின் வீதமாக |
|---|---|---|---|
| மூலதன சொத்துக்கள் மற்றும் புனரமைப்பினை முன்னேற்றுதல் | 58,400,000 | 47,610,510 | 81.5% |
| மூலதனச் சொத்துக்களை சுவீகரித்தல் | 2,133,950,000 | 1,748,948,052 | 82.0% |
| மொத்தம் | 2,192,350,000 | 1,796,558,562 | 81.9% |

அட்டவனை 9.2 2018ம் வருடத்தில் மூலதனச் செலவு வகைப்படுத்தல்

| செலவு வகைகள் | 2018 வரவு செலவு ஒதுக்கீடு | 2018 உண்மையான செலவு | உண்மையான செலவு ஒதுக்கீடுகளின் சதவீதம் |
|---|---|---|---|
| தனிநபர் சம்பளம் | 1,241,445,000 | 1,240,122,699 | 99.9% |
| போக்குவரத்து செலவு | 73,687,000 | 73,644,659 | 99.9% |
| வழங்கல் | 64,431,000 | 63,494,140 | 98.5% |
| பராமரித்தல் சேவை | 18,280,000 | 18,099,327 | 99.0% |

| | | | |
|---|---|---|---|
| நிர்மாண சேவை | 1,298,000 | 1,274,023 | 98.2% |
| வேறு சேவைகள் | 195,181,000 | 193,095,984 | 98.9% |
| மாற்றம் | 24,766,790 | 24,731,910 | 99.9% |
| வேறு | 11,210 | 11,202 | 99.9% |
| மொத்தம் | 1,619,100,000 | 1,614,473,945 | 99.7% |

அட்டவணை 9.3 2018ம் வருடத்தில் மீண்டு வரும் செலவு வகைப்படுத்தல்

# 10. புள்ளிவிபரச் செயற்பாடுகள

## 10.1 அறிமுகம்

இலங்கையின் தொழிற்துறையின் நோக்குநிலை சமபந்தமாக புரிந்துணர்வினை பெறுதல் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுத்தல் தற்போதைய தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டத்தினைத் திருத்த வேண்டிய தேவையினை இணங்காணுதல் மற்றும் துறை சம்மந்தமான எதிர்கால எதிர்வு கூறலுக்காக தொழில்துறையில் குறித்த தீர்வினை சேர்த்து பகுப்பாய்வு செய்வது அத்தியவசியமானதாகும். அந்த செயற்பாடுகளுக்காக திணைக்களப் பிரிவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 10.2 பொறுப்பு

அதன்படி புள்ளி விபரப் பிரிவினால் கீழ்காணும் விடயங்கள் நடைபெறுகிறது.

10.2.1 ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கின்ற நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில் ஆய்வு மற்றும் சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைக்காக வருடாந்தம் ஆய்வு செய்தல்

10.2.2 தொழில் துறைக்கு உரிய மாதாந்த ஆகக் குறைந்த சம்பள சுட்டியினைத் தயாரித்தலும் மற்றும் தொழில் புள்ளி விபர வெளியீட்டினை வருடாந்தம் வெளிப்படுத்தல்

10.2.3 தொழில் திணைக்களத்தின் குடிசன மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்களுக்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கும் தேவையான தொழில் புள்ளி விபரத்தினை வழங்குதல்

10.2.4 சர்வதேச தொழில் அமைப்பு உட்பட வேறு அமைப்புக்களுக்கும் தரவுகள் அவசியப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் ஆட்களுக்காக அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களை வழங்குதல்

10.2.5 தொழில் திணைக்களத்தில் தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள்

மேற்கூறிய செயற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழ் காணும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றது.

- தொழில் திணைக்களத்தில் மற்றும் தொழில் அமைச்சில் வரவுகள் மற்றும் தகவல்கள் அட்டவணைப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு விடயங்களில் அவசியமான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல
- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் மூலம் வருடாந்தம் வெளியிடுகின்ற இலங்கை ஊழியர் சஞ்சிகைக்காக தரவுகள் மற்றும் தகவல்கள் வெளியிடல்
- நாடு முழுதும் இயங்குகின்ற தொழில் காரியாலயங்களுக்குரிய பிரிவுகளை நாட்டின் நிருவாக அலகுகளின் படி அறிமுகப்படுத்தப்பட்டு அதன்படி நிலையான குறியீடுகளை அறிமுகப்படுத்தல்.
- சர்வதேச வகைப்படுத்தலின் படி இலங்கை கைத்தொழில் வகைப்படுத்தல் (SLSIC- Rev.4) மற்றும் தொழில் வகைப்படுத்தல் (SLSCO- 11) இன்படி இந்தப் பிரிவினால் நடைபெறுகின்ற ஆய்வுக்காக தகவல் சேகரித்தல் மற்றும் அந்த குறியீடுகளை அறிமுகப்படுத்தல்.

| நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்பாடுகள | | 2018ம் வருடத்தினுள் நடைபெற்ற கடமைகள் |
|---|---|---|
| 1. | வருடாந்த தொழில் அளவீடு 2017 | அச்சிடுதல் மற்றும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடுதல் |
| 2. | தொழில் அளவீடு 2018 | 2018 அளவீடுகளில் தரவினைப் பகுப்பாய்வு செய்து இறுதி அறிக்கை தயாரித்தல் |
| 3. | தொழிலாளரின் எண்ணிக்கை 2017 வருடாந்த வெளியீடு | அச்சிடுதல் மற்றும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடுதல |
| 4. | இலங்கை ஊழியர் சஞ்சிகை காலாண்டுக்குரிய வெளியீடு 2018 | வெளியீட்டுக்காக பிற நிறுவனங்களின் தரவுகளை ஒன்று சேர்த்து வழங்குதல் |
| 5. | பொது உழைப்பு மற்றும் வேலை செய்த மணிக்கணக்கு சம்மந்தமான மதிப்பீடு - 2017 | இறுதி அறிக்கை அச்சிடுதல் மற்றும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடுதல் |
| 6. | பொது உழைப்பு மற்றும் வேலை செய்த மணிக்கணக்கு சம்பந்தமான அவதானிப்பு -2018 | 2017 மார்ச் மற்றும் செப்டம்பர் அளவீட்டு நடவடிக்கைகளை முடிவு செய்தல் |
| 7. | குறைந்த சம்பள விகித சுட்டிகளை கணக்கிடுதல் | குறித்த காலத்திற்குரிய சம்பளக் கட்டுப்பாட்டு சபையின் படி மாதாந்த குறைந்த சம்களச் சுட்டியைக் கணக்கிட்டு அந்த தகவலை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் |

| | | |
|---|---|---|
| 8. | ஊழியர் சேமலாப நிதியைப் புதிதாக பதிவு செய்தலை கணனி மயப்படுத்தல் | இதற்காக தரவுகளைத் தயாரித்ததோடு தரவுகளை உள்ளடக்கியதாக இற்றைப்படுத்தும் விடயம் உள்ளடக்கப்படுகின்றது. |

அட்டவணை 10.1 நிறைவு செய்யப்பட்ட விடயங்கள்- 2018

# 11. திணைக்களத்தின் விடயங்களை மேற்பார்வை மூலம் இலக்குகளை நோக்கி நடைமுறைப்படுத்தல் மற்றும் மனிதவள அபிவிருத்தி

## 11.1 அறிமுகம்

திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டம், உபாய மார்க்கத் திட்டத்தினைத் தயாரித்தல். முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுக்காக மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரித்தல், தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகளினால் கோரப்படுகின்ற தரவுகள் மற்றும் அறிக்கைகளை வழங்குதல், திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வின் விடயப் பொறுப்புகளாகும்.

திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்டக் காரியாலயங்களின் விடயங்களில் மேற்பார்வை மற்றும் அதன் மூலம் வழங்கப்படுகின்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்து முன்னேற்றத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான சிபாரிசுகளை வழங்குதல் இந்தப் பிரிவு மேற்பார்வை விடயங்களையும் நிறைவேற்றுகிறது.

திணைக்களத்தின் சகல பணிக்குழுவுக்கு அவசியமான பயிற்சிகளை வழங்குதல், வெளியக நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பயிற்சி பாடநெறிக்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல், பல்கலைக்கழக பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புக்காக அவசியமான நிதி ஒதுக்கீட்டினை வழங்குவது மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்காக தேவையான தொடர்புடைய விடயங்களை நிறைவு செய்வது, இந்தப் பிரிவினால் நிறைவு செய்யப்படுகின்ற மனித வள அபிவிருத்தியின் பொறுப்பாகும்.

## 11.2 திணைக்களத்தின் விடயங்களை மேற்பார்வை செய்வதன் மூலம் இலக்கினை நோக்கி நடைமுறைப்படுத்தல்.

தொழில் திணைக்களத்தின் இலக்கினை நிறைவு செய்வதற்காக, சகல மாவட்ட மற்றும் உபகாரியாலயங்கள் மற்றும் திணைக்களத்தின் சகல பிரிவுகளும் நடைமுறைப்படுகின்ற விதத்தில் இலக்கினை நோக்கி செல்லுதல், மேற்பார்வை மூலம் திணைக்களத்தின் செயற்திறனை விருத்தி செய்தல், திணைக்களத்தினால் தேசிய பொருளாதார அபிவிருத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பினை மேம்படுத்துவது அத்தியவசியமான விடயமாகும். இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக மாவட்ட / உப தொழில் காரியாலயங்களின் மேற்பார்வைக்காக நடைபெற்ற செயற்பாடுகள் 2018ம் வருடத்தில் மிகச் சிறந்த முறையில் முறைமையான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதோடு, கீழக் காணும் விடயத்தில் கவனம் ஈர்க்கப்பட்டது.

- ஊழியர்களின் நியதிச்சட்ட உரிமைகளை உறுதிப்படுத்துவதும் கைத்தொழில் சமாதானத்தினை உருவாக்குவதற்காக நிறுவனம் (தொழிலாளர்) விசாரணை நடைமுறைகளில் வினைத்திறனை முன்னேற்றுதல்.
- மாவட்ட மற்றும் உப காரியாலயங்களில் விடயங்களை நிறைவேற்றும் போது நிகழுகின்ற தாமதங்களை இனங்கண்டு, அத்தாமதங்களைக் குறைப்பதன் மூலம் வினைத்திறமையுடனான பொதுமக்கள் சேவையினை வழங்குவதற்கு அக்காரியாலயங்களில் நடைமுறைப்படுத்தல்.
- வினைத்திறனுடன் தம் கடமைகளை நிறைவேற்றுகின்ற காரியாலயங்கள் மற்றும் உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிப்பதும் மேலும் விருத்தி செய்யக் கூடிய காரியாலயங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- தமது இலக்குகளை திறமையுடன் அடைவதற்கு எடுக்கப்பட்ட காரியாலயங்கள் அந்த திருப்திற்கு காரணமான சேவை நிபந்தனைகளை இணங்கண்டு, அவற்றினை ஏனைய காரியாலயங்களுக்கும் தெளிவு படுத்துவதன் மூலம் சகல காரியாலயங்களும் திணைக்களத்தின் இலக்கை அடையச் செய்தல்

### 11.2.1 மாவட்டம் / உப தொழிலாளர் காரியாலயங்களை மேற்பார்வை செய்யும் செயற்பாடு.

#### 11.2.1.1 கட்டம்

01. முன்னாயத்தம் செய்வதற்காக அறிவித்தல் கொடுத்தல் விசாரணை செய்வதற்கு இரண்டு கிழமைக்கு முதல் விசாரணைக்கு அவசியமான கோவைகள் அறிக்கைகளை தயார் செய்வதற்காக எழுத்து மூல ஆலோசனைகள் வழங்குதல் நடைறெும்.

02. மாவட்ட / உப காரியாலயங்கள் பரிசோதனை செய்தல் குறித்த தினத்தில் குறித்த காரியாலயத்தில் ஆயத்தமாகியுள்ள கோவைகள் மற்றும் அறிக்கைகளின் செயற்பாடுகளை விசாரணை செய்த குறித்த தரவுகளுக்கேற்ப தகவல்களைப் பெறுதல்.

03. பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் மற்றும் சிபாரிசுடன் அறிக்கைளை அனுப்புதல்.
விசாரணைகளின் போது சேகரித்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்து நடைமுறைப்படுத்துதலை வினைத்திறன் / வினைத்திறன் இன்மை என்பதனை சுட்டிக்காட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக சிபாரிசினைக் காட்ட அறிக்கை ஒன்றினை வலய பிரதி தொழில் ஆணையாளர், சகல தொழில் ஆணையாளர்களுக்கும் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகத்துக்கும் பிரதிகளுடன் மாவட்ட / உப தொழில் காரியாலயங்களுக்கும் அனுப்புதல்.

04. முன்னேற்றத்தினை வலய மட்டத்தில் மீளாய்வு செய்தல்.
சிபாரிசு அறிக்கையினை வழங்கி 2-3 மாதங்களுக்கிடையிலான காலத்தில் மாவட்ட / உப தொழிலாளர் காரியாலயங்களில் வழங்கப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிப்பதற்காக அந்த காரியாலயங்களுக்கு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் சந்தர்ப்பத்தினை வழங்குதல் அங்கே அந்தந்த காரியாலயங்களில் நிலவுகின்ற தற்போதைய நிகழ்வுகள் அந்தந்த உத்தியோகத்தர் சம்பந்தமாக மதிப்பீடு மற்றும் விருத்தி செய்யக்கூடிய பிரிவு சம்பந்தமான கருத்துக்களும் யோசனைகளும் நேரடியாக அந்தந்த காரியாலயங்களின் உதவி தொழில் ஆணையாளர் உட்படட உத்தியோகத்தர்களுக்கு முன்வைக்கப்படும்.

இந்தக் கூட்டம் மேலதிக தொழில் ஆணையாளர் நாயகங்கள் மற்றும் ஆணையாளர்களின் பங்களிப்புடன் ஆணையாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் வலய மட்டத்தில் நடத்தப்படும்.

### 11.2.1.2 மேற்பார்வை செய்யப்பட்ட செயற்பாடுகள்

01. தொழில் உத்தியோகத்தர்களின் வெளிக்கள நடவடிக்கைகள்
வெளிக்கள விசாரணை நடவடிக்கைகள் திட்டமிடல் மற்றும் அனுமதி பெறல், அதற்காக நிறுவனங்களைத் தெரிவு செய்யும் போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்கள் உதவி தொழில் ஆணையாளரால் வழங்குதல் வெளிக்கள விசாரணைகளின் தரத்தினை வகைப்படுத்தல் தொழில் உத்தியோகத்தர்களால் அறிக்கைகள் குறித்த திகதியில் வழங்குதல் மற்றும் அந்த அறிக்கைகளின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தும் வினைத்திறனும் மேற்பார்வை செய்யப்பட்டது.

02. ஊழியர் சேமலாப நிதியினை அறவிடும் போது பிரதிபயன் வழங்குதல்
வெளிக்கள விசாரணைகள் மற்றும் முறைப்பாட்டு விசாரணைகள் மூலம் கணக்கெடுக்கப்பட்ட செலுத்தப்படாத நிலுவை ஊழியர் சேமலாப நிதி அறவிடு நடவடிக்கைகள் துரிதப்படுத்தவும், மேற்பார்வை செயற்பாட்டின் போது நடவடிக்கை திட்டமிடப்பட்டது. அதன்படி அந்த நடவடிக்கைகள் கீழ் காணும் வகையில் நடைபெற்றது.

- பொது சாட்சி ஆவணங்களின் படி அறவிடுவதற்கு நடவடிக்கையினை மேற் கொள்ளுவதற்கரிய குறைவான கோவைகள்
  2008 - 2015 காலத்தினுள் அறவிடப்பட வேண்டிய, ஆனால் இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததும், கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அக் கொடுப்பனவ உறுதி செய்யப்படாத கோவைகளை பரிசீலனை செய்து அறவிடுதற்குள்ள கோவைகளை துரிதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளை விளக்கி ஆலோசனை வழங்கப்பட்டது.

- ஊழியர் சேமலாப நிதி மேற்பார்வை முறைமையின் படி அறவிடுதல்
  2015 ம் வருடத்தில் இருந்து அறவீடு செய்யும் நடவடிக்கை முறைமை மூலம் மேற்பார்வை செய்யப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்யப்படாத மற்றும் முழுப் பணமும் செலுத்தப்படாத, அறவிடும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள, நிலுவை அறவீட்டு நிலைமையினை பரீசீலனை செய்த முறைமையினை இற்றைப்படுத்துவதன் மூலம், அறவிடுவதற்கு இருந்த கோவைகள் சம்பந்தமாக மாத்திரம் நேரடியாக மேற்பார்வை செய்வதன் மூலம், அறவிடும் நடவடிக்கைகள் வினைத்திறனுடையதாவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

  நிலுவையான ஊழியர் சேமலாப நிதியினை அறவிடுவதற்கு அறிவிப்பு அனுப்புவதற்கு எடுக்கும் கால எல்லை மேற்பார்வை முறைமையின் படி பெற்றுக் கொண்டு பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் காரியாலய மட்டத்தில் தாமதத்திற்கான காரணத்தை இனங்கண்டு அவற்றினை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

  நிலுவை கணக்கெடுத்தல் நடைபெற்றாலும் இதுவரை அறிவித்தல் அனுப்பப்படாமைக்கான காரணத்தினைப் பரிசீலித்து அந்த நிலுவைப் பணம் அறவிடுவதற்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டது.

- ஊழியர் சேமலாப நிதி பிரதிபயன் கொடுப்பனவு

  பிரதிபயன் கொடுப்பனவுக்காக 03 மாத காலத்தினுள் பாரமேற்கப்பட்டுள்ள கோவைகளின் அளவு மற்றும் அதற்குச் செலவிடப்பட்டுள்ள காலத்தினை மாதாந்தம் பகுப்பாய்வு செய்து, துரிதமாக பிரதிபயன் செலுத்துவதற்கு காரணங்களை இனங்கண்டு வினைத்திறனுடன் பிரதிபயன் செலுத்தும் நடைமுறைகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது.

- மனு ஆவணங்கள் மற்றும் முறைப்பாட்டு மொடியுலர்

  அந்தந்த மாவட்ட மற்றும் உப காரியாலயங்களுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளை தீர்க்கும் செயற்பாடுகள் மற்றும் தீர்க்கும் செயற்பாடுகள் தாமதமாகியுள்ள கோவை எண்ணிக்கையினை அறிந்து கொண்டு அதற்காக உடனடியாக நடவடிக்கையினை மேற் கொள்ளல் , உரிய ஆலோசனை மற்றும் சிபாரிசு வழங்குதல்.

மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலயங்களுக்கு டுஐளுயு (Labour Inspection System Application) முறைமையான முறைப்பாடுகள் மாதிரிகள் மூலம் முறைப்பாடுகளை முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்பார்வைக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் செய்யப்பட்டன. அங்கு LISA முறைப்பாட்டு மாதிரியினை பாவித்து முறைப்பாட்டினால் சரியான வகையில் செயற்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு முகாமைத்துவப்படுத்தும் நடைபெறுகின்ற காரியாலயங்களை இனங்கண்டதோடு அவ்வாறில்லாத காரியாலயங்களுக்குத் தேவையான ஆலோசனைகள், பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன

- திறந்த பிடியாணையுடன் கூடிய வழக்குகள் மற்றும் செயலிழந்த வழக்குகள்

  மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலயங்களில் பலவருடங்களாக செயலிழந்த திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலுள்ள வழக்குகளைச் செயல்படச் செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக வலயப் பொறுப்பு சட்ட உத்தியோகத்தரினதும் ஆலோசனையின் படி நடவடிக்கையினை மேற் கொண்டு செயற்படுத்த முடியாத கோவைகள் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகள் பிரிவிற்கு அனுப்புவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டது. அவ்வாறு நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்யப்பட்டது.

- பொதுவைப்புக் கணக்கு

  முறைப்பாடுகள் மற்றும் வழக்குகள் மூலம் அறவிடப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஏனைய நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் ஊழியர்களுக்கு வழங்கப்படாததும் மேலும் இலங்கை மத்திய வங்கியில் கணக்கில் இடப்படாததும் பொது வைப்புக் கணக்கில் சேர்த்து வைக்கப்பட்டிருந்ததோடு, அப்பணத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புவதற்கும் மற்றும் குறித்த பயனாளிகளுக்கு செலுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள மேற்பார்வை செய்வதன் மூலம், இந்த வருடத்தில் வைப்பிலிடப்படும் பணம் தாமதிக்காது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை செய்வதன் மூலம் பயனாளிகளுக்கு பணக் கொடுப்பனவு நடவடிக்கையினை வினைத்திறனூடாக செய்வதற்கு ஆலோசனை வழங்கி நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்யப்பட்டது.

### 11.2.1.3 மேற்பார்வையின் படி எஞ்சியுள்ள இலக்கினைத் தயாரித்தல்

இந்த மேற்பார்வை செயன் முறையின் படி சகல மாவட்டங்கள் மற்றும் உப தொழில் காரியாலயங்களை பரிசோதனை செய்து அந்தந்த காரியாலயங்களின் முன்னேற்றம் சம்பந்தமாக பகுப்பாய்வு அறிக்கையினை முன்வைப்பதன் பின்னர் வலய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த மீளாய்வு முனனேற்ற கூட்டங்களில், ஒரு காரியாலயத்தினால் ஒரு விடயத்திற்காக உயர்ந்த முன்னேற்ற மட்டத்தினை அடைந்திருந்தாலும் மேலும் விடயத்திற்காக எதிர்பார்த்த மட்டத்தின் முன்னேற்றத்தினை அடையவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கூறிய சகல விடயங்கள் சம்மந்தமாகவும் இலக்கினைத் தயாரித்து அந்த இலக்கினை நோக்கி 2019ம் வருடத்தில் அடைவதற்காக, மாவட்ட மற்றும் உப தொழில் காரியாலய நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக வலய பொறுப்பு பிரதி தொழில் ஆணையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. அதன்படி 2019ம் வருடத்தில் சகல காரியாலயங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அந்தந்த இலக்கினை அடைந்துள்ளார்களா? என்பதனையும் அதன்படி செயற்திறன் அளவீடு சம்பந்தமாக கவனத்தை செலுத்துவதற்கு முடியும்.

## 11.3 மனிதவள அபிவிருத்தி

திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைகளின் தரம் தீர்மானிக்கப்படுவது திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தமது பொறுப்பு சம்பந்தமாக உள்ள அறிவு மற்றும் செயல்முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புரிந்துணர்வின் பேரிலாகும். ஆதலால் திணைக்களத்தின் சகல மட்டங்களிலும் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அவசியப்படுகின்ற அறிவும் புதிய முறையில் நிரந்தரமாக அறிவூட்டல் செயற்பாட்டை நடத்துவதற்கு திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் ஏனைய பொறுப்பாகும்.

திணைக்களத்தினால் பயிற்சி வழங்கம்போது உத்தியோகத்தர்களின் பயிற்சியின் தேவையினை இனம் கண்டு அதன்படி வளவாளர்களைக் கொண்டு பயிற்சி வழங்குவதன் மூலம் வேறு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக கலந்து கொள்வதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடு வழங்குவது போல வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடு மற்றும் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பயிற்சி விடயம் நடைபெறும்.

அதன்படி பயிற்சிக்காக கவனிக்கப்பட வேண்டிய பிரதான பாடநெறிகள் கீழ்க் கண்ட வகையிலாகும்.

1. உத்தியோகத்தர்களால் கோரும் போது கற்பதற்கு தகைமையுடைய பல்கலைக்கழகம், சான்றிதழ் பகுதிகள், டிப்ளோமா, ஆரம்ப மட்டம் பட்டப்பின்படிப்பு கற்கை நெறி

2. வேறு நிறுவனங்களின் மூலம் நடைபெறும் தொழில் முற்போக்கான பாடநெறி

3. பயிற்சித் தேவையினை இனம் காண்பதன் பேரில் பலவகையான மட்டங்களில் உத்தியோகத்தர்களுக்காக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யும் பயிற்சிகள்.

4. வெளிநாட்டுப் பயிற்சி

மேற்படி 1ம் 2ம் பாடநெறிக்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும்போது, அப்பாடநெறி தொழில் முற்போக்கினைக் காட்டும் பங்களிப்பு மற்றும் கிடைத்துள்ள நிதி ஒதுக்கீட்டு எல்லையினுள் அந்த கற்கை நெறியினைப் பின்பற்றுவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன.

இதனைவிட வலய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் பிரதி மற்றும் உதவி தொழில் ஆணையாளர்கள் கூட்டங்கள் மூலமும் வேலை வழங்கும் போது செயன் முறையினை நடைமுறைப்படுத்தும் வகையில் சம்பந்தமான அறிவினை இற்றைப்படுத்தவும் மற்றும் விடயங்களை நிறைவேற்றும் போது உத்தியோகத்தர்கள் முகம் கொடுக்கும் செயன் முறைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எப்போதும் அவசியமான அறிவினை வழங்குவதும் நடைபெற்றது




நிழற்படம் 11.1 திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

# நடைபெற்ற பயிற்சி செயற் திட்டம் - 2018

| | நிகழ்ச்சி திட்டத்தின் பெயர் | நிறுவனம் | உத்தியோகத்தர் குழாம் | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை | செலவு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| பட்டப் பின் படிப்பு | சட்டம் | ICBT CAMPUS | சட்ட அதிகாரி | 1 | 217,000.00 | 12 மணித்தியா லயத்திற்கு மேல் |
| | பொருளியல் விஞ்ஞானம் | களனி பல்கலைக்கழகம்,கொழும்பு பல்கலைக்கழகம் | தொ.ஆ,கணக்காளர்,பி.தொ.ஆ, உ.தொ.ஆ | 11 | 441,000.00 | |
| | சமூக விஞ்ஞானம் | களனி பல்கலைக்கழகம் | உ.தொ.ஆ,தொ.உ. | 9 | 300,000.00 | |
| | தொழில் உறவுகள் மற்றும் மனித வள முகாமைத்துவம் | கொழும்பு பல்கலைக்கழகம் | தொ.உ,சிரேஷ்ட தொ.உ | 5 | 500,000.00 | |
| | வியாபார நிர்வாகம் | வயம்ப பல்கலைக்கழகம் | உ.தொ.ஆ | 1 | 100,000.00 | |
| | | | | | **1,558,000.00** | |
| பட்டப்படிப்பு | சட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | உ.தொ.ஆ, தொ.உ | 13 | 176,237.00 | 12 மணிமேல |
| டிப்ளோமா | ஆங்கிலம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், **Miloda Academy of Financial Study,** ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | உ.தொ.ஆ, தொ.உ | 4 | 115,000.00 | 12 மணிமேல |
| | ஒப்பந்த முகாமைத்துவம், பெறுகை முகாமைத்துவம் | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை | உ.தொ.ஆ | 1 | 90,000.00 | |
| | தொழில் சட்டம் மற்றும் தொழிலாளர்கள் உறவுகள் | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | தொ.உ | 2 | 154,000.00 | |
| | இயந்திரவியல் பொறியியலாளர் திட்டமிடல் | இலங்கை பொறியியலாளர் நிறுவனம் | இயந்திரவியல் பொறியியலாளர் | 1 | 39,000.00 | |
| | | | | | **398,000.00** | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சான்றிதழ் பாடநெறி | Speedcraft Training with toastmasters | இலங்கை மன்றக் கல்லூரி | மே.தொ.ஆ.நாயகம் | 1 | 15,000.00 | 12 மணிமேல் |
| | Advanced Administration & Security | Winsys Networks | அரச. மு.உ | 2 | 160,000.00 | |
| | Active & Passive Fire Protection Systems in High Rise Buildings | நிர்மாண மற்றும் இயந்திர உபகரண பயிற்சி நிலையம் | தொழிநுட்ப உத்தியோகத்தர் | 1 | 10,000.00 | |
| | தரவு பகுப்பாய்வு | இலங்கை மன்றக் கல்லூரி | உதவி பணிப்பாளர் / தொ.உ | 2 | 40,000.00 | |
| | பெறுகை செயற்பாடு | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | கணக்காளர் அ.மு.உ | 2 | 16,000.00 | |
| | අභ්‍යන්තර විගණන ක්‍රියාවලිය | தேசிய தொழில் கல்வி நிறவனம | ஆர.ம.உ | 1 | 6,000.00 | |
| | භාණ්ඩ සමීක්ෂණ ක්‍රියාවලිය | தேசிய தொழில் கல்வி நிறவனம் | ஆர.ம.உ | 1 | 8,000.00 | |
| | பொது ஆங்கிலமீ | British Council | பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் | 1 | 44,500.00 | |
| | கனிணி சான்றிதழ் பாடநெறி | கொழும்பு பல்கலைக்கழகம் - மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவம் | சட்ட உத்தியோதகத்தர் / அ.மு.உ / ஊ.சே.நி எழுதுவினைஞர | 3 | 75,000.00 | |
| | உற்பத்தித் திறன் சேவைக்காக வினைத்துறனுடனான பெண் செயலாளர் | இலங்கை மன்றக் கல்லூரி | அ.மு.உ | 1 | 10,000.00 | |
| | அரச நிதி முகாமைத்துவத்தினுள் பெறுகை செயற்பாடு | இலங்கை மன்றக் கல்லூரி | அ.மு.உ | 1 | 6,500.00 | |
| | அரச உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் மற்றும் பதிவேடுகள் முகாமைத்துவம் | தொழில் அபிவிருத்தி நிறுவனம் | அ.மு.உ | 2 | 25,000.00 | |
| | ஆரம்ப விசாரணை | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | பி.தொ.ஆ / உ.தொ.ஆ | 6 | 36,000.00 | |
| | ஒழுக்காற்று செயன்முறை | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | பி.தொ.ஆ / உ.தொ.ஆ | 4 | 32,000.00 | |
| | கடிதக் கோவை முறை | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | அ.மு.உ | 1 | 3,000.00 | 12 மணிக்கு குறைவாக |
| | ஓய்வூதிய சம்பளம் சம்பந்தமான செயலமர்வு | திறன் அபிவிருத்தி நிதியம் | அ.மு.உ | 2 | 10,000.00 | |
| | தேசிய கணக்காய்வு சட்டம் சம்பந்தமான மாநாடு | இலங்கை மன்றக் கல்லூரி | மே.தொ.ஆ.நா / பிராதன கணக்காளர் / தொ ஆ / குடிசார் இயந்திரவியல் பொறியியலாளர் / பிரதான உள்ளக கணக்காய்வாளர் | 11 | 22,000.00 | |
| | மனஅழுத்த முகாமைத்துவம் | இலங்கை மன்றக் கல்லூரி | தொ.ஆ. / பி.தொ.ஆ / கை.ப.பொறியியலாளர் / அ.தொ.ஆ / பதவிநிலை தொ.அ.உ / அ.மு.உ | 8 | 28,000.00 | |
| | | | | | **547,000.00** | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தி.ஆ.ப. வெ பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | அரச கரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவற்கு என தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி – 1இ2 | தொழில் திணைக்களம் | கா.உ / சாரதிகள் | 300 | 316,600.00 | 12 மணிமேல் |
| | புதிய அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | தொழில் திணைக்களம் | அ.மு.உ | 266 | 101,401.00 | |
| | பெறுகை செயற்பாடு சம்பந்தமான இருநாட்கள் பயிற்சி செயலமர்வு | தொழில் திணைக்களம் | தொ.ஆ பிரதான கணக்காளர் / கணக்காளர் / பொறியியலாளர / பி.தொ அ உ.தொ.ஆ நிர்வாக உத்தியோகத்தர் / தகவல் தொழில் நட்ப உத்தியோகத்தர் சிரேʼட ஆராய்ச்சி உத்தியோகத்தர் அ.மு.உ.உத்தியோகத்தர | 62 | 104,185.00 | |
| | காரியாலய உதலியாளர்களின் சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | தொழில் திணைக்களம் | கா.உ. | 35 | 45,750.00 | |
| | தொழில் சுகாதார மற்றும் கைத்தொழில் பாதுகாப்பு சம்மந்தமான தொழில் உத்தியோகத்தர்களுக்கான இரு நாட்கள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | அதுருகிரிய தேசிய தோட்டத்துறை முகாமைத்துவ நிறுவனம் | தொழில் உத்தியோகத்தர் | 100 | 331,702.80 | |
| | ஊ.சேநி மற்றும் LISA சம்மந்தமான பயிற்சி செயலமர்வு | தொழில் திணைக்களம் | அ.மு.உ | 240 | 245,385.00 | |
| | தொழில் சட்டம் சம்மந்தமான இரு நாட்கள் பயிற்சி செயலமர்வு | இலங்கை மன்றக் கல்லூரி | பி.தொ.ஆ / உ.தொ.ஆ சட்ட உத்தியோகத்தர் / தொழில் உத்தியோகத்தர் | 200 | 1,518,785.50 | |
| | CLEAR - சிறுவர் முறைப்பாடுகள் சம்மந்தமாக LISA நிகழ்ச்சித் திட்டத்திக்கு உள்ளீர்க்கப்படும் முறையினை அறிமுகப்படுத்தலும் அது சம்மந்தமாக பயிலுனர்களுக்கு பயிற்சி அளித்தலும் | பிரதான காரியாலயம் LISA கணனி பிரிவு | பி.தொ.ஆ / உ.தொ.ஆ பி.தொஆ. தொ.உ த.தொ.உ. / அ.மு.உ.உத்தியோகத்தர் | 10 | 1950.00 | 12 மணித்தியாலயத்திற்கு குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | CLEAR – சிறுவர் முறைப்பாடுகள் சம்மந்தமாக LISA நிகழ்ச்சித்திட்டத்திற்கு உட்படுத்தும் செயற்பாட்டினை அறிமுகப்படுத்துதத் டுஜளுயு நிகழ்ச்சித் திட்டத்தின் பாவனையின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் வகைகள் சம்மந்தமாக அறிவுறுத்தல் செய்தல் (தெற்கு, வடக்குமத்திய, சபரகமுவ, மேற்கு 01, மத்திய, வடக்கு கிழக்கு, மேற்கு 2,3, வடமேற்கு, ஊவா வலயங்களுக்கு உரிய காரியாலயங்களுக்கு முகாமைத்துவ உதவியாளர்கள் | பிரதான காரியாலயம் LISA கணனி பிரிவு | அ.மு.உ.உத்தியோகத்தர் | 99 | 69975.00 | |
| | | | | | **2735734.30** | |
| | | | | **1,698** | **5,414,971.30** | |

அட்டவணை 11.1 நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2018

| செலவுத் தலைப்பு | 2018ம் வருடத்திற்கான ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவு | 2018.12.31 அன்று நிலுவை | செலவு ஒதுக்கீட்டின் விகிதம் % |
|---|---|---|---|---|
| 221-01-01-2401 | 5,000,000.00 | 4,875,205.52 | 124,794.48 | 97.50 |
| 221-02-02-2401 | 150,000.00 | 55,000.00 | 95,000.00 | 36.67 |
| 221-02-03-2401 | 500,000.00 | 169,100.00 | 330,900.00 | 33.82 |
| 221-02-04-2401 | 3,000,000.00 | 2,973,139.30 | 26,860.70 | 99.10 |
| **மொத்தம** | **8,650,000.00** | **8,072,444.82** | **577,555.18** | **93.32** |

அட்டவணை 11.2 கொள்திறன் விருத்தி செயற்பாட்டுக்காக 2018.12.31ம் திகதியில் முழு செலவு

## 12. சேவையை வழங்குவதற்காக தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்

சேவை பெறுநர்களுக்கு சேவை வழங்கும் தகவல் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி கணினி முறைமையில் அந்த சேவையினை வழங்வேதன் மூலம் சேவை வழங்கும் வசதியினை அதிகரிக்கச் செய்ய திணைக்களத்தால் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. இதுவரை ஊழியர் சேமலாப நிதியினை நடைமுறைப்படுத்துவதற்காக கணினி முறைமையைப் பயன்படுத்துவதோடு நிவன (தொழிலாளர்) விசாரணைகள் தரவுகள் சேகரித்தல், அதன்மூலம் நிறுவன விசாரணைகளை செயற்பாட்டு மட்டத்தில் ஆய்வு செய்து மற்றும் நடத்தப்பட வேண்டிய முன்னேற்றம் மற்றும் முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதற்காக LISA (Labour Inspection System Application) தரவு முறைமை 2015 வருடத்திலிருந்து நடைமுறைப்படுவதோடு தொடர்ந்து முன்னேற்ற வேண்டியுள்ளது.

இந்தக் கணினி முறைமை இரண்டும் திணைக்களத்தின் உள்ளக செயற்பாட்டினை இலகுபடுத்தவதற்காக தயாரித்து இருந்தும் சேவை பெறுநருடன் நேரடி தொடர்பினை ஏற்படுத்துவதற்காகவும் முன்னேற்ற வேண்டியுள்ளது. அதன் மூலம் தமது நடமாடும் தொலைபேசி மூலம் தமது சேவையின் சேவையினை ஏற்பாடு செய்வதற்காக தொடர்புபடுத்துவதற்கு அவசியமான வசதிகளை ஆரம்பிக்கும் நோக்கத்துடன் ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.

இது தவிர பொதுமக்களுக்கு சேவையினைப் பெறுவதற்கு அவசியமான விண்ணப்பப்பத்திரங்களின் மாதிரிகள் மற்றும் சட்டங்கள் தொழில் வழங்குநரால் கவனம் செலுத்த வேண்டிய சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபை தீர்மானம் ஆகிய முக்கியமான ஆவணங்கள் தரவிறக்கம் செய்யும் வகையில் திணைக்கள இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி 2018ம் வருடத்தில் இணையத்தளத்தின் மூலம் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைகள் கீழ் கண்டவாறாகும்.

| தொ.இ | திகதி | சேவை | இலக்கு குழு |
|---|---|---|---|
| 1 | 2018.08.06 | சம்பளக் கட்டுப்பாட்டாளர் சபைத் தீர்மானங்கள் மும்மொழிகளிலும் தரவிறக்கம் செய்யக் கூடிய வகையில் பிரசுரித்தல் | வெளியக சேவை பெறுநர் |
| 2 | 2018.10.02 | சகல சேவைகளுக்குமாக ஆட்சேர்ப்பு திட்டத்தினைப் பிரசுரி-த்தல் | உள்ளக மற்றும் வெளியக சேவை பெறுநர் |
| 3 | 2018.10.18 | குறித்த தொழில் காரியலயத்தினை கண்டு பிடிக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் அடையாளமிடுவதன் மூலம் தேடி-க்கண்டு பிடிக்கும் வசதிகளை அளித்தல் | வெளியக சேவை பெறுநர் |
| 4 | 2018.12.02 | சகல மாதிரிப் படிவங்களும் (வீட்டுக்கடன் மாதிரி படிவங்கள் உட்பட) மும்மாழிகளிலும் தரவிறக்கத் தக்கவாறு பிரசுரித்தல் | வெளியக சேவை பெறுநர் |
| 5 | 2018.12.12 | சகல புள்ளி விபரத்தகவல்கள் (தொழில் புள்ளி விபரங்கள், வருடாந்த தொழில் ஆய்வுகள் ஆகியன ) மும் மொழிகளிலும் தரவிறக்கம் செய்ய பிரசுரித்தல் | உள்ளக மற்றும் வெளியக சேவை பெறுநர் |
| 6 | 2018 வருடம் முழுவதும | கீழ் காணும் தகவல்களை இற்றைப்படுத்தல்<br>• பிரதான காரியாலயங்களின் பிரிவுகளின் மூலம் வழங்கும் சேவைகள்<br>• மும்மொழிகளிலும் கிடைக்கின்ற வினாக்களுக்காக மும்மொழிகளிலும் பதில<br>• சகல தொழில் காரியாலயங்களினதும் தொலைபேசி அழைப்பு விபரங்கள் மற்றும் கூகுள் படம் மூலம் காரியாலயம் அமைந்துள்ள இடத்தினை கண்டுபிடிக்கும் வசதிகள | வெளியக சேவை பெறுநர் |
| 7 | 2018 வருடம் முழுவதும | தகவல்கள் வழங்குதல்<br>• பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• சிறந்த / மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைத் தகவல்கள் மற்றும் முடிவுகள்<br>• புலமைப்பரிசில்<br>• விலைமனுக் கோரல்<br>• வேறு விேட சந்தர்ப்பங்கள் | உள்ளக மற்றும் வெளியக சேவை பெறுநர் |

அட்டவணை 11.3 வலைத்தளத்தின் ஊடாக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைகள் - 2018

# 13. உள்ளக கணக்காய்வு

ஏனைய சகல அரச நிறுவனங்களைப் போன்றே தொழில் திணைக்களத்தினாலும் தமது சகல செயற்பாடுகளும் நிதிப்பிரமாணங்கள் அரசினால் காலத்திற்கு காலம் வழங்கும் சுற்றிக்கைகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் படி நடைபெற வேண்டும். அதன்படி அந்த நடவடிக்கைகளில் வளங்களை மிகவும் உயர் மட்டத்தில் பயன்படுத்தி மிகத் தெளிவாகத் தெரியக்கூடிய தன்மை கொண்டதும், உயர்மட்டத்தில் நடைபெறுகிறதா என்பதனை மேற்பார்வை செய்வதற்காக தொழில் ஆணையாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

2018ம் வருடத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் செயற்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே உள்ளன.

- 2018ம் வருடத்திற்குரியதாக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின் படி மாவட்ட தொழில் காரியாலயங்கள் 7 மற்றும் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவு, ஊழியர் சேமலாப நிதி களஞ்சியம், (வழங்கல் பிரிவு) பரிசோதனை செய்த கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

- அரசின் கணக்காய்வு பிரிவின் மூலம் திணைக்களத்தின் பல்வகையான காரியாலயங்களைப் பரிசோதனை செய்து வழங்கப்பட்டிருந்த கணக்காய்வு விசாரணைகள் 26 ற்காக பதில் அளிக்கப்பட்டதோடு அதற்கு 2017ம் வருடத்துக்குரிய ஊழியர் சேமலாப நிதியின் மற்றும் திணைக்களத்தின் விடயங்கள் சம்மந்தமாக முன்வைக்கப்பட்டிருந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளின் வரைபுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- வருடத்தினுள் காலாண்டு வீதம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் 4 நடைபெற்றன.

**Labour Secretariat**
**Narahenpita, Colombo 05**
**Phone : (+94)11 2581142 / (+94)11 2581143**
**Fax : (+94)11 2581145**
**Email : contacts@labourdept.gov.lk**



PRINTEC | 0112 815 816